ANNAMALAI UNIVERSITY TAMIL SERIES No. 5

SILASRI KASIVASI
SWAMINATHA THAMBIRAN SWAMIGAL AVERGAL
OF TIRUPPANANDAL MUTT ENDOWMENT PUBLICATIONS II.

தேவாரத் திருமுறை

தி. பொ. பழனியப்ப பிள்ளை, B. O. L.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால்
வெளியிடப்படுவது
1943—44

தேவாரத் திருமுறை

பதிப்பாசிரியர் :

வித்வான்

இ. பொ. பழனியப்ப பிள்ளை, B. O. L.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால்

வெளியிடப்படுவது

1943—44

From Page 1 to 134 Printed at De Nobili Press, Madura
The Rest Printed at The Trichinopoly United Printers Ltd., Trichinopoly



ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி

ஐந்தாம் ஜார்ஜு மன்னர் ஞாபகார்த்தத் தமிழ்ப் பரிசு ரூ. 1000, ஆயிரம்

———:———

நம்முடைய அன்பார்ந்த அரசரும், சக்கரவர்த்தியுமான ஐந்தாம் ஜார்ஜு மன்னரவர்களுடைய உதார குணத்தையும், தயாள சிந்தையையும், இந்தியாவின் பாலிருந்த அன்பையும் கருதி அவர்களுடைய இனிய ஞாபகம் என்றும் குன்று திருந்துவரும் பொருட்டு இந்தப் பரிசு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிக ளவர்களால் ஏற்படுத்தப் பெற்றது. இந்தப் பரிசின் நோக்கம் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதரவு அளிப்பதே யாகும். "ஐந்தாம் ஜார்ஜு மன்னர் ஞாபகார்த்தத் தமிழ்ப் பரிசு" என இது வழங்கப்பெறும்.

இந்தப் பரிசுக்குரிய மூல தனமாக இப்பொழுது உள்ள தொகை முப்பத் தையாயிர ரூபாய் (35,000). இத் தொகை நூற்றுக்கு வருஷத்துக்கு 3½ வட்டியுள்ள கால வரையறை யில்லாத சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. இதிலிருந்து வருஷந் தோறும் கிடைக்கும் வட்டியிலிருந்து ரூபாய் ஆயிரம் (ரூ. 1000) வருஷந் தோறும் ரொக்கப் பரிசாக அளிக்கப் பெறும். 1935—36ஆம் வருஷத்துச் சென்னை சர்வ கலாசாலைக் காலண்டர் தொகுதி 1, பகுதி 2ல் கண்ட 7-D விதிப்படி யமைந்த தனித்தமிழ் வித்துவான் பட்டத்துக் குரிய முடிவுப் பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறுவோர் இப்பரிசைப் பெறும் தகுதி யுடையோ ராவர். மூல தனத்தின் வட்டியில் இவ்வாறு செலவானது போக வருஷந் தோறும் எஞ்சும் தொகை மூல தனம் லக்ஷம் ரூபாய் (ரூ. 100,000)

ஆகும் வரையில் அதனோடு சேர்க்கப்படும். அதன்பின் மூல தனத்திற்குக் கிடைக்கும் வட்டி முழுதும் வருஷந் தோறும் பரிசுத் தொகையாக உரியவருக்கு அளிக்கப்படும்.

பரிசளிப்பதற் குரிய விதிகளும் நிபந்தனைகளும் வருமாறு :—

1. இப்பரிசு ஆண்பாலார் பெண்பாலா ராகிய யாவ ருக்கும் ஜாதி மத வேறுபாடு கருதாமல் அளித்தற் குரியது.

2. ஓரியண்டல் பட்டப் பரீக்ஷைகளுள் தனித்தமிழ் வித்துவான் பரீக்ஷையில் தேர்ச்சி பெறுவோர்களுள் முடிவுப் பரிட்சையில் முதல் வகுப்பில் முதல்வராக வருபவர் முதல் முறையிலேயே தேறினவ ராயின் அவருக்கு இப் பரிசு அளிக்கப் பெறும்.

எந்த வருஷத்திலாயினும், இருவரேனும் இரு வருக்கு மேற்பட்டவரேனும் பரிசுக் குரிய தகுதியைப் பெற்றால் பிரிலிமினரிப் பரீக்ஷையில் பெற்ற அம்சங்களை யும் (Marks) சேர்த்துப் பார்த்து மொத்தத்தில் அதிக அம்சம் பெற்றவருக்கு இப்பரிசு அளிக்கப்படும். அவ் வாறு செய்வதிலும் சிக்கல் நேரு மாயின், தேர்ச்சி பெற்ற வர்களுடைய ஆங்கிலப் பயிற்சியையும் வயதையும் ஆராய்ந்து, அவர்களுள் அதிக ஆங்கிலப் பயிற்சி யுடைய வருக்கும், குறைந்த வயதுடையவருக்கும் பரிசைக் கொடுக்க ஸிண்டிகேட் சபையார் தீர்மானிப்பார்கள்.

3. ஸெனெட் சபைக் கூட்ட மொன்றில் இந்தப் பரிசு உரியவருக்கு வழங்கப்பெறும். எந்த வருஷத்தி லேனும் பரிசுக்கு உரியவர் நேரில் வந்து பரிசைப் பெற் றுக் கொள்ள முடியாமற் போனால் ஸிண்டிகேட் சபையார் பரிசுத் தொகையை அவருக்கு அனுப்புவதற் குரிய ஏற் பாட்டைச் செய்வார்கள். பரிசு வழங்குவதற்கு முன்

அப் பரிசுக் குரியவர் இறக்கும்படி நேர்ந்தால் அத் தொகை சட்டப்படி அவருடைய வார்சாக இருப்பவரிடம் சேர்ப்பிக்கப்படும்.

4. இப்பரிசுத் தொகை பணமாக வேனும் செக்காக வேனும் அளிக்கப்பெறும். இந்தப் பரிசுத் தொகை எந்தக் காரணத்தைக் கொண்டாவது பகுக்கவோ குறைக்கவோ படாது. எந்த ஒரு வருஷத்திலேனும் அல்லது தொடர்ந்து பல வருஷங்களிலேனும் பரிசு கொடுக்கப்படாமல் இருந்தால் அங்ஙனம் கொடுக்கப்படாமல் இருந்த பரிசுத் தொகை முழுவதும் சேர்த்து, எந்த வருஷத்தில் பரிசு வழங்கப் படுகிறதோ அவ்வருஷத்தின் பரிசுக் குரியவருக்கே அளிக்கப் பெறும். பரிசுத் தொகைக்கு மேலே கிடைக்கும் தொகைதான் மூல தனத்தோடு சேர்க்கப்படும்.

5. வருஷந்தோறும் பரிசளிப்பு விபரம், பரிசு பெறுபவரின் பெயர், விலாசம் ஆகியவற்றோடு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்களுக்கும், அவர்களுக்குப்பின் வரும் உரிமை யுள்ளவர்களுக்கும் (Successors in Interest) தெரிவிக்கப்பட வேண்டும்.

6. பரிசு ஏற்படுத்தியவர்களுடைய நோக்கத்துக்கு வேறுபட்ட எந்தக் காரியத்துக்கும் இந்த நிதியை உபயோகிக்கக் கூடாது. இனி எப்பொழுதேனும் சர்வ கலாசாலையாரின் 7-D விதிப்படி யமைந்த தனித்தமிழ் வித்துவான் பட்டப் பரீக்ஷைக்குப் பிரதியாக ஏதேனும் ஏற்பட்டாலும், ஷை பரீக்ஷைக் குரிய விதிகள் மாறுபட்டாலும், பரிசை ஏற்படுத்தியவர்களுடைய நோக்கமாகிய தமிழ்க் கல்வி யபிவிருத்திக்கு ஏற்றதென்று கருதும் வகையில் ஸிண்டிகேட் சபையார் இந்தப் பரிசை உரியவருக்கு அளிக்க ஏற்பாடு செய்யும் உரிமையைப் பெறுவார்கள்.

7. பரிசு கொடுத்தது போக எஞ்சும் வட்டித் தொகையையும், மூலதனத்தையும் கெவர்ன்மெண்டார் எப்போதேனும் திருப்பிக் கொடுக்க நேர்ந்தால் அத்தொகையையும் எந்தவிதமான பத்திரங்களிலேனும், வேறு வகையிலேனும் வைத்துப் பாதுகாக்கும் உரிமை ஸிண்டிகேட் சபையாருக்கு உண்டு.

காசி மடம்,
திருப்பனந்தாள். } காசிவாசி சாமிநாத தம்பிரான்

குறிப்பு :— மேலேகண்ட மூலதனம் எண்டௌமெண்ட் சென்னை சர்வகலாசாலையாருடைய அங்கீகாரம் பெற்று 1937—38-ம் வருஷத்திய யுனிவர்ஸிட்டி காலண்டர் பகுதி 2-ல் 129, 130-வது பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.


இராஜராஜ அபயகுல
சேகர சோழ மகாராஜா

முகவுரை

திருச்சிற்றம்பலம்

சொற்பாவும் பொருளறிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை
நற்பான்மை யறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ண நல்கி னானைப்
பற்பாவும் வாயாரப் பாடி யாடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்க
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே —அப்பர்.

நம் தமிழக மருங்கின் செந்தமிழ்ப் புலமைச் செல்வமும், சிவநெறிச் செல்வமும் ஒருங்கு தழைத்த செழுங்குடித் தோன்றலாரும், இவ்விரு செல்வமும் தழையத் தழைத்துத் தாங்கிப் போற்றும் தனிப் பெருந்தகவு சான்ற திருப்பனந்தாள் திருக்காசி மடத்துத் தலைமைக் குரிசிலாரும் ஆக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தமக்கு இயல்பாய் அமைந்து முறுகி வளர்ந்த தமிழ்மொழிப் பற்றினாலும் சிவநெறிப்பற்றினாலும் இவ்விரண்டன் செழுமையும் சீர்மையும் ஆக்கமும் ஓக்கமும் தம் திருவுள்ளத்துக் கொண்டு நல்லாற்றான் நலன் எய்துமாறு பல்லாற்றானும் தம் சீரிய அறிவால் நாடித் தமிழ்ப்புலமை தழைத்து வீறுபெற்று ஓங்கத் தகும் மாண்புடைய நிலைக்களம் தென்றமிழ் நாட்டுச் செழுந்தலை நகராய சென்னபட்டினத்தின் அமைந்து விளங்கும் சென்னைப் பல்கலைக் கழகம் எனக்கண்டு அக்கழகத்தில் மாட்சி சான்ற ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியாரின் திருப்பெயரால் ஆயிரம் ரூபாய்த் தமிழ்ப்பெரும் பரிசு நிதி நிறுவியருளினார்கள். அவ்வாறே சிவநெறிச் செல்வம் தழைத்து ஓங்குதற்குரிய நிலைக்களம் தில்லைக்கண் அமைந்து விளங்கும் அண்ணாமலைப் பல்கலைச் கழகம் எனக்கொண்டு அக்கழகத்தில் இராசராச அபய குலசேகர சோழ மகாராசா அவர்கள் திருப்பெயரால் ஐந்நூறு ரூபாய்த் தேவாரத் திருமுறைப் பரிசு நிதியும் நிறுவியருளினார்கள். மேலும் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் வெளியீட்டிற்கும் பிற பன்னெறி யறங்கட்கும் இவர்கள் நிறுவிய நிதியும் அறச் செய்திகளும் தமிழுலக நன்மாந்தர் எத்திறத்தவரும் ஒத்துறப் போற்றுமாறு நிலவுகின்றன என எளியேன் கூறவேண்டா. இவர்கள் அருளறங்கள் பல்லூழி நிகழ்க: புகழ் நீடூழி திகழ்க.

இத்தேவாரத் திருமுறைப் பரிசு நிதி நிறுவியதன் விளைவாக அமைந்த விதிகளின்படி இப்பல்கலைக் கழகத்தார் இப்பரிசுப் பரீட்சைக்குப் பன்னிரு திருமுறைத் திருப்பாடற்றிரட்டு ஒன்று வெளியிடுமாறு நேர்ந்தது. அதன் பொருட்டு ஷை திருப்பனந்தாள் திருக்காசி மடத்துத் தலைவரவர்கள் தாமே திருப்பாடற்றிரட்டு முறை ஒன்றினை அட்டவணைப் படுத்திப் பல்கலைக் கழகத்தாருக்கு அனுப்பியருளி, அதனை ஏற்ற பெற்றிப் பயனுறுவித்துக் கொள்ளுமாறும் பணித்தருளினார்கள். பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பகுதித் தலைவர்களாக அப்போது விளங்கிய உயர் திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு கதிரேசச் செட்டியாரவர்கள் அப்பரிசு நிதியின் விதிகட்கு இணங்கப் பன்னிரு திருமுறைத் திரட்டினை முதன் முறையாகச் செய்தற்குச் சிதம்பரம் தேவாரப் பாடசாலைத் தலைமை யாசிரியர் திரு. இலட்சுமண ஐயரவர்களையும் பல்கலைக் கழகத்துத் தமிழாசிரியர்களையும் துணையாகக் கொண்டும், திருக்காசி மடத்துத் தலைவரவர்கள் அட்டவணையைப் பயன்படுத்திக்கொண்டும், முதன்மை வகுப்புக்கும் (Preliminary) முடிவு வகுப்புக்கும் (Final) ஆக ஆயிரத்திருநூறு திருப்பாடல்களைத் தேர்ந்து திரட்டினார்கள். அவர்களுக்கு உதவிப் பணி புரிந்த எளியேன் அவர்கள் கட்டளைப்படி அவற்றை அப்போது அட்டவணைப் படுத்தி வைத்தேன்.

பின்னர் பல்கலைக் கழகத்தார் இத்திரு முறைத் திரட்டுள் முதன்மை வகுப்பிற்குரிய முதற் பகுதியை முதற்கண் அச்சிடத் தொடங்கிய காலை தமிழ்ப் பகுதித் தலைவர்களாக இருந்த உயர் திருவாளர் K. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L. இப்பதிப்பைச் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் திருமுறைப் பதிப்பை அடி யொற்றிப் பதிப்பிக்கும் பணியைப் பல்கலைக் கழகத்து அதிகாரிகளின் அனுமதிப்படி எளியேனுக்கு அளித்தார்கள். இவ்வெளியீட்டிற்குத் தேவாரத் திருப்பாடல்களுக்கு மட்டும் ஏட்டுப் பிரதிகளில் காணும் பாட வேறு பாடுகளைக் காட்டுதலும், முழுதுக்கும் அருஞ்சொற் பொருட் குறிப்புச் சேர்த்தலும் நலமெனச் சில நல்லறிஞர் வற்புறுத்தியதன் பயனாக அவ்வாறு செய்யுமாறு எளியேனுக்குக் கட்டளை யிட்டார்கள். அவ்வண்ணமே ஏட்டுப் பிரதிகளின் சோதனைக்காக யான் 1941ம் ஆண்டு மே மாதம் சென்னைநகர் சென்று அரசாங்கத்தார் கையெழுத்துச் சுவடி நிலையத்துள்ள தேவார ஏட்டுச் சுவடிகளைப் பார்வை யிட்டுப் பாட வேறுபாடுகளைக் குறித்துக்கொண்டு பின்னர் தஞ்சாவூரிலுள்ள

சரபோஜி மன்னர் சரசுவதி மஹால் நூல் நிலையத்துள்ள அடங்கன் முறை ஏட்டுப் பிரதியையும் பார்வை யிட்டுப் பயனுள்ள பாட வேறு பாடுகளைக் குறித்து வந்தேன். யான் பார்வை யிட்ட ஏடுகள் பல வற்றுள்ளும் பெரிதும் பிழைபட்ட பாடங்களே காணப்பட்டன வேனும், பயனுள்ள ஒரு சில கிடைத்தன. அவற்றுள் ஒன்றிரண்டு ஈண்டுக் காட்டுகின்றேன். அறிஞர்கள் ஆராய்ந்து கொள்ளக் கடவர்.

முதற் றிருமுறை திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாக்காகிய திருநீல கண்டம் பொதுப் பதிகத்தின் மூன்றாம் திருப்பாடல் ஆகிய

மூலத்தட மூழ்கிய போகங் களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு மிவை யுடையீா
சிலைத்தெமைத் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.

என்பதனுள் இரண்டாவது அடி ஏட்டுப்பிரதி யொன்றில் "மிலைத் தலையா வண்ணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்" என்று காணப்படுகிறது. 'விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட' என்ற தொடர், 'விலையிடத்தில் அடிமையோலைகொண்டு எம்மை ஆண்டருளிய' என்று இனிது பொருள் பட்டு விலையீந்து அடிமை யோலை கொள்ளும் பண்டை வழக்கினைச் சுட்டுகின்றது. இத்தொல் வழக்கினை நம் சம்பந்த சுவாமிகள் இரண்டாந் திருமுறைத் திரு வானைக்காத் திருப்பதிகத் திருப்பாட்டில்

"கொலையார் கரியி னுரிமூ டியவனே
மலையார் சிலையா வளைவித் தவனே
விலையா லெனையாளும் வெண்ணாவலுளாய்"

என்று கூறியருளுதலானும், நம் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவா ரூர்த் திருத்தாண்டகத்துள்,

"உயிராவணஞ் செய்திட் டுன்கைத் தந்தா லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி" என்று கூறியருளுதலானும் நன்கு தெளியலாம். அன்றியும் வைணவ சமயப் பெரியாராகிய பிள்ளை லோகாசாரியர் முமுட்சுப் படியில் "ஒருவ னடிமை கொள்ளும் போது க்ருஹிணிக் கென்றன்றே ஆவண வோலை கொள்வது" என்று சூத்திரித்ததனாலும் இவ்வழக்குண்மை தெற்றெனக் காணலாம். இவ்வாறு பண்டை வழக் குடைப் பொருள் இத்தொடர்க்கண் கிடப்பவும் சில தமிழறிஞர், "சிவபெருமான் சுந்தர மூர்த்தி சுவாமிகளை யன்றோ ஆவணங் காட்டி யாட்கொண் டருளினர் என்று திருத்தொண்டர் புராணம் கூறும்; அதற்கேற்ப அவரும்

"செம்பொனார் தீவண்ணர் தூவண்ண நீற்றரோ ராவணத்தால்
எம்பிரா னார்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்கொண்டார்"

என்று பாடியருளினர். திருஞானசம்பந்த சுவாமிகளும் இங்ஙனம் பாடி யருளியதாகக் காணுமா றென்னை? இது சம்பந்த சுவாமிகள் வரலாற்றின்கண் இல்லையே! அவ்வா றின்மையின் இது சுந்தரர் திருவாக்கோ? என்று பல்லாற்றான் ஐயுற்று வினவுகின்றனர். இவ்வையுறவு நான் கண்ட ஏட்டுப் பிரதிப் பழம் பாடத்தால் பரிகரிக்கப் படலாமென்று கருதுகின்றேன். எங்ஙனமெனின், "மிலைத்தலையா வணம்" என்ற பாடத்திற் கேற்ட "மிலைத்து அலையா வண்ணம்" என்று கண்ணழிவு செய்து "மேற்கொண்டு அலையா வண்ணம், (மிலைத்தல் மேற்கோடல்)" என்று பொருள்படுத்தி "உலக போகங்களும் பிறவும் மேற்கொண்டு அலையாத வண்ணம் எம்மை யாட்கொண்ட பெருமானார்" என்று செம்பொருள் கொள்ளக் கூடுமாறு நோக்குக.

இனி, திருநாவுக்கரசு நாயனார் திருவாக்காகிய நான்காம் திருமுறைத் தனித் திருவிருத்தம்,

"பவளத் தடவரை போலுந்திண் டோள்களத் தோண்மிசையே
பவளக் குழைதழைத் தாலொக்கும் பல்சடை யச்சடைமேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக நாகமந் நாகத்தொடும்
பவளக்கண் வால மதியெந்தை சூடும் பனிமலரே"

என்ற திருப் பாடலின் இறுதியடி "பவளக் கணவிரி யாமெந்தை சூடும் பனிமலரே" என்றும் "பவளக்கணவல ராமெந்தை சூடும் பனிமலரே" என்றும் பழம்பாட வேறுபாடு ஏட்டுப் பிரதியிற் கண்டேன். இதன்கண் கண்ட 'பவளக்கண் வாலமதி' என்ற தொடரே இதுவரை பதிப்பு எய்திய எல்லாப் பதிப்புக்களினும் காணப்படும் பாடம் என்பதனை இதனை ஓதியவர் அனைவரும் அறிவர். இத்தொடர் இனிது பொருள்படுமா றில்லையென அறிஞர்முன் பணிவுடன் அறிவித்துக் கொள்ளுகிறேன். என்னெனின், 'வால மதி' என்னுந் தொடர்க்குப் பொருள் 'இளந் திங்களாகிய பிறை' என்று கொண்டாலும், அஃது அடைமொழிக் கேற்பப் பவளக்கண் உடைத்தாதலும், எந்தையார் சூடும் பனிமலராதலும் இன்றென்பது கண்கூடு. எங்ஙனம் பொருள் கூற முயன்றாலும் அஃது இடர்ப்பாடுடைத்தாம். இனி, யான் கண்ட ஏட்டுப் பிரதிப் பாட வேறுபாட்டுத் தொடர்கள் இரண்டினும், "பவளம் போன்று செந்நிற முடைய செவ்வலரி யாம் எந்தையார்

சூடும் பனிமலர்" என்று பொருள் பட்டு முற்கண்ட தொடர்களின் பொருளோடு இனிது பொருந்திச் சிறத்தல் கண்டுகொள்க. ஆதலின் பண்டு தொட்டு இஞ்ஞான்று வரை அச்சுப் பதிப்புக்கள் எல்லாவற்றினும் கண்ட இத்திருப்பாடலின் பாடம் பிழைபட்டதென்றும் ஏட்டுப் பிரதியால் இப்போது யான் கண்டு குறித்த பாடமே செவ்விது என்றும் அறிஞர் கண்டுகொள்வாராக.

ஏட்டுப் பிரதிச் சோதனையால் விளைந்த நல்ல பயன் இஃது அல்லாது பிறிது ஒன்றும் உளது என்பதனைத் தமிழுலகு அறிந்து மகிழுமாறு பிறிதொரு புதுச்செய்தியும் விண்ணப்பிக்கின்றேன். ஏட்டுப் பிரதியில் ஒவ்வொரு திருப்பதிகத்துக்கும் உரிய தலைப்பெயரும், பண்ணின் பெயரும் குறித்திருந்ததுடன் பல பதிகப் பண்களுக்கு நேரிய கருநாடக இராகப் பெயர்களும் ஒரு பிரதியுட் குறித்துள்ளமை கண்டு இறும்பூது எய்தினேன். தேவாரப் பண்கள் யாவும் தமிழகத்துப் பண்டு தொட்டு வழங்கி வந்த தமிழிசை முறைப் பண்கள் என்றும் அவற்றுக்கு நேரிய கருநாடக சங்கீத முறையான இக்காலத்து இராகங்கள் இன்னவை யென்றும் காட்டுதற் கென்றே அப்பழைய ஏட்டினை யெழுதியோர் கருத்துட்கொண்டு அவ்வாறு குறித்துள்ளனர் என்றும் அம்முறையை ஓதுவோர் தெளிய உணர்ந்து கோடல்வேண்டுமென்றே அவ்வாறு குறித்தனர் என்றும் எளியேன் உற்றுணர்ந்து அவற்றையும் குறித்துக் கொண்டேன். இதனை இஞ்ஞான்றைத் தமிழ்ப் புலமையாளரும் தமிழிசை வாணரும் அறிந்து தக்க வண்ணம் பயன் படுத்திக்கொள்ளுமாறு ஈண்டுக் குறிக்கின்றேன்.

பண்கள்	இராகங்கள்
நட்டபாடை	பந்துவராளி
தக்கராகம்	காம்போதி
பழந்தக்க ராகம்	எருக்கல காம்போதி (எதுகுலகாம்போதி)
தக்கேசி	காம்போதி
குறிஞ்சி	எருக்கல காம்போதி—ஷை
வியாழக்குறிஞ்சி	சவுராஷ்டகம் எருக்கல காம்போதி
இந்தளம்	பந்துவராளி
காந்தாரம் பியந்தைக்காந்தாரம்	சங்கராபரணம்
பியந்தைக் காந்தாரம்-தனி	ஆனந்தபைரவி

நட்ட ராகம்	பந்துவராளி
காந்தார பஞ்சமம்	கேதார கௌளம்
கொல்லி	சங்காபரணம
கவுசிகம்	பைரவி
பஞ்சமம்	ஆகிரி
அந்தாளிக் குறிஞ்சி	பீபாசு

மேற்காட்டிய பதினறு பண்களுக்கு மட்டும் நேரிய கருநாடக இராகங் கள் ஏட்டுப் பிரதியிற் காணப்பட்டன. இத்துணையும் ஏட்டுப்பிரதியின் சோதனையா லுண்டாய நலன்.

யான் ஏட்டுப் பிரதிப் பார்வையின் பொருட்டுச் சென்னை செல்வ தற்கு முன்னர், பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர் ஆக விளங்கிய சர் கே. வீ. ரெட்டி நாயுடுகாரு K.C.S.I. LL.D. அவர்களும், தமிழ்ப் பகுதித் தலைவர் பேராசிரியர் உயர் திரு. K. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L. அவர்களும், திருப்பனந்தாள் திருக்காசி மடத்துத்தலைவரவர்கள் நிறு விய தேவாரத் திருமுறைப் பரிசுப் பரீட்சைக் குரிய பண்பாடு முறைக ளைத்தேர்ந்து கோடற்கெனத் தமிழ்நாட்டின் பல பகுதிகளினு முள்ள தேவார ஓதுவார்களிற் சிறந்தவர்களையும் பல்கலைக் கழகத்துச் சங்கீத கலாசாலைத் தலைமையாசிரியர் முதலியோரையும் 1941ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26ம் தேதியன்று அண்ணாமலை நகரில் ஒருங்கு கூடச் செய்வித்துக் கலந்து ஆய்ந்து முடிவுத் திட்டமாகப் பண் பாடுமுறை தேர்ந்து கூறுமாறு பணித்திட்டார்கள். அதற்கேற்பப் பேராசிரியர் பிள்ளையவர்கள் தலைமையில் பலரும் கூடி ஒரு முடிவுத் திட்டம் வகுத் தார்கள். அம்முடிவு வகைக்கு ஏற்குமாறு யான் ஏட்டிற் கண்டு ஈண்டுக் குறித்த பண்ணுக்குரிய கருநாடக இராக முறைமைகள் பொருந்து மாற்றை இக்காலத்து இசைவாணர் கண்டு போற்றக் கடவர்.

இனி இத்திருப்பாடற் றிரட்டுக்கு அருஞ்சொற் குறிப்பு எழுது மாறு எனக்குப் பணியிட்ட போது இத்திருப்பாடல்கள் யாவும் புகழ்ப் பாக்களாதலின் ஒருகால் வந்த மொழியே மறுகால் வேறு பாடல் களினும் வரக் கூடுமாதலினனும், படித்துணர்வார்க்குத் திருப்பாட்டி னுணர்ச்சியே பெரிதும் வேண்டப்படுமன்றி அவற்றின் விரிபொரு ளுணர்ச்சி ஈண்டு வேண்டாமையானும், அருஞ்சொற்களுக்கு மட்டும் பொருள் ஆண்டாண்டு எழுதுமாறு அதிகாரிகள் பணித்தபடி என் சிற்றறிவுக்குத் தக்காங்கு ஒருவாறு எழுதினேன். குற்றங் குறைகள் காணப்படின் அவற்றை யுணரா என் எளிமையைப் பொறுத்தருளு மாறு பெரியோர்களைப் பணிந்து வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இத்திருப்பாடற் றிரட்டினைப் பதிப்பித்தலை மதுரைநகர் டினோபி லிப் பதிப்பகத்தார் மேற்கொண்டு இனிது நடத்துகையில் இஞ் ஞான்று நடைபெறும் உலகப் பெரும்போரின் கலக்கத்தால் அச்சுத் தாள் கிடையாக் குறையால் அவர்கள் ஒன்பது திருமுறை யளவில் பதிப்பிட்டு மேற்செல்லத் தம்மால் இயலாமையைப் பல்கலைக் கழகத் தாருக்கு விண்ணப்பித்துக் கொள்ள, அவர்கள் எஞ்சிய பகுதியைத் திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைப் பதிப்பகத்தார்களிடம் (United Printers, Trichinopoly) ஒப்புவித்தார்கள். அவர்கள் இறுதி மூன்று திருமுறைகளையும் பதிப்பித்து முடித்தனர். இவ்விடையீட்டி ஞல் இப்பதிப்பு இத் துணைக்காலம் தாழ்க்க நேர்ந்தது. இப்பதிப்பை நிறைவேற்றிய இவ்விரு பதிப்பகத்தார்களுக்கும் என் உளமார்ந்த நன்றியறிவு உரித்தாம்.

அறிவு ஆற்றல்களில் குறைபாடுடைய எளியேனை இப்பதிப்புப் பணிக்குரியனாக்கிக் கொண்ட பல்கலைக் கழகத்தாருக்கு என் நன்றி யறிவைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் சிறு பணியைத் தன் திருப்பணிக் குரியதாகக் கொண்டு தோன்றாத் துணையா யிருந்து முடிப்பித்தருளிய தில்லைக் கூத்துகந்த வள்ளற் பெருமான் திருவடி மலர்களை வணங்கி வாழ்த்திப் போற்றுகின்றேன்.

இங்ஙனம்,
தி. பொ. பழனியப்ப பிள்ளை
Vidwan B. O. L.



THE RAJAH SAHEB OF CHETTINAD

FOUNDER PRO-CHANCELLOR.

SRI ARULNANDI SIVACHARYA SWAMIGAL SIVAGNANA SIDDHIAR LECTURESHIP ENDOWMENT

BY

His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal in memory of the late Silasri Kasivasi Swaminatha Tambiran Swamigal Avergal, to encourage the study of and the spread of learning in the Saiva Siddhanta Sastras.

---

1. This endowment was founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal in memory of his predecessor the late Silasri Kasivasi Swaminatha Tambiran Swamigal Avergal to encourage the study of and the spread of learning in Saiva Siddhanta.

2. The Endowment for the lectureship consists of $3\frac{1}{2}\%$ Non-terminable Government Promissory Notes of the face value of Rs. 15,000 (Rs. Fifteen Thousand.) The interest on this investment shall be utilised for the honorarium for a series of lectures, not less than four in number, annually at the Benares Hindu University and Allahabad University. The honorarium shall be Rs. 400 unless revised later with the consent of the donor and with a view to the lectures being given in other Indian University centres. Such excess of income as there may be over the honorarium fixed will be added every year to the corpus of the fund. Should at any time the Syndicate consider that no applicant has shown sufficient ability to justify the delivery of the lectures in that particular year or years, the amount of interest accrued shall be added to the corpus of the fund.

3. The terms and conditions of the lectureship are as follows:

(i) The course of lectures which shall be not less than four, three in the Benares Hindu University and one in the Allahabad University, shall be delivered annually at the University centres fixed by the University on a subject explaining the principles of Saiva Siddhanta. The increase in the number of lectures shall be subject to the conditions in para 5 infra.

(ii) The lecturer shall be appointed every year by the Syndicate of the Annamalai University either from among the Hindu members of the staff of the University or other Hindus, experts in the Saiva Siddhanta Philosophy. Every year there shall be a new lecturer. The lecturer once selected may have a second turn only after the lapse of 12 years.

(iii) The lecturer shall be chosen irrespective of sex or caste.

(iv) The lecturer should within a month after the delivery of the lectures present to the Annamalai University as well as the donor of this Endowment and his successors in interest, a copy each of his lectures. The University may print and publish the lectures at the discretion of the Syndicate.

(v) The lectures shall be the result of a deep study of the sutras of (a) Sivagnana Siddhiyar, both Parapakkam and Supakkam and the six old commentaries on the Siddhiyar and (b) Sivaprakasam of Sri Umapati Sivachariar.

(vi) The lectures shall be arranged in consultation with the Benares Hindu University and the Allahabad University immediately before or after the Dasarah holidays.

(vii) The lecturer shall bring on his return a pot of the holy waters of the Ganges for presentation at the Lord Sri Nataraja Shrine at Chidambaram for abishekam and intimate to the donor his having done so when he sends a copy of his lecture as required in clause 3(iv) supra.

(viii) The honorarium shall be paid either in cash or by cheque.

4. It shall be competent for the Syndicate of the Annamalai University to invest in any Government or other trustee securities (1) the sums available from year to year for investment from the interest in excess over the honorarium as also (2) the capital amount of the investment in case the Government Securities in which the amount is now invested are tendered for payment by Government.

5. If in the process of investment the face value of the paper increases and an enhancement of income results either by addition of unspent amounts or by reinvestment, such additional income shall be utilised to increase the number of University centres at which the lectures will be delivered and consequently the honorarium for the lecturer.

6. The Syndicate shall at the end of each year communicate to the donor or to his successors-in-interest the name and address of the lecturer and the honorarium paid and, if in any year no lecture is delivered, the amount at credit at the end of the year and shall also publish the accounts in an important Tamil or English Daily News-paper. The deeds relating to :

(1) The Rs. 1,000 Tamil Prize Endowment perpetuating the memory of King George V	in the Madras University.
(2) The Promotion of Tamil Learning Endowment Fund for Rs. 1,00,000 (One Lakh)	Scheme approved by the Madras Govt. Notification No. 215 published in the Fort St. George Gazette Part I-B Educational dated 21-9-41.
(3) The Raja Raja Abhaya Kulasekara Chola Maharaja Memorial Endowment for Tevara Tirumurai Prize and publication of works of Tamil Literature and Grammar, (4) The Tiruvalluvar Niti Nul Prize Endowment, (5) The Sekkilar Nayanar Memorial Tamil Prize Edowment, (6) The Silasri Kasivasi Adi Kumaraguru-para Swamigal Memorial Tamil Prize Endowment,	In the Annamalai University

(7) The Kavichakravarti Kambar Memorial Tamil Prize Endowment,

(8) The Sri Nambi Andar Nambi Memorial Pannirithirumurai Prize Endowment,

(9) The Kottaiyur Sri Sivakkolundu Desigar Memorial Isai Tamil Prize Endowment,

(10) The Sri Manikkavachaka Swamigal Memorial Ahapporul Tamil Prize Endowment,

(11) The Silasri Kasivasi Adi Kumaraguruparа Swamigal Memorial Tamil Prosody Prize Endowment,

(12) The Silasri Kasivasi Chokkalinga Swamigal Memorial Rhetoric Tamil Prize endowment,

(13) The Kottaiyur Sri Sivakkolundu Desigar Memorial Tiruvachakam Prize Endowment,

(14) The Meikandar Memorial Saiva Siddhtanta Sastra Prize Endowment,

(15) The Silasri Kasivasi Adi Kumaragurupara Swamigal Memorial Saiva Siddhanta Sastra Prize Endowment along with the figure of Silasri Kasivasi Adi Kumaragurupara Swamigal,

(16) The Sri Thirugnanasambandamurti Nayanar Memorial Tamil Isai Prize Endowment,

} In the Annamalai University.

(17) The Sri Kasivasi Tillainayaga Swamigal Memorial Tamil Cash Prize Endowment,

Approved by the Madras Govt. in its G. O. No. 28 Education, dated 10-1-44.

and

(18) The Sri Arulnandi Sivacharya Swamigal Sivagnana Siddhiyar Lectureship Endowment, i. e., these 18 deeds shall be published in every one of the editions of the publications made under the 3rd endowment mentioned above.

(True copy.)

THE PROMOTION OF TAMIL LEARNING IN THE PROVINCE OF MADRAS ENDOWMENT FUND AT TANJORE.

Vesting of Securities in the Treasurer of Charitable Endowments.

Fort St. George, October 14, 1941. (G. O. Ms. No. 1596, Education.)

No. 214. In the matter of the Charitable Endowments Act, 1890, and in the matter of "The Promotion of Tamil Learning in the Province of Madras Endowment Fund at Tanjore."

Whereas application has been made to the Government of Madras under clause (b) of sub-section (1) of section 6 of the Charitable Endowments Act, 1890 (VI of 1890), by his Holiness Srilasri Kasivāsi Swaminatha Thambiran of Tirupanandal, Kasi Mutt, the donor of the proposed Endowment Fund, for vesting the securities specified in the schedule below and now in the hands of the Reserve Bank of India, Madras, in the Treasurer of Charitable Endowments appointed under the said Act for the Province of Madras, His Excellency the Governor of Madras, in exercise of the powers conferred by section 4 of the said Act, is hereby pleased to order that the said securities be vested in the Treasurer aforesaid and be held by him and his successors, subject to the provisions of the said Act and to any rules which from time to time may be, or shall be deemed to have been, made thereunder, upon trust for the purposes and subject to the conditions set forth in the scheme settled under section 5 of the said Act for the administration of the said Fund.

Schedule

Government of India interest-free loan Certificate No. MS-17 of Madras, dated 15th June 1940 for Rs. 1,00,000 (rupees one lakh.)

Scheme of Administration

No. 215. In the matter of the Charitable Endowments Act 1890, and in the matter of "The Promotion of Tamil Learning in the Province of Madras Endowment Fund at Tanjore."

Whereas application has been made to the Government of Madras under clause (b) of sub-section (1) of section 6 of the Charitable Endowments Act, 1890 (VI of 1890), by his Holiness Srilasri Kasivasi Swaminatha Thambiran of Tirupanandal, Kasi Mutt, the donor of the Endowment Fund, known as "The Promotion of Tamil Learning in the Province of Madras Endowment Fund at Tanjore" and referred to in Notification No. 214 supra for settling a scheme for the administration of the said Fund, it is hereby notified that His Excellency the Governor of Madras has, in exercise of the powers conferred by section 5 of the said Act, settled the scheme set forth in the schedule below for the administration of the said Fund and directed that such scheme shall come into operation with effect on and from the date of publication of this notifiication.



HIS HOLINESS KASIVASI ARULNANDI TAMBIRAN SWAMIGAL AVERGAL
THE 20TH IN THE HOLY LINE OF SUCCESSION, SRI KASIMUTT, TIRUPANANDAL.

Schedule

Scheme for the administration of "The Promotion of Tamil Learning in the Province of Madras Endowment Fund at Tanjore."

1. The Fund shall be called "The Promotion of Tamil Learning in the Province of Madras Endowment Fund at Tanjore."

2. It shall be administered by the Committee referred to in the registered deed of trust annexed hereto and executed by His Holiness Silasri Kasivasi Swaminatha Thambiran of Tirupanandal of Kasi Mutt, the donor of the said Endowment Fund, in accordance with the provisions of the said deed of trust.

Deed of endowment, dated 17th September 1941, executed by His Holiness Silasri Kasivasi Swaminatha Thambiran Swamigal Avergal of Tirupanandal for the promotion of Tamil Learning.

1. In aid of the War efforts, a sum of rupees one lakh has been subscribed on 15th June 1940 in the interest-free loan to the Government of India and Stock Certificate No. MS-17 of Madras, dated 15th June 1940, obtained for the amount. After three years from the said date of 15th June 1940, this sum of rupees one lakh shall be invested in Government Securities yielding the highest interest at that time, preferably 3½ per cent non-terminable promissory notes. This will form the nucleus of the abovesaid endowment. The administration of the endowment shall vest in a Committee, the constitution and powers thereof are detailed in paragraph 8 infra. The custody of Government Securities and other promissory notes shall be with the Treasurer of Charitable endowments. The interest derived from the said endowment shall be spent for the promotion of Tamil learning by paying honoraria to school teachers of elementary schools, village karnams and practitioners of Indian Medicine and if such practitioner is not available any medical practitioner appointed to any rural area, in the manner and subject to the conditions set out below :—

(a) Elementary school teachers, village karnams including the karnams of inam villages, and practitioners of Indian Medicine (L.I.M.) and if such L.I.M. is not available any medical practitioner appointed to any rural area, who have qualified themselves in the Oriental Title Vidvan (Final) Examination in 7-D Tamil of the Madras University or 8-C of the Annamalai University or in such other examination as may be substituted for or considered equivalent to it by the said Universities, shall be eligible for honoraria, from out of the income of the endowment, irrespective of their caste, creed, sex or nationality.

(b) The interest on the endowment above mentioned shall be accumulated for a period of three years and out of the accumulated interest, a sum of Rs. 10,000 shall be invested in interest-yielding Goverment Securities. Out of the interest from this latter investment, the amount of annual interest on the said amount of Rs. 10,000 shall be paid, as honorarium, in equal monthly instalments, to a teacher in a recognized elementary school appointed either by the Government

of Madras or by a district or local or panchayat board or aided school management in a non-municipal area anywhere in the Presidency of Madras who has qualified himself as mentioned in paragraph 1 (a) supra.

(c) Again, the interest on the original endowment of rupees one lakh, for a second Period of three years. shall be allowed to accumulate and out of the accumulated interest, a sum of Rs. 10,000 shall be invested, in the manner set forth in the preceding paragraph. Out of the interest thereof, an honorarium similar to the one described in the preceding paragraph, shall be paid to a village karnam similarly qualified.

(d) The interest on the original endowment of rupees one lakh for a third period of three years shall be allowed to accumulated and out of the accumulated interest, a sum of Rs. 10,000 shall be again invested in the manner set forth above. Out of the interest thereof, shall be paid a similar honorarium to a licentiate in Indian Medicine (L. I. M,) and if such L. I. M. is not available, any medical practitioner L. I. M. for instance, at present appointed either by the Government of Madras or District Board in the Presidency, in a rural area, who possesses the said qualification in Tamil.

(e) If the interest in the abovesaid periods of three years falls below Rs. 10,000 these periods shall be extended so that the accumulated interest reaches a sum of Rs. 10,000. The Committee referred to in paragraph 8 infra shall have power to extend the period as the need arises.

2. The honorarium referred to in paragraph 1(b) (c) and (d) above shall become attached to the village wherefrom the first holder in each class comes respectively. It shall be in addition to the emoluments the individual gets from the Government or the District Board or other school authority, It shall be payable to the recipient thereof even though he leaves his original place, so long as he is in service as school master, karnam or (rural) medical officer, in any other *rural* part of the Madras Presidency. When he ceases to draw it, owing to retirement or other causes, it will however revert and continue to be attached to the place wherefrom he got the award first. The disqualifications affecting the pay or emoluments given by Government or local body hold good equally in the case of honorarium under this deed.

3. Again, the interest on the original endowment shall be allowed to accrue for a fourth period of three years or until it reaches a sum of Rs. 10,000 as per paragraph 1(e) above and the accumulated interest along with the balance of interest from out of the accumulations of the three periods of three years each (paragraphs 1(b), (c) and (d) above) after meeting the advertisement charges stated in paragraph 7 infra, shall be added on to the original endowment by purchasing interest-yielding Government securities. Thus there will be a cycle of four periods of three years of each or of such time when interest accumulates to Rs. 10,000, the first three relating to the purposes mentioned in paragraphs 1(b), (c) and (d) above, and the fourth to the increase of the main capital. With the increase of capital in course of time, it may be possible to give the benefit to more individuals than one, in each of the three categories, in less than three years or even in one year. To facilitate the increase of capital

(a) when the interest for three periods of two years or one year is sufficient to give the benefit to one individual in each of the three categories, the interest for the fourth period of two years or one year respectively shall be added to the capital;

(b) when individuals in each of the three categories can have the benefit in one year, the interest for the fourth year shall be added to the capital; and lastly

(c) when three or more individuals in each of the categories can have the benefit in one year, the interest for the succeeding year shall be added to the capital.

4. If the eligible candidates under all or any of the three categories are more in number than the amount on hand at the time will permit, the selection shall be by lots.

5. In case the honorarium is not payable in any year for lack of qualified candidates under any of the three categories, the invested capital of Rs. 10,000 shall be earmarked for a village in the 12 districts detailed below (vide paragraph 9 infra) of the Madras Presidency to be selected by casting lots, and the interest herefrom (i. e. honorarium payable) shall be set apart till a qualified candidate in the selected village becomes available, when, the total accumulated amount will be paid to him. If (a) no such candidate is available at all or (b) if after one or more candidates come in, the chain of benefited persons could not continue after a time for want of candidates to draw the honorarium and, if in both the cases (a) and (b), there is no incoming eligible candidate for a continuous period of thirty years, the accumulated honoraria, i. e., the unpaid interest on each Rs. 10,000 shall be added on to the original endowment. This shall be the procedure for every subsequent cycle of thirty years.

6. When any of the offices ceases to exist or the institution is abolished in the selected village and in consequence, there is no need to continue the honorarium, the entire amount shall be added to the original endowment.

7. The full text of this deed shall be published each year, both in English and Tamil leading dailies, if possible, along with the names and addresses of the successful candidates and the photographs of the candidates of the year. Such publication shall be made every year until the number under each of the categories reaches four, i. e., twelve in all. Thereafter. when the number exceeds twelve it may be sufficient to publish the names and addresses of the last twelve candidates eliminating the earlier ones. The charges for publication, as also the cost of the establishment for maintenance of accounts, if Government should consider that the work involved is heavy, shall be met out of the balance of interest accumulation mentioned in paragraph 3 above.

8. (a) The committee administering the endowment shall consist of five persons. The Collector of Tanjore will be the ex-officio President of the Committee. The Government Pleader, Tanjore, and the donor or his successor-in-interest will be two other members of the committee. Two officials of Government, nominated by Government, one of the Department of Education, not below the rank of a District Educational Officer of any district and another a District Medical Officer *in charge of a district*, in the Province, shall also be members thereof.

(b) The committee shall have power to reinvest the original capital and the subsequent a uxiliary capitals in interest-yielding Government securities. The choice of such securities so as to yield the highest interest, the periodical drawing and securing interest thereon and other necessary matters shall vest in the committee.

(c) The committee may, at its discretion, raise the capital required under the three categories (paragraphs 1(b), (c) and (d) above) in order that the successful candidates may be induced to take up the posts in villages, and have increased *honoraria* so that the vidwans may get remuneration, approximating to the salary of similar vidwans in high schools. On no account, shall the capital go below Rs. 10,000, i. e., the amount from which the accruing interest has to be distributed.

9. After sufficient capital accumulates for the purpose of discharging the obligations under the three categories (paragraphs 1 (b), (c) and (d) above) *in all the villages*, at least in the undermentioned twelve districts of the Province, the interest on the then available capital shall be allowed to form distinct funds, the interest whereon will be utilized for providing scholarships to the students studying for Tamil Vidvan Course in the recognised colleges in the Madras Province. It is left to the committee to determine the items to be provided to the students in the award of scholarship, and the number of scholarships to be given to each such college. Thereafter, out of the surplus interest left, it shall be allowed to form distinct funds, the interest whereon will be utilized for providing mid-day meals for the children in village elementary schools, one school in each district in the Province at a time, to be selected by casting lots, and the number increased, if funds permit.

Districts

1. Tanjore
2. Trichinopoly
3. Madura
4. Ramnad
5. Tinnevelly
6. Salem
7. Coimbatore
8. Nilgiris
9. South Arcot
10. North Arcot
11. Chingleput
12. Chittoor

10. After all the above items have been sufficiently provided for throughout the province the entire income shall be utilized for the undermentioned purposes :—

(1) Remuneration for producing an original poem in Tamil.

(2) A good research work of history.

(3) The best Tamil translation of a scientific work from a foreign language or any other Indian language.

(4) Translation into English of selected works in Tamil.

(5) Editing old Tamil works which had hitherto remained unpublished, and in no event shall it be diverted to any other purpose.

When occasions arise for appointing sub-committees or experts for considering any of the details contained in the deed, the committee administering the endowment may appoint them and provide funds if necessary for carrying out their suggestions, meeting other incidental charges from out of the balance of interest accumulation.

11. The donor and his successor-in-interest will abide by the decision of the committee in all matters relating to this endowment.

E. C. WOOD,

Secretary to Government.



HIS HOLINESS KASIVASI SWAMINATHA TAMBIRAN SWAMIGAL AVERGAL
THE 19TH IN THE HOLY LINE OF SUCCESSION SRI KASIMUTT, TIRUPANANDAL.

The Sri Thillainayaga Swamigal (Establisher of the Kasimut at Tirupanandal in the line of succession from Sri Athi Kumaragurupara Swamigal the founder of the Kasimutt at Benares) Memorial Tamil Cash Prize Endowment.

1. The fund shall be called "The Sri Thillainayaga Swamigal (Establisher of the Kasimutt at Thirupanandal in the line of succession from Sri Athi Kumaragurupara Swamigal the founder of the Kasimutt at Benares) Memorial Tamil Cash Prize Endowment Fund at Madras.

2. The Commissioner for Government Examinations, Madras for the time being shall be the administrator of the Fund.

3. Out of the interest accruing annually on the said fund a sum of Rs. 300 (Rupees Three Hundred only) or such other sum as may be available in accordance with the provisions hereinafter contained shall be utilised for the award, every year of a prize which shall be called "The Sri Kasivasi Thillainayaga Swamigal Memorial Tamil Cash Prize."

4. The Prize shall be awarded to that student who at the first appearance for the Secondary School-Leaving Certificate Examination held under the authority of the Government of Madras declared eligible to undergo the University Course and whose second language in the said examination being "*Tamil*" secures the highest number of marks in that subject.

5. The prize may be awarded to a student even though he is in receipt of another prize or prizes.

6. If two or more students have equal claims to the prize, the student who is to receive the prize shall be ascertained by casting lots.

7. The amount of the prize shall be paid in cash through the school from which the student appeared for the Secondary School-Leaving Certificate Examination.

8. If a student who is eligible to receive the prize dies before the actual award takes place the amount of the prize shall be paid to his legal heir or heirs.

9. All interest accruing on the Fund that may not be utilised or required for the said prize shall be accumulated and such accumulations shall from time to time be invested in Government Securities and added to the corpus of the Fund. When the sum so added to the fund amounts to Rs. 1,000 the interest on the said sum of Rs. 1,000 together with the sum of Rs 300 mentioned in clause 3 shall be awarded as prize. The amount of the prize shall be similarly increased at every stage when the interest so added to the fund amounts to Rs. 1,000.

10. When the interest on the capital amounts to Rs. 1,000 there shall be no further addition to the capital out of the annual interest and the entire interest shall thereafter be awarded as prize.

11. The amount of the fund may, from time to time, be reinvested in Government Securities.

Schedule

3 per cent 1953-55 Fourth Defence Loan Bonds of the value of Rs. 12000. (Rs. Twelve Thousand.)

(Approved by the Madras Government in G. O. Ms. 28 Education, 10th January 44, published in pages 50 and 51 of the Fort St. George Gezette dated 25th January 44.)

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை

தோடு[1]டையசெவி யன்விடை[2]யேறியோர் தூவெண்மதி சூடி
காடுடையசுட லைப்பொடி[3] பூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடு[4]டையமல ரான்[5]முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடு[6]டையபிர மாபுரம்மேவிய பெம்மானி[7]வனன்றே. 1

முற்ற[1]லாமை[2]யிள நாகமோடேன[3] முளைக்கொம்பவை பூண்டு
வற்றலோடு[4]கல[5] னப்பலி[6]தேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழு தேத்தப்
பெற்றம்[7]ஊர்ந்தபிரமாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 2

நீர்[1]பரந்தநிமிர் புன்சடை[2] மேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்[3]பரந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 3

இந்தத் திருப்பதிகம் திருஞானசம்பந்தர் திருப்பெருகு சிவஞானம் பெற்றுழிப் பாடியருளியது.

1. [1] காதணி; பனந்தோட்டாலாகியது; "தோலுந்துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்" திருவாசகம் (ஒப்பு).
[2] எருது.
[3] சுடுகாட்டுச் சாம்பலாகிய திருநீறு.
பி-ம். மதிசூடிக்
பி-ம். பொடிப்பூசி
[4] இதழ்.
[5] திருமாலின் கொப்பூழில் மலர்ந்த தாமரை மலரில் தங்கிய பிரமன்.
[6] பெருமை.
[7] பெருமான்

2. [1] முதிர்தல்
[2] ஈண்டு ஆமையின் ஓடு.
[3] பன்றி:
[4] உலர்ந்த பிரமகபாலம்.
[5] உண்கலம்.
[6] பிச்சையுணவு
[7] ஈண்டுப் பொதுமை நீங்கி 'எருதினை' குறிக்கும்.

3. [1] ஈண்டுக் கங்கையாறு.
[2] செந்நிறமுடைய சடை. "புன்றலைமகார்" மலைபடுகடாம்(ஒப்பு).
[3] அழகு.

3 அடி. ஊர்கள் மிக்குள்ள உலகினுள் பலவூருள்ளும் முதன்மையாகிய ஒப்பற்ற ஊரென்னப்புகழ் சிறந்தபிரமாபுரம் எனக்கூறியது அது பிரளய காலத்தும் அழியா நிலைமைபற்றி யென்க.

விண்மகிழ்ந்தமதி[1] லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரிய[2]வந்தென துள்ளங்கவர் கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரை
[3]மார்பிற்
பெண்[4]மகிழ்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்[1]சடையன்விடை யூரும்மிவ
னென்ன
அருமையாகவுரை செய்ய அமர்ந்தென துள்ளங்கவர்
கள்வன்
க்ருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிது
வென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 5

திருவண்ணாமலை - பண் - நட்டபாடை

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ[1] வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம்
அறுமே. 1

---

4. [1] வானில் களித்துலவிய திரிபுரங்கள்.
[2] பிச்சையூண் பெறுதற்கு.
[3] மலைபோலு மார்பு: இனி, நல்லிலக்கணமாகிய மூன்று இரேகைகளையுடைய மார்புமாம்.
[4] உமையம்மையார்.

5. [1] ஒருடம்பிற் பெண்பாலுருவும் உடையவன் என முன் திருப்பாட்டிற் றடிப்பொருளை அனுவதித்தது.
பி-ம். யூருமிவனென்ன
பி-ம். காலமிதுவென்ன

1. பெருமான் மலையாகிய அண்ணாமலை எனக்கூட்டுக.
[1] இன்னோசையையுடைய மத்தளம்; அருவித்திரள் முழவுபோல ஒலிக்கும் என்க. (ம். விரித்தல் விகாரம்).
பி-ம். மழலை முழவு
பி-ம். வழுவாவணமறுமே

தேமாங்கனி கடுவன்[1]கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவல்[2]மிசை சிறுநுண்துளி[3] சிதற
ஆமாம்பிணை[4] யணையும்பொழில் அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி[5] நினைவார்வினை யிலரே. 2

பீலிம்மயில்[1] பெடை[2]யோடுறை பொழில்[3]சூழ்கழை முத்தம்[4]
சூலிம்மணி[5] தரைமேல்நிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை[6] தவழும்பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே. 3

உதிரும்மயி ரிடுவெண்டலை[1] கலனா[2]வுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவும் எருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழல் அடிகட்[3]கிடம் அண்ணாமலை யதுவே. 4

---

2. [1] ஆண் குரங்கு.
[2] பாறை
[3] நுண்ணிய துளிகள்.
[4] காட்டுப் பசுவும், பெண் மான்களும்.
[5] பொலிவுமிக்க சிறந்த கழல் என்னும் காலணி யணிந்தசெம்மையான திருவடிகள்.
பி-ம். துறுவன் மிசைச்சிறு

3. [1] தோகையையுடைய ஆண் மயில். (ம்-விரித்தல் விகாரம்)
[2] பெண் பறவை.
[3] சோலை.
[4] மூங்கிலினின்றுதிர்ந்த முத்துக்கள்
[5] சங்கு சூலால் ஈன்ற முத்தம்
[6] தலைப்பெயலையுடைய மழை. (ம் - விரித்தல் விகாரம்)
பி-ம். சூலின்மணி

4. [1] வெண்மையாகிய பிரமகபாலம்.
[2] உண்கலம்.
[3] ஒலிக்கும் கழலணிகளையுடைய இறைவன்.

மரவஞ்[1]சிலை[2] தரளம்[3]மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படும்[4] அண்ணாமலை அண்ணல்
உரவஞ்சடை யுலவும்புனல் உடனாவதும் ஓரார்
குரவங்[5]கமழ் நறுமென்குழல் உமைபுல்குதல் குணமே. 5

திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம்

துணி[1]வளர் திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றி
முடித்துப்
பணி[2]வளர்கொள்கையர் பாரிடஞ்[3]சூழ வாரிடமும் பலி
தேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய் துபாச்சி லாச்சிராமத்
துறைகின்ற
மணிவள்ர்கண்டரோ [4]மங்கையைவாட மயல்[5]செய்வதோ
இவர்மாண்பே. 1

கலைபுனைமானுரி[1]தோலு[2]டையாடைகனல்சுட ராலிவர்கண்
கள்
தலையணிசென்னி[3]யர் தாரணிமார்பர் தம்மடிகள் ளிவ
ரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி லாச்சிராமத்துறை
கின்ற
இலைபுனைவேலரோ[4] ஏழை[5]யைவாட இடர்செய்வதோஇவ
ரீடே.[6] 2

---

5. [1] வெண்கடம்பு.
[2] சிலைமரம்.
[3] முத்து. பி-ம். உரவுஞ்சடை
[4] பறை அல்லது முழக்கம் ஒலிக்கும்.
[5] குராமலர்.

1. [1] துண்டம்; ஈண்டுப் பிறை.
[2] பாம்பு.
[3] பூதகணம்.
[4] நீலமணிபோலும் கரிய கழுத்தை யுடையார். "யாழ்கெழு மணி மிடற் றந்தணன்"—அகம் (ஒப்பு)
[5] மயக்கம்.

2. [1] மான்தோல்.
[2] புலியின்தோல். இவை உடையும் ஆடையுமாம்.
இவர் கண்கள் கனல் சுடர் என மாறி, இவர் கண்கள் நெருப்பும் சுடர்களாகிய திங்களும் ஞாயிறு. மாம் என்க. பி-ம். கலைபுரி.
[3] உண்கலமாகத் தலையையுடைய பாணர்.
பாணன். "செவ்வரை நாடன் சென்னியம்" (பெரும்பாணாறு.)
[4] இலை போன்ற வடிவுடைய வேலினையுடையார்.
[5] பெண். [6] தகுதி.

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்[1]மாலை வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்ச[2]டைமாளிகை சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்சிதை[3]செய்வதோ இவர்சீரே. 3

கனமலர்க்கொன்றை அலங்கல்[1]இலங்கக் கனல்தரு தூம[2] திக்கண்ணி
புனைமலர்மாலை யணிந்தழகாய புநிதர்கொ லாமிவரென்ன
வன[3]மலிவண்பொழில் சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே. 4

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடைமேற் புனல்வைத்து
மோந்தை[1]முழா[2]க்குழல் தாளமொர்வீணை முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
சாந்த[3]ணிமார்பரோ தையலைவாடச் சதுர்செய்வதோ இவர் சார்வே. 5

---

3. [1] தங்கும் இருள்.
[2] மேகம்.
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி - முரண்தொடை.
[3] சிதைவு.

4. [1] மாலை.
[2] பிறையாகிய தலைக்கண்ணி.
[3] அழகு

5. [1] ஒருவகைத் தோற்பறை.
[2] மத்தளம்.
[3] சந்தனம். பி—ம். புனமலர்மாலை

இத்திருப்பதிகம் கொல்லிமழவன் புதல்வியின் முயலக வலிப்புநோய் நீங்கக் கட்டளையிட்டருளியது.

திருநள்ளாறு - பண் - பழந்தக்கராகம்

போகமார்த்த[1] பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்[2]
பாகமார்த்த[3] பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி[4]
ஆக[5]மார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன் தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடு[1]டைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன்[1]முறையா லாற்றவெண்ணீ றாடி அணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர்ப ணிந்தேத்த
மான்மறி[2]யும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

---

1. [1] இன்பம் நிரம்பிய.
[2] அழகிய மார்பு.
[3] பாகமாக வைத்த.
பைங்கண் வெள்ளேறு - பசிய கண்களையுடைய வெண்மையாகிய எருது. முரண்தொடை.
பி-ம். தோலுடையவன்
பி-ம். துலையா
[4] பரம் பொருள்.
[5] உடம்பு.

2. [1] பெருமை.

3. [1] பசு. [2] மான்கன்று.

புல்க[1]வல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்க[2]வல்ல கொன்றைமாலை மதியோடு டன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநி ழற்சேர
நல்க[3]வல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னி[1]மேலோர் ஆடர வஞ்சூடி
நீறு[2]தாங்கி நூல்[3]கிடந்த மார்பில் நிரைகொன்றை
நாறு[4]தாங்கும் நம்பெருமான் யேமது நள்ளாறே. 5

திருவோத்தூர் - பண் - பழந்தக்கராகம்

பூத்தேர்ந் தாயன[1] கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாள்அங்கைக்
கூத்தீ[2] ரும்ம குணங்க[3]ளே. 1

---

4. [1] சேர. [2] பெருக.
[3] அருள.

5. [1] தலை.
[2] திருநீறு.
[3] பூணூல்.
[4] மணம் பொருந்திய கொன்றை மலர் மாலை.

இத்திருப்பதிகம் மதுரை நகரில் கனல் வாதம் செய்தபோது எரியிலிடப்பெற்ற ஏட்டினமைந்து பச்சென்றிருந்தமையால் 'பச்சைப் பதிகம்' எனப்பெயர் பெறும்.

1. [1] பொருந்தியவையாகிய மலர்கள். [3] உம்முடைய குணங்கள்.
[2] திருக்கூத்துச் செய்வோரே!

இடையீர்[1] போகா இளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி[2]
உடையீ ரேயும்மை யேத்துதும் ஒத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. 2

உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்கு[1]லோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. 3

தோட்டீ[1] ரேதுத்தி[2] யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேயும்மை யேத்துதும் ஒத்தூர்
நாட்டீ ரேயருள் நல்குமே. 4

---

2. [1] ஈர்க்கு "ஈர்க்கிடைபோகா எரிள வனமுலை"—திருவாசகம் (ஒப்பு).
[2] தோல்.
பி-ம். உடையீரேயுமை.

3. [1] அரை : இஃது இடக்கர் மொழியன்று ;
நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் பெருமாள் திருமொழியுள் "பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்து பூந்துகில் சேரல்குல், காமரெழில் விழலுடுத்து" என்று ஆண்மகன் உறுப்புப் பெயராக, ஈண்டு உரைத்தது போன்றே கூறியிருத்தல் காண்க.

4. [1] தோட்டினையுடையீர். [2] படப் புள்ளி.

குழை[1]யார் காதிர் கொடுமழு வாட்படை
உழை[2]யாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயருள் நல்குமே. 5

திருவண்ணாமலை - பண் - தக்கேசி

பூவார்மலர்[1]கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்தஅன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறு[2]வின்நிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே. 1

மஞ்சைப்போழ்ந்த மதியஞ்[1]சூடும் வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத் தடக்கும்அதுவும் நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும் வேடர்மடவார் இதணம்[2]அதுஏறி
அஞ்சொற்கிளிகள் ஆயோ[3]என்னும் அண்ணாமலையாரே. 2

---

5. [1] காதிலணியும் குண்டலம் [2] மான்

இத்திருப்பதிகம் காய்த்துப் பயன்தராத ஆண்பனையைப் பயன்தரும் பெண்பனையாக மாறும்படியருளியது

1. [1] பொலிவு மிக்க பூக்கள் [2] பசுக்கூட்டம்

2. [1] மேகத்தைக் கிழித்தெழும் திங்கள் [2] பரண் [3] குருவியோப்புவார் புனத்தில் அமைத்த பரண்மீதேறி நின்று எழுப்பும் ஒலி

ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லஅடியார்மேல்
ஊனத்திரளை[1] நீக்கும்அதுவும் உண்மைப்பொருள்
போலும்
ஏனத்திரளோ[2] டினமான்கரடி இழியும்[3]இரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே. 3

இழைத்தஇடையாள்[1] உமையாள்பங்கர் இமையோர்
பெருமானார்
தழைத்தசடையார் விடையொன்றேறித் தரியார்[2]புரமெய்
தார்
பிழைத்தபிடி[3]யைக் காணாதோடிப் பெருங்கைமதவேழம்
அழைத்துத்திரிந்தங் குறங்குஞ்சாரல் அண்ணாமலை
யாரே. 4

உருவில்திகழும் உமையாள்பங்கர் இமையோர்பெரு
மானார்
செரு[1]வில்ஒருகால் வளையவூன்றிச் செந்தீயெழுவித்தார்
பருவிற்[2]குறவர் புனத்திற்குவித்த பருமாமணிமுத்தம்
அருவித்திரளோ டிழியுஞ்சாரல் அண்ணாமலையாரே. 5

---

3. [1] மலங்களை
[2] பன்றிக் கூட்டம்
[3] இறங்கும்
பி-ம். ஊனத்திரளை

4. [1] நூலிழையையொத்த இடையாள்
[2] பகைவர்
[3] தவறிய பெண் யானை

5. [1] போர்
[2] பருத்த வில்
பி-ம். ஊன்றாச் செந்தீ
பி-ம். பருவிக்குறவர்

கோயில் - பண் - குறிஞ்சி

கற்றுங் கெரியோம்பி[1]க் கலி[2]யை வாராமே
செற்றார்[3] வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே. 1

பறப்பை[1]ப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை[2]
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. 2

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்
செய்யா[1] னுறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

---

1. [1] யாக அக்கினியைப் போற்றி
[2] கலியின் கொடுமை
[3] போக்கினவர்களாகிய திருவுடை அந்தணாளர் தில்லை மூவாயிரவர்
பி-ம். பற்றாய் நின்றாரை

2. [1] பறவை வடிவமாகிய யாகவேதிகை
"படுப்பவுய்த்த வான்குலம் பறப்பை கூர்மமாதியும்"-தணிகைப் புராணம்
பி-ம். பறப்பை படுத்
[2] பிடரியிற்றாழ்ந்த சடையுடையான்

3. [1] செம்மேனியான்

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும்[1] பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச்[2] சிற்றம் பலம்மேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே. 4

செல்வ நெடுமாடஞ் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன்[1] கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

திருவீழிமிழலை - திருவிருக்குக்குறள் - பண் - குறிஞ்சி

வாசி[1] தீரவே, காசு[2] நல்குவீர்
மாசி[3]ன் மிழலையீர், ஏச[4] லில்லையே. 1

இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை[1], முறைமை நல்குமே. 2

---

4. [1] மாடத்தின் இறப்புகளைத் தாக்கும் [2] ஒலி நீங்காத

5. [1] ஈசன்

1. [1] நாணய வட்டம் [3] குற்றம்
[2] பொற்காசு [4] பழிப்பு

2. [1] வட்டம் கொள்ளற்குரிய காசு

செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பை[1]கொள் அரவினீர், உய்ய நல்குமே. 3

நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறும் மிழலையீர், பேறும் அருளுமே. 4

காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்[1]
நாமம் மிழலையீர், சேமம் நல்குமே. 5

பொது - திருநீலகண்டம் - பண் - வியாழக்குறிஞ்சி

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை[1] நாடா திருப்பதும் உந்தமக் கூன[2]மன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 1

கா[1]வினை யிட்டுங் குளம்பல தொட்டுங்[2] கனிமனத்தால்
ஏவினை யால்[3]எயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 2

---

3. [1] பாம்பின் படம்

5. [1] புகைத்தீப் புறப்பட்ட கண்ணையுடையீர்—இது சிவனுரை வட்டந்தீரப் பொற்காசு அருளுமாறு பாடியருளியது
பி-ம். கூறுமுமையினீர்
பி-ம். தூமகண்ணினீர்

1. [1] பிழைத்தற்குரிய செயல் [2] குறை

2. [1] சோலை [3] அம்பினைச் செலுத்தும் செயலால்
[2] தோண்டியும்

மூலத்தடம் மூழ்கிய போகங் களும்மற் றெவையும்எல்லாம்
விலைத்தலை யாவணங்[1] கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்[2]தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 3

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்[1]களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங்[2] கழலடைந்தோம்
திண்ணிய[3] தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 4

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் தோளுடையீர்
கிற்[1]றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மை
கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்
தோம்
செற்[2]றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 5

---

3. [1] விலைக்குரிய உரிமையோலை [2] முழங்கி
பி-ம். மிலைத்தலையாவணம்
பி-ம். விச்சாதிரர்களும்
பி-ம். துறந்துன் திருவடி

4. [1] வித்தியாதரர் என்ற தேவகணத்தார் [3] வலிய
[2] இமையாத மூன்று கண்களை உடையீர்

5. [1] திறம் அமைந்து–'கில்' என்பது அடியாய்ப் பிறந்தசொல் [2] கடிந்து

இத்திருப்பதிகம் ஆளுடைய பிள்ளையார் தம்மடியார் திருக்கூட்டத்துடன் திருச்செங்குன்றூரில் எழுந்தருளியிருந்தபொழுது பனிநோயால் வருந்திய அடியார் நலிவுதீரக் கட்டளையிட்டருளியது

திருவீழிமிழலை : பண் - மேகராகக்குறிஞ்சி

வரிசையும் வடவாலின் கிழிருந்தங் கிரிருவர்[1]க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறி[2]
யளித்தோன் நின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசை
கேட்டு
வேரி[3]மலி பொழிற்கிள்ளை[4] வேதங்கள் பொருட்சொல்லும்
மிழலையாமே. 1

பொறி[1]யரவம் அதுசுற்றிப் பொருப்பே[2]மத் தாகப்புத்
தேளிர்[3]கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட கண்டத்தோன்
மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசில்[4] திகழ்ந்தோங்கும் இலைக்
குடை[5]க்கீழ்ச் செய்[6]யார் செந்நெல்
வெறிகதிர்ச்சா மரை[7]யிரட்ட[8] இளஅன்னம் வீற்றிருக்கும்
மிழலையாமே. 2

எழுந்துலகை நலிந்துழலும் அவுணர்கள்தம் புரமூன்றும்
எழிற் கண்நாடி
உழுந்துருளும் அளவை[1]யிெனள் ளெரி[2]கொளவெஞ் சிலை
வளைத்தோன் உறையுங் கோயில்
கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநதம்[3] முகங்காட்டக்
குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்[4]பவளம் வாய்காட்டும் மிழலை
யாமே. 3

---

1. [1] சனகர்முதலிய நான்கு முனிவர்கள்
[2] சைவசன்மார்க்கம்
பி-ம். மடவாலின்
[3] தேன்
[4] கிளிகள்

2. [1] புள்ளி
[2] மலை
[3] தேவர்
[4] தாமரைப் பூவாகிய இருக்கை
[5] பச்சிலையாகிய குடை
[6] வயல்
[7] கதிர்களாகிய சாமரை
[8] பணிமாற

3. [1] கண்ணுடியிலிட்ட உழுந்து உருளும் கால அளவுக்குள் :-மிக்க விரைவுக்குக் காட்டாகக் கூறியது
பி-ம். மெழிற் கண்ணுடி
[2] நெருப்பு
[3] தாமரை
[4] ஒளி

உரைசேரும் எண்பத்து நான்குநூறாயிரமாம் யோனி
பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே
நின்றான் கோயில்
வரை[1]சேரும் முகில்முழவ மயில்கள் பல நடமாட வண்டு
பாட
விரை[2]சேர்பொன்[3] இதழி[4]தர மென்காந்தள் கையேற்கும்
மிழலையாமே. 4

காணுமா றரியபெரு மாணாகிக் காலமாய்க் குணங்கள்
மூன்றாய்[1]ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம் படைத்தளிக்கும்
பெருமான் கோயில்
தாணுவாய்[2] நின்றபர தத்துவனை உத்தமனை யிறைஞ்
சீரென்று
வேணு[3]வார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப போலோங்கு
மிழலையாமே. 5

திருப்பராய்த்துறை - பண் - மேகராகக்குறிஞ்சி

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறு[1]சேர்தலைக் கையர்[2]பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே. 1

---

4. எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம்-எண்பத்து நான்குலக்ஷம் பிறப்பு வகைகள்
"ஸர்வபதி ஞான்றுமொன்பது மானுடம்" என்று தொடங்கும் வெண்பா நோக்கியறிக. திருக்குறள்-பரிமேலழகருரை-குறள்-62
[1] மலை
[2] மணம்
[3] பொன்போன்ற மலர்களைச் சொரிய
[4] கொன்றை
பி-ம். உரைச்சேரும்
பி-ம். நிரைச்சேரும்
பி-ம். வரைச்சேரும்
பி-ம். விரைச்சேரும்

5. [1] சத்துவ, இராசத, தாமதமாய முக் குணங்கள்
[2] பற்றுக்கோடு
[3] மூங்கில்
பி-ம். மூன்னுருவாகி

1. [1] பருந்து
[2] பிரமகபாலத்தைக் கையிலுடையார்

கந்த[1]மாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்த[2]மில்ல அடிகளே. 2

வேதர்வேதமெல் லாம்முறையால்விரித்
தோதநின்ற வொருவனுர்
பாதிபெண்ணுரு ஆவர்பராய்த்துறை
ஆதியாய அடிகளே. 3

தோலுந்தம்அரை[1] யாடைசுடர்விடு
நூலுந்[2]தாமணி மார்பினர்
பாலும்நெய்பயின் ருடுபராய்த்துறை
ஆலநீழல் அடிகளே. 4

---

2. [1] மணம் [2] முடிவு

4. [1] இடை [2] பூணூல்

விரவிநீறுமெய் பூசுவர் மேனிமேல்
இரவில்நின்றெரி யாடுவர்
பரவினா[1]ரவர் வேதம்பராய்த்துறை
அரவ[2]மார்த்த அடிகளே. 5

திருமருகல் - பண் - இந்தளம்

சடையா யெனுமால் சரண்[1]நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழு[2]மால்
மடை[3]யார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே. 1

சிந்தா யெ[1]னுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார்[2] குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே.[3] 2

---

5. [1] வழிபட்டார் [2] பாம்பு

1. [1] புகலிடம் [2] அஞ்சிவிழுவாள் [3] நீர்செல் வாயில்

2. [1] சிந்தையிலிருப்பவனே [2] பூங்கொத்து [3] வருத்தம்

அறையார் கழலும்[1] அழல்வா ய[2]ரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வா யிவளை
இறை[3]யார் வளைகொண் டெழில்வவ் வினை[4]யே. 3

ஒலிநீர்[1] சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. 4

துணிநீ லவண்ணம் முகில்தோன் றியன்ன
மணிநீ லகண்டம் உடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீ லவொண்கண் அயர்வாக் கினை[1]யே. 5

---

3. [1] ஒலித்தல் பொருந்திய கழல் [3] முன்கை
[2] தீப்போன்ற நஞ்சுடைய வாய் [4] கவர்ந்தாய்
பி-ம். உடையாய் பெரியாய்

4. [1] ஈண்டுக்கங்கை

5. [1] மெலிவுசெய்தாய்

திருமறைக்காடு - பண் - இந்தளம்

சதுரம் மறை[1]தான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத்[2] தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங்[3] கருத்தாலே. 1

சங்கந் தரளம் அவைதான் கரைக்கெற்றும்[1]
வங்கக்[2] கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை உமைபா கமுமா கவிதென்கொல்
கங்கை சடைமே லடைவித் தகருத்தே. 2

குரவங்[1] குருக்கத் திகள்புன் னைகள்ஞாழல்[2]
மருவும் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
சிரமும் மலருந் திகழ்செஞ் சடைதன்மேல்
அரவம் மதியோ டடைவித் தவழகே. 3

---

1. [1] திருநான்மறைகள். மறைகள் இறைவனை வழிபட்ட செய்தி குறித்திருப்பது அறிக [2] நடுநிலைகொண்டு [3] அடைத்துக்கொள்ளும்

2. [1] வீசும் [2] மரக்கலம்

3. [1] குராமரம்; குருக்கத்தி-மாதவி; [2] புலிநகக் கொன்றை பி-ம் அரவும்மதியோ

படர்செம் பவளத் தொடுபன் மலர்முத்தம்
மடலம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
உடலம் உமைபங் கமதா கியுமென்கொல்
கடல்நஞ் சமுதா அதுவுண் டகருத்தே. 4

வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனோர் தொழுதேத்த இருந்தநீ யென்கொல்
கானார்[1] கடுவே டுவனா னகருத்தே. 5

திருப்புள்ளிருக்குவேளூர் - பண் - சீகாமரம்

கள்[1]ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம்[2] கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடந்
தள்ளாய[3] சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்[4]ளானார்க் கரைய[5]னிடம் புள்ளிருக்கு வேளூரே. 1

---

5. [1] காடு

இது திருக்கதவம் அடைக்கப் பாடியருளியது

1. [1] தேன்
[2] பொன்னூமத்தை
[3] தளர்ச்சியுடைய
[4] பறவை
[5] அரசன்

பி-ம். புள்ளிருக்கும் வேளூரே

தையலாள் ஒருபாகஞ் சடைமேலாள் அவளோடும்
ஐயந்[1]தேர்ந் துழல்வாரோர் அந்தணனார் உறையுமிட
மெய்சொல்லா இராவணனை மேலோடி யீட[2]ழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. 2

வாசநலஞ் செய்திமையோர்[1] நாள்தோறும் மலர்தூவ
ஈசனெம் பெருமானார் இனிதாக உறையுமிடம்
யோசனை[2]போய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும்
ஒளியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே. 3

மாகாயம்[1] பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய[2]மிட்டுகந்த எரி[3]யாடி உறையுமிடம்
ஆகாயந் தேரோடும் இராவணனை அமரின்கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 4

---

2. [1] பிச்சை [2] பெருமை
பி-ம். தேர்ந்துழல் வானோரந்தணனார்
பின்னிரண்டடிகளில் இராவணன் சீதையை எடுத்தேகுங்கால் நிகழ்ந்ததைக் குறித்தனர்

3. [1] வானோர்கள் [2] நான்கு குரோச அளவு

4. [1] பெருமையாகிய உடம்பில் [3] நெருப்பு
[2] ஏகாசம்-உத்தரீயம்; மேலாடை

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்[1]தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 5

திருவெண்காடு - பண் - சீகாமரம்

கண்காட்டு நுதலானுங்[1] கனல்[2]காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடி
யானே. 1

பேயடையா பிரிவெய்தும்[1] பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ[2] ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளம்[3] நீர்
தோய்வினையார்[4] அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. 2

---

5. [1] சிவஞானம்

1. [1] நெற்றியுடையவன் [2] தீ
பி-ம். பயில்காட்டும் புயல்

2. [1] பேய் பற்றுதற்கு அணுகா; அன்றி முன்னரே பற்றியிருப்பின் பிரிந்து ஓடும் என்க
[2] மூங்கில் ஒத்த தோள்
பி-ம். முக்குளநீர்த்
[3] ஞாயிறு திங்கள் தீயிவற்றின் பெயரெய்திய திருக்குளங்கள்—சிலப்பதிகாரத்திலும் பட்டினப் பாலையினும் குறிக்கப்பட்டுள்ளன
[4] நீராடும் தவச்செயலாளர்

மண்ணொடுநீர் அனல்காலோ[1] டாகாயம் மதியிரவி
எண்ணில்வரும் இயமானன்[2] இகபரமும் எண்டிசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே. 3

விடமுண்ட மிடற்[1]றண்ணல் வெண்காட்டின் தண்புறவி[2]ன்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகெ[3]ன்று
தடம்மண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே. 4

வேலை[1]மலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால்[2] வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்[3] அடியார் என்றடர[4] அஞ்சுவரே. 5

---

3. [1] காற்று. இத்திருப்பாட்டுள் இறைவன் அட்டமூர்த்தம் கூறியிருப்பதை ஓர்க [2] உயிர்

4. [1] கழுத்து [2] காடு [3] நாரை

5. [1] கடல் [2] சந்தனம். பி-ம். வெண்சாந்தால் பி-ம். விண்டவினை [3] நஞ்சையுடைய கழுத்தையுடையவன் [4] தாக்கும்

திருவாலவாய் - பண் - காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர[1] மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாய்[2]மை பங்கன் திருஆல வாயான் திரு
நீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்[1] தருவது நீறு புன்மை[2] தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப்[3] புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 3

---

1. [1] அழகு [2] சிவந்த பவளம்போன்ற திருவாய்
2. [1] சிவஞானம் [2] இழிவு [3] குளிர்ச்சி

காண இனியது நீறு கவினைத்[1] தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந்[2] தகைவது[3] நீறு மதியைத் தருவது நீறு
சேணந்[4] தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 5

திருக்குறும்பலா - பண் - காந்தாரம்

திருந்த மதிசூடித் தெண்ணீர்[1] சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்ாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த
செல்வர்
இருந்த இடம்வினவில் ஏலங்கமழ் சோலையின் வண்டு
யாழ்செய்[2]
குருந்த[3] மணம்நாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்
பலாவே. 1

---

4. [1] அழகு
[2] மாட்சி
[3] பொருத்துவது
[4] வானுலகு

இத்திருப்பதிகம் திருநீற்றின் மாட்சியுரைப்பது

1. [1] தெளிந்த நீரையுடைய கங்கை
[2] யாழின் இன்னோசை போன்று ஒலிக்கும்
[3] புனவெலுமிச்சை

நாட்பலவுஞ் சேர்மதியஞ் சூடிப் பொடி[1]யணிந்த நம்பான்[2]
நம்மை
ஆட்[3]பலவுந் தானுடைய அம்மா னிடம்போலும் அந்தண்
சாரல்
கீட்பலவுங்[4] கீண்டுகிளை கிளையன் மந்தி[5]பாய்ந் துண்டு
விண்ட
கோட்பலவின்[6] தீங்கனியை மாக்கடுவன்[7] உண்டுகளுங்[8]
குறும்பலாவே 2

வாடல் தலைமாலை சூடிப் புலித்தோல் வலித்துவீக்கி[1]
ஆட லரவசைத்த அம்மா னிடம்போலும் அந்தண்சாரல்
பாடற் பெடைவண்டு போதலர்த்தத் தாதவிழ்ந்து பசும்
பொனுந்திக்
கோடன்[3] மணங்கமழுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்
பலாவே. 3

பால்வெண் மதிசூடிப் பாகத்தோர் பெண்கலந்து பாடி
யாடிக்
கால னுடல்கிழியக் காய்ந்தா ரிடம்போலுங் கல்சூழ்வெற்
பில்
நீல மலர்க்குவளை கண்திறக்க[1] வண்டரற்றும் நெடுந்தண்
சாரல்
கோல மடமஞ்ஞை[2] பேடையொ டாட்டயருங்[3] குறும்
பலாவே. 4

---

2. [1] திருநீறு
[2] நம்பன்-சிவன்
[3] அடிமை
[4] தாமே வெடித்த பலாப்பழங்களை யும்
[5] பெண் குரங்கு
[6] காய்க்குலையையுடைய பலாமரம்
[7] ஆண் குரங்கு
[8] தாவும்

3. [1] இறுக்கிக்கட்டி
[2] பேரரும்பு
பி-ம். மணநாறுங்
[3] காந்தள் வகை

4. [1] கண்போல் மலர
[2] மயில்
[3] ஆடுதலைச் செய்யும்

தலைவான் மதியங் கதிர்விரியத் தண்புனலைத் தாங்கித்தேவி
முலைபாகங் காதலித்த மூர்த்தி யிடம்போலும் முதுவேய்[1]
சூழ்ந்த
மலைவாய் அசும்பு[2] பசும்பொன் கொழித்திழியும் மல்குசாரல்
குலைவாழைத் தீங்கனியும் மாங்கனியுந் தேன்பிலிற்றுங்
குறும்பலாவே. 5

திருவாரூர் - பண் - காந்தாரம்

பவனமாய்[1]ச் சோடையாய்[2] நாவெழாப் பஞ்சுதோய்ச்
சட்ட[3] வுண்டு
சிவனதாள்[4] சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கி னா[5]யே
கவன[6]மாய்ப் பாய்வதோர் ஏறுகந் தேறிய காள கண்டன்[7]
அவனதா ரூர்தொழு துய்யலாம் மையல்[8]கொண் டஞ்சல்
நெஞ்சே. 1

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்த[1]வேல் கொண்டொரு கூற்றத்தார்[2] பார்க்கின்றார்
கொண்டுபோவார்.
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால் ஏழை
நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல்
நெஞ்சே. 2

---

5. [1] மூங்கில்
பி-ம். கதிரவிய
பி-ம். மலைவாயசும்பும்
[2] ஊற்று ஒழுக்கு

1. [1] காற்றாய்
[2] வறட்சியாய்
[3] மிகவும்
[4] சிவனார் திருவடிகள் ; அன்றிச் சிவனாருடைய அடிமை
பி-ம். பஞ்சுதோய் சட்ட
பி-ம். வெள்கினாயே
[5] நாணினாய்
[6] விரைவு
[7] நஞ்சையுடைய கழுத்தையுடையவன்
[8] மயக்கம்

2. [1] குத்துதற்கு
பி-ம். எந்தனாள்
[2] இயமன்

நிணங்[1]குடர்[2] தோல்நரம் பென்புசேர் ஆக்கை[3]தான்
நில்லாய[4]தன்ருல்
குணங்களார்க் கல்லது குற்றநீங் காதெனக் குலுங்கி ளுயே
வணங்குவார் வானவர் தானவர் வைகலும் மனங்கொ
டேத்தும்
அனங்கனு[5] ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல்
நெஞ்சே. 3

நீதியால் வாழ்கிலே நாள்செலா நின்றன நித்த நோய்கள்
வாதியா ஆதலால் நாளும்நாள் இன்பமே மருவி ளுயே
சாதியார் கின்னரர்[1] தருமனும் வருணனும் ஏத்தும் முக்
கண்
ஆதியா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல்
நெஞ்சே. 4

பிறவியால் வருவன கேடுள ஆதலாற் பெரிய இன்பத்
துறவி[1]யார்க் கல்லது துன்பநீங் காதெனத் தூங்கி ளுயே
மறவல்[2]நீ மார்க்கமே நண்ணிஞய் தீர்த்தநீர் மல்கு
சென்னி
அறவனு[3] ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல்
நெஞ்சே. 5

---

3. [1] கொழுப்பு
[2] குடல்
[3] உடம்பு
பி-ம். குணங்களாற்
[4] நிலையானது
[5] உமையைப் பாகத்திலுடையவர்

4. [1] இசையில்வல்ல வானேர் வகை
யினர்

5. [1] துறத்தல்
[2] மறத்தல் வேண்டா
[3] அறத்தினுருவாயினேன்

பொது
கோளறுதிருப்பதிகம் - பண் - பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளி[1]பங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல
வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தென் உளமே
புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி சனி
பாம்பிரண்டு[2] முடனே
ஆச[3]று நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு
மிகவே. 1

என்பொ[1]டு கொம்பொ[2]டாமை[3] யிவைமார் பிலங்க எருதேறி
யேழை யுடனே
பொன்பொதி மத்த[4]மாலை புனல்சூடி வந்தென் உளமே
புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு
மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து உமையோடும்
வெள்ளை விடைமேல்
முருக[1]லர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென் உளமே
புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி[2] செயமாது பூமி திசைதெய்வ மான
பலவும்
அருநெதி[3] நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு
மிகவே. 3

---

1. [1] பசுமூங்கில் ஒத்த தோள்களை யுடைய உமையம்மையார் [3] குறை
[2] இராகு கேதுக்கள் ஆகிய கோள்கள்

2. [1] பிரமகளேபரம் [3] ஆமையோடு
[2] பன்றிக்கொம்பு [4] ஊமத்தமலர்
"ஒன்பதொடொன்று" முதலாகக்குறித்த எண்ணுள்ள நட்சத்திரங்கள் தாம் யாத்திரைக்கு விலக்காகிய நாள்கள் என்று சோதிடநூல் கூறுமென்பர். ஈண்டுகுறித்த நாள்களின் முறை அக்காலத்துக்குரியவகையால் கார்த்திகையில் தொடங்கியதென்பர்

3. [1] நறுமணம் [3] நிதி
[2] துர்க்கை

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து மறையோதும்
எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென் உளமே
புகுந்த அதனால்
கொதியுறு காலன்[1] அங்கி[2] நமனோடு தூதர் கொடுநோய்களான
பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு
மிகவே. 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும் விடையேறு
நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி[1] கொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண[2]ரோடும் உரு[3]மிடியும் மின்னும் மிகை
யான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு
மிகவே. 5

சீகாழி - திருவிராகம் - பண் - நட்டராகம்

நம்பொருள் நம்மக்களென்று நச்சி[1] இச்சை செய்துநீர்
அம்பரம்[2] அடைந்துசால அல்லல்[3] லுய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே. 1

---

4. [1] இயமன் [2] தீக்கடவுள்
5. [1] வன்னிமலர் [3] இடி—இருபெயரொட்டு
[2] இராக்கதர்
பி-ம். பூதமெவையும்
1. [1] விரும்பி [3] துன்பம்
[2] வானுலகு

பாவம்மேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்
ஏவ[1]மான செய்துசாவ தன்முனம்மி சைந்துநீர்
தீபமாலை தூபமுஞ் செறிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே. 2

சோறுகூறை[1] யின்றியே துவண்டுதூர மாய்நுமக்
கேறுசுற்றம்[2] எள்க[3]வே யிடுக்க[4]ணுய்ப்ப தன்முனம்
ஆறுமோர் சடையினன் ஆதியானை செற்றவன்
நாறுதேன் மலர்ப்பொழில் நலங்கொள்காழி சேர்மினே. 3

நச்சிநீர் பிறன்கடை[1] நடந்துசெல்ல நாளையும்
உச்சிவம் மெனும்[2]உரை யுணர்ந்துகேட்ப தன்முனம்
பிச்சர்[3]நச் சரவ[4]ரைப் பெரியசோதி பேணுவார்
இச்சைசெய்யும் எம்பிரான் எழில்கொள்காழி சேர்மினே. 4

---

2. [1] எவ்வம்-குற்றம்

3. [1] உடை
[2] உறவினர்
[3] இகழ
[4] துன்பம்

4. [1] பிறன் வீட்டு வாயிற்புறம்
[2] உச்சிப்பொழுதின்கண் வருவீராக என்னும்
[3] பித்தர்
[4] நஞ்சினையுடைய பாம்பையணிந்தவர்

கண்கள்காண்[1] பொழிந்துமேனி கன்றி[2]யொன்ற லாத
நோய்
உண்கிலாமை[3] செய்துநும்மை யுய்த்தழிப்ப தன்முனம்
விண்குலாவு தேவருய்ய வேலைநஞ் சமுதுசெய்
கண்கள்மூன் றுடையவெம் கருத்தர்காழி சேர்மினே. 5

திருநாகைக்காரோணம் - பண் - செவ்வழி

கூனல்[1]திங்கட் குறுங்கண்ணி[2] கான்ற[3]நெடு வெண்ணிலா
ஏனற்பூத்தம் மராங்[4]கோதை[5] யோடும்விரா வுஞ்சடை
வானநாடன் அமரர்பெரு மாற்கிட மாவது
கானல்வேலி கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. 1

விலங்க[1]லொன்று சிலையா[2]மதில் மூன்றுடன் வீட்டினான்[3]
இலங்கு[4]கண்டத் தெழிலாமை பூண்டாற் கிடமாவது
மலங்கி[5]யோங்கிவ் வருவெண்டிரை மல்கிய மால்கடல்
கலங்கலோதங்[6] கழிசூழ் கடல்நாகைக் காரோணமே 2

---

5. [1] காட்சி
[2] வாடி
[3] உண்ணமுடியாமை

1. [1] வளைவு
[2] தலைமாலை
[3] தோற்றிய
[4] ஏனலிடத்தே பூத்துள்ள வெண் கடம்புமலர்
[5] மாலை

2. [1] மலை (மேரு)
[2] வில்லாக
[3] அழித்தான்
[4] விளங்கும்
[5] குழம்பி
[6] கடல் அலை

வெறி[1]கொளாருங் கடற்கைதை[2] நெய்தல்விரி பூம்பொழில்
முறி[3]கொள்ஞாழல் முடப்புன்னை முல்லைம்முகை[4] வெண்
மலர்
நறை[5]கொள்கொன்றைந் நயந்தோங்கும் நாதற் கிடமாவது
கறைகொளோதங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. 3

வண்டுபாடவ் வளர்கொன்றை மாலைம்மதி யோடுடன்
கொண்டகோலங் குளிர்கங்கை தங்குங்குருள்[1] குஞ்சி[2]யுள்
உண்டுபோலும் மெனவைத்து கந்தவ்வொரு வற்கிடம்
கண்டல்[3]வேலி கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. 4

வார்கொள்கோலம் முலைமங்கை நல்லார்மகிழ்ந் தேத்தவே
நீர்கொள்கோலச் சடைநெடு வெண்திங்கள் நிகழ்வெய்
தவே
போர்கொள்சூலப் படைபுல்கு கையார்க் கிடமாவது
கார்கொளோதங் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே. 5

---

3. [1] நறுமணம்
[2] தாழை
[3] தளிர்
[4] அரும்பு
[5] தேன்

4. [1] சுருளும்
[2] தலைமயிர்
[3] தாழை
பி-ம். வண்டுபாட

மூன்றும் திருமுறை

கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்

ஆடினாய்[1] நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம் தொல்வினையே. 1

கொட்ட[1]மேகம ழுங்குழலாளொடு
கூடினாயெரு தேறினாய் நுதற்
பட்டமேபுனைவா யிசைபாடுவ பாரிடமா[2]
நட்ட[3]மேநவில்வாய் மறையோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவா யிவைமேவிய தென்னைகொலோ. 2

நீலத்தார்[1]கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினார்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. 3

---

1. [1] முழுகினாய்
பி-ம். யிடமாய்

2. [1] ஒரு நறுமணப்பொருள் [3] நடனம்
[2] பூதகணம்
பி-ம். நுதல்

3. [1] ஒழுக்கத்தார்
பி-ம். கண்ணினார் பத்துசி

கொம்பலைத்த[1]ழ கெய்திய நுண்ணிடைக்
கோலவாண்மதி போலமுகத்திரண்
டம்பலைத்தகண்ணாள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத்தெழு காமுறுகாளையர்
காதலாற்கழற் சேவடிகைதொழ
அம்பலத்[2]துறை வானடியார்க் கடையாவினையே. 4

தொல்லைஆரமு துண்ணநஞ்சுண்டதோர்
தூமணிமிட றுபகுவாயதோர்
பல்லையார்தலை யிற்பலியேற்றுழல் பண்டரங்கா[1]
தில்லையார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழ
இல்லையாம்வினை தானெரியம்மதி லெய்தவனே. 5

திருக்கொள்ளம்பூதூர்

ஈரடிமேல்வைப்பு - பண் - காந்தாரபஞ்சமம்

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. 1

---

4. [1] பூங்கொம்பு தன்னழகிற் கிடன்று [2] நடனசபை
என்று வருத்தி அம்பு அலைத்த—
அம்புகளை ஈடழித்த.

5. [1] பாண்டரங்கமென்னும் கூத்தினை
யியற்றினவனே!

இதனியல்பை—“மண்டமர் பல கடந்து மதுகையானீறணிந்து
பண்டரங்க மாடுங்கால்”—என்ற கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப்பாவினடியுரை நோக்கியறிக.

கோட்ட கக்[1]கழனிக் கொள்ளம் பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. 2

குலையினர் தெங்குசூழ் கொள்ளம் பூதூர்
விலையி லாட்கொண்ட விகிர்தனை[1] யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. 3

குவளை கண்மலருங் கொள்ளம் பூதூர்த்
தவள[1] நீறணி தலைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. 4

---

2. [1] ஆழ்ந்த நீர்நிலை

3. [1] உலகின் வேறுபட்ட நிலையினன்

4. [1] வெண்மை

கொன்றைபொன் சொரியுங்[1] கொள்ளம் பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. 5

பொது

பஞ்சாக்கரத்திருப்பதிகம் - பண் - காந்தாரபஞ்சமம்

துஞ்ச[1]லுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்[2]
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திரம் நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல்[1] ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தி[2]யுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

---

5. [1] பொன்னிறமலர்களைச் சிந்தும்

1. [1] உறங்குதல் [2] இயமன்
பி-ம். அஞ்ச வுதைப்பன

2. [1] செம்மையான யாகத்தீ [2] அந்திப்பொழுது

ஊனி[1]லு யிர்ப்பை[2] ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தியரெ ஞது நச்சினர்[1]
செல்லல்[2]கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்
தல்லல்[3]கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்[1]கலர் வன்மதன் வா[2]ளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 5

---

3. [1] உடம்பு [2] மூச்சு. இத்திருப்பாட்டில் சிவயோக நெறி கூறியதறிக

4. [1] விரும்பியடைந்தோர் [2] துன்பம் [3] வருத்தம்
பி-ம். சிவமூர்த்தி

5. [1] தேன் [2] அம்புகள்
பி-ம். வண்பொழில்

திருக்கழுமலம் - பண் - கொல்லி

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்[1]
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணி[2]னல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. 1

போதையார்[1] பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார்[2] முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே. 2

தொண்[1]டனை செய்தொழில் துயரறுத் துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகவோர் பெருந்தகை யிருந்ததே. 3

---

1. [1] நாளும் · [2] கூர்ந்துணரின்

2. [1] உண்ணப்படுவதாய் நிரம்பிய. போது செயல்—உண்ணுதல் என்ற பொருளில் 'ஏதலர் நகைசெய விளையவரளை வெண்ணெய், போது செய்தமரிய புளிதர்' என்று திருமங்கையாழ்வார் பாடியதுள் போந்த வழக்கு நோக்கியறிக. இனி ஞானம் எனினுமாம்.
[2] தந்தையார்

3. [1] ஊழியம்

அயர்வு[1]ளோம் என்றுநீ அசை[2]வொழி நெஞ்சமே
நியர்[3]வளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்ததே. 4

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினன் விண்ணவர் தொழுதெழுங்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவ[1]ளொடும் பெருந்தகை யிருந்ததே 5

பொது - நமச்சிவாயத்திருப்பதிகம் - பண் - கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது[1]
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 1

---

4. [1] சோர்வு
[2] வருத்தம்
[3] ஒளி
நியர் நிகர்–விகாரம். நீர்வார் நிகர் மலர் ; (ஒப்பு)

5. [1] அன்னப்பேட்டின் நடைபோலும் நடையுடைய உமையம்மையார்

1. [1] செலுத்துவது.

நம்பு வாரவர் நாவி னவிற்றினுல்[1]
வம்பு[2] நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னூர்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 2

நெக்கு[1] ளார்வ[2] மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலை[3]கொ டங்கையில் எண் ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன்[4] நாமம் நமச்சி வாயவே. 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினுல்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன்[1] நாமம் நமச்சி வாயவே. 4

---

2. [1] அடிப்படச்சொன்னுல் [2] மணம்.
பி-ம். நாமநவிற்றினுல்

3. [1] நெகிழ்ந்து. [3] உருத்திராக்கமணிமாலை.
[2] அன்பு. [4] திருவாணி.

4. [1] கண்ணையுடையான்.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. 5

திருப்பிரமபுரம் - பண் - பஞ்சமம்

இறையவன் ஈசனெந்தை யிமையோர்[1]தொழு தேத்தநின்ற
கறை[2]யணி கண்டன்வெண்தோ டணி காதினன் காலத்தன்று
மறைமொழி வாய்மையினான் மலையாளொடு மன்னு சென்னி[3]ப்
பிறையணி செஞ்சடையான் பிரமாபுரம் பேணுமினே. 1

சடையினன் சாமவேதன் சரிகோவண வன்மழுவாட்
படையினன் பாய்புலித்தோ லுடை யான்மறை பல்கலைநூல்
உடையவன் ஊனமில்லி[1] யுடனாயுமை நங்கையென்னும்
பெடையொடும் பேணுமிடம் பிரமாபுரம் பேணுமினே. 2

1. [1] வானோர் [2] நஞ்சின் கருமை [3] தலை

2. [1] குறையில்லான்

மாணி[1]யை நாடுகாலன் உயிர் மாய்தரச் செற்று[2]க்காளி
காணிய ஆடல்கொண்டான் கலந்தூர்வழி சென்று
பிச்சை
ஊணியல் பாகக்கொண்டங் குடனேயுமை நங்கையொடும்
பேணிய கோயில்மன்னும் பிரமாபுரம் பேணுமினே. 3

பாரிடம் விண்ணுமெங்கும் பயில்நஞ்சுபரந்துமிண்ட[1]ப்
பேரிடர்த் தேவர்கணம் பெருமானிது காஎனலும்[2]
ஓரிடத் தேகரந்தங் குமை நங்கையொ டும்முடனே
பேரிட மாகக்கொண்ட பிரமாபுரம் பேணுமினே. 4

நச்சர வ[1]ச்சடைமேல் நளிர்[2] திங்களு மொன்றவைத்தங்
கச்சமெ ழவிடைமேல் அழகார்மழு வேந்திநல்ல
இச்சைபகர்ந்துமிக இடு மின்பலி யென்றுநாளும்
பிச்சைகொள் அண்ணல்நண்ணும் பிரமாபுரம் பேணு
மினே. 5

---

3. [1] பிரமசாரியாகிய மார்க்கண்டேயன் [2] சினந்து

4. [1] நெருங்க. [2] இதுகா எனலும்—
இதனினின்றும் காப்பாற்றுக
என்று வேண்டிய அளவில்

5. [1] நஞ்சையுடைய பாம்பு [2] குளிர்ச்சி

திருவைகாவூர் - பண் - சாதாரி

கோழைமிட றுக[1]கவி கோளுமில வாக[2]இசை கூடும்வகை
யால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசனிட
மாம்
தாழை[3]யிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறு[4]சிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறு செயும் வைகா
விலே. 1

அண்டமுறு மேருவரை[1] யங்கி[2]கணை[3] நாணரவ தாகஎழி
லார்
விண்டவர்[4]தம் முப்புரமெ ரித்தவிகிர் தன்னவன்வி ரும்பு
மிடமாம்
புண்டரிக[5] மாமலர்கள் புக்குவிளை யாடுவயல் சூழ்தட
மெலாம்
வண்டினிசை பாடஅழ கார்குயில்மி ழற்றுபொழில்
வைகாவிலே. 2

ஊனமில ராகியுயர் நற்றவமெய் கற்றவையு ணர்ந்தஅடி
யார்
ஞானம்மிக நின்றுதொழ நாளுமருள் செய்யவல நாத
னிடமாம்
ஆனவயல் சூழ்தருமல் லூழி[1]யரு கேபொழில்கள் தோறும்
அழகார்
வானமதி யோடுமழை நீள்முகில்கள் வந்தணவும்[2] வைகா
விலே. 3

---

1. [1] கோழை பொருந்தியமையால் இசைக்குப் பொருந்தாத குரலாகவும்
[2] பாட்டுப் பொருட்பொலிவும் இல்லாததாகவும்
[3] தென்னை [4] காய்க்குலை

2. [1] மலை [4] பகைவர்
[2] நெருப்பு [5] தாமரை
[3] அம்பு

3. [1] நீர் நிலை [2] நெருங்கும்
பி-ம். வினைபோம் வகை

இன்னவுரு இன்னநிறம் என்றறிவ தேலரிது நீதிபலவும்
தன்னவுரு[1] வாமெனமி குத்ததவன் நீதியொடு தானமர்
விடம்
முன்னைவினை போம்வகையி னல்முழு துணர்ந்துமுயல்
கின்றமுனிவர்
மன்னஇரு போதுமரு வித்தொழுது சேரும்வயல் வைகா
விலே. 4

வேதமொடு வேள்வி[1]பல வாயினமி குத்துவிதி யாறுசமயம்[2]
ஓதியுமு ணர்ந்துமுள தேவர்தொழ நின்றருள்செ யொருவ
னிடமாம்
மேதகைய கேதகை[3]கள் புன்னையொடு ஞாழலவை மிக்க
அழகால்
மாதவிம ணங்கமழ வண்டுபல பாடுபொழில் வைகா
விலே. 5

திருவெங்குரு - திருமுக்கால் - பண் - சாதாரி

விண்ணவர் தொழுதெழு வெங்குரு[1] மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீருமை தொழுகழல்
எண்ணவல் லாரிடர் இலரே. 1

---

4. [1] தன்னுடைய வடிவு

5. [1] யாகம் [3] தாழை
[2] அறுவகை மதங்கள்

1. [1] சீகாழியின் பன்னிரு பெயர்களுள் ஒன்று

வேதியர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆதிய அருமறை யீரே
ஆதிய அருமறை யீருமை யலர்கொடு
ஓதிய[1] ருணர்வுடை யோரே. 2

விளங்குதண் பொழிலணி வெங்குரு மேவிய
இளம்பிறை யணிசடை யீரே
இளம்பிறை யணிசடை யீரும திணையடி
உளங்கொள உறுபிணி யிலரே. 3

விண்டலர் பொழிலணி வெங்குரு மேவிய
வண்டமர் வளர்சடை யீரே
வண்டமர் வளர்சடை யீருமை வாழ்த்துமத்
தொண்டர்கள் துயர்பிணி யிலரே. 4

---

2. [1] மலர்கொண்டு வழிபட்டுத் திருப்பெயர் சாற்றியவர்கள்

மிக்கவர் தொழுதெழு வெங்குரு மேவிய
அக்கி[1]னொ டரவசைத் தீரே
அக்கினொ டரவசைத் தீரும தடியிணை
தக்கவர் உறுவது தவமே. 5

திருக்கழுமலம் - பண் - புறநீர்மை

மடல்மலி கொன்றை துன்றுவா ளெருக்கும்[1] வன்னியும்
மத்த[2]முஞ் சடைமேற்
படலொலி திரைகள் மோதிய கங்கைத் தலைவனார் தம்
மிடம் பகரில்
விடலொலி பரந்த வெண்டிரை முத்தம் இப்பிகள்
கொணர்ந்துவெள் ளருவிக்
கடலொலி யோதம் மோதவந் தலைக்குங் கழுமல நகரென
லாமே 1

மின்னிய அரவும் வெறி[1]மலர் பலவும் விரும்பிய திங்களுந்
தங்கு
சென்னிய துடையான் தேவர்தம் பெருமான் சேயிழை
யொடும்உறை விடமாம்
பொன்னியல் மணியு முரிகரி மருப்பு[2]ஞ் சந்தமும்[3] உந்து
வன்றிரைகள்
கன்னிய ராடக் கடலொலி மலியுங் கழுமல நகரென
லாமே. 2

---

5. [1] அக்கமாலை

1. [1] ஒளி பொருந்திய எருக்கமலரும் [2] ஊமத்த மலர்

2. [1] மணம் [3] சந்தனமரம்
[2] யானைக்கொம்புகள்

சீருறு தொண்டர் கொண்டடி போற்றச் செழுமலர் புன
லொடு தூபந்
தாருறு கொன்றை தம்முடி வைத்த சைவனர் தங்கிட
மெங்கும்
ஊருறு பதிகள் உலகுடன் பொங்கி யொலிபுனல் கொள
வுடன் மிதந்த
காருறு செம்மை நன்மையால் மிக்க கழுமல நகரென
லாமே. 3

மண்ணினு ரேத்த வானுளார் பரச[1] அந்தரத்[2] தமரர்கள்
போற்றப்
பண்ணினு ரெல்லாம் பலபல வேட முடையவர் பயில்விட
மெங்கும்
எண்ணினல் மிக்கார் இயல்பினல் நிறைந்தார் ஏந்திழை
யவரொடு மைந்தர்
கண்ணினல் இன்பங் கண்டொளி பரக்குங் கழுமல நக
ரெனலாமே. 4

சுருதியான்[1] தலையும் நாமகள்[2] மூக்குஞ் சுடரவன்[3] கரமு
முன்னியங்கு
பரிதியான்[4] பல்லும் இறுத்தவர்க் கருளும் பரமனர் பயின்
றினி திருக்கை
விருதினன் மறையும் அங்கமோ ராறும் வேள்வியும் வேட்
டவர் ஞானங்
கருதினு ருலகிற் கருத்துடை யார்சேர் கழுமல நகரென
லாமே. 5

---

4. [1] பரவ [2] மேலுலகு

5. [1] மறையவஞகிய பிரமன் [3] அக்கினி
[2] கலைமகள் [4] சூரியன்

இவர்கள் நால்வரும் தக்கன் வேள்விச்சாலையில் சிவபெருமானுரால் ஒறுக்கப்பெற்றனர் என்ற செய்தியைத் திருவாசகம்-திருவுந்தியாருள் வரும் பாடல்களால் அறிக.

நான்காம் திருமுறை

திருவதிகை வீரட்டானம் - பண் - கொல்லி

கூற்றா[1]யின வாறு விலக்ககிலீர்
    கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றா[2]யடிக் கேயிர வும்பகலும்
    பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படி[3]யே
    குடரோடு துடக்கி[4] முடக்கியிட
ஆற்றே[5]னடி யேனதி கைக்கெடில
    வீரட்டா ன[6]த்துறை யம்மானே. 1

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
    நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன்
    வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
    நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சே[1]லு மென்னீ ரதிகைக்கெடில
    வீரட்டா னத்துறை யம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்ற[1]வல்லீர்
    படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றார்
    சுடுகின்றது சூலை[2] தவிர்த்தருளீர்
பிணிந்தார்[3]பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
    பெற்ற[4]மேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேளதி கைக்கெடில
    வீரட்டா னத்துறை யம்மானே. 3

---

1. [1] இயமன்
   [2] எருதினை ஊர்தியாக உடைய பெருமானே
   [1] உள்ளிடம்
   [4] பிணித்து
   [5] பொறுக்கமாட்டேன்
   [6] (வீரஸ்தானம்) சிவனார் வீரம் புலப்படுக்கப்பட்ட இடங்கள். மூலஸ்தானம், மூலட்டானம் என வழங்குவதுபோல வழக்கெய்தியது

2. [3] அஞ்சாதே

3. [1] ஒட்ட
   [2] வயிற்றுநோய்
   [3] இறந்துபட்ட தேவர்
   [4] ஈண்டுப் பொதுமை நீங்கி 'எருதினை'க் குறிக்கும்

முன்னம்அடி யேனறி யாமையினுன்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்[1]பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 4

காத்தாள்பவர் காவ லிகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்[1]புக நூக்கியிட[2]
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்[3]புன லாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 5

திருவையாறு - பண் - காந்தாரம்

மாதர்[1]ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொ[2]டு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு[3] படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 1

---

4. 1 அடிமை

5. 1 நீந்துதற்குரிய ஆழமான நீர்நிலை 3 ஒலித்து நிரம்பிய
2 தள்ளிவிட

இது சிவபெருமான் ஆளுடை அரசுகளுக்குச் சூலை தீர்த்த காலை பாடியருளியது.

1. 1 அழகு 3 காலடிக்குறி
2 மலர்

போழி[1]ளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா
வருவேன்
ஆழி வலவனின்[2] றேத்தும் ஐயா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்
டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்
டேன். 2

எரி[1]ப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளொடும் பாடி
முரித்த விலயங்[2]க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்
அரித்தொ ழுகும்[3]வெள் ளருவி ஐயா றடைகின்ற போது
வரிக்குயில் பேடையொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்
டேன். 3

பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும்
பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழு
வேன்
அறையிளம் பூங்குயி லாலும் ஐயா றடைகின்ற போது
சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்
டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்
டேன். 4

---

2. [1] துண்டமாகிய பிறை—ஆகுபெயர் [2] சக்கரப் படையையுடைய திருமால்
பி-ம். வாழியெம் போற்றி
பி-ம். வட்டமிட்டாட

3. [1] ஒளி [3] அறுத்துச்செல்லும்
[2] கூத்து

ஏடு[1] மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 5

திருவாரூர்—பழமொழி - பண் - காந்தாரம்

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த[1] மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறி[2] தூக்கி யுழிதந்[3] தென் னுள் ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூரரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே. 1

என்பிருத்தி[1] நரம்புதோல் புகப்பெய்திட்[2] டென்னையோ ருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென் னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த வாரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே. 2

---

5. [1] பெருமை

1. [1] பூசிய
[2] சமண முனிவர் அமர்தற்குக் கொண்டுசெல்லும் உறிக்கயிறு
[3] திரிந்து

2. [1] எலும்பு
[2] வைத்து
பி-ம். காக்கைபின்

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங் குண்டர்கள்[1]
தஞ் சொல்லே கேட்டு
உருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத்
தள்ளிப் போக்கி
அருகுவித்துப்[2] பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த
வாரூ ரர்தம்
அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம் விலைக்குக்
கொண்ட வாறே. 3

குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார் [3]நகைநாணா
துழிதர் வேனைப்
பண்ட[1]மாப் படுத்தென்னைப் பால்தலையிற் றெளித்துத்தன்
பாதங் காட்டித்
தொண்டெலா மிசைபாடத் தூமுறுவ லருள்செய்யு
மாரூரரைப்
பண்டெலா மறியாதே பனிநீராற் பரவைசெயப் பாவித்
தேனே. 4

துன்[1]னாகத்[2] தேனாகித் துர்ச்சனவர்[3] சொற்கேட்டுத் துவர்[4]
வாய்க் கொண்டு
என்னாகத் திரிதந்தீங் கிருகையேற் றிடவுண்ட ஏழை
யேனான்
பொன்னாகத் தடியேனைப் புகப்பெய்து பொருட்படுத்த
வாரூரரை
என்னாகத் திருத்தாதே யேதன்[5]போர்க் காதனா[6] யகப்பட்
டேனே. 5

---

3. [1] இழிந்தோர் ஆகிய சமணர் [2] அணுகச்செய்து

4. [1] பயன் [3] சிரிப்பு
பி-ம். பாவை செய

5. [1] அணுகும் [4] துவர்க்காய் ; பாக்கு
[2] உடல் [5] பகைவன்
[3] நியமக்கள் [6] அறிவிலான்
பி-ம். வுண்டேனேழையேன்

பொது - பண் - பியந்தைக்காந்தாரம்

சிவனெனு மோசை யல்ல தறையோ[1] வுலகிற் றிருநின்ற
செம்மை யுளதே
அவனுமோ ரைய முண்ணி[2] யத[3]ளாடை யாவததன்
மேலோ ராட லரவம்
கவணள வுள்ள வுள்கு கரிகாடு கோயில் கல[4]னுவ தோடு[5]
கருதில்
அவனது பெற்றி கண்டு மவனிர்மை கண்டு மகனேர்வர்
தேவ ரவரே. 1

விரிகதிர் ஞாயி றல்லர் மதியல்லர் வேத விதியல்லர்
விண்ணு நிலனும்
திரிதரு வாயு வல்லர் செறுதீயு மல்லர் தெளிநீரு மல்லர்
தெரியில்
அரி[1]தரு கண்ணி யாளை யொருபாக மாக அருள்கா
ரணத்தில் வருவார்
எரியர வார[2] மார்ப ரிமையாரு[3] மல்ல ரிமைப்பாரு[4] மல்ல
ரிவரே. 2

தேய்பொடி வெள்ளை பூசி யதன்மேலொர் திங்கள் திலகம்
பதித்த நுதலர்
காய்கதிர் வேலை நீல வொளி[1]மா மிடற்றர் கரிகாடர்
காலொர் கழலர்
வேய்[2]ட ணுடு தோளி யவள்விம்ம வெய்ய மழுவீசி வேழ
வுரி[3]போர்த்
தேயிவ ராடு மாறு மிவள்காணு மாறு மிதுதா னிவர்க்கொ
ரியல்பே. 3

---

1. [1] வெற்றி பற்றிவரும் குறிப்புச். சொல் "அறையோ அறிவார்க்கனைத் துலகும்"—திருவாசகம் (ஒப்பு)

[2] பிச்சையுண்போன் — [4] உண்கலம்
[3] தோல் — [5] பிரம கபாலம்
பி-ம். வுள்ளவழ்கு
பி-ம். அவணீர்மை
பி-ம். அகநேர்வர்

2. [1] செவ்வரி — [3] தேவர்
[2] தீப்போன்ற நஞ்சையுடைய பாம்பு ஆகிய மாலை — [4] மாநுடர்
பி-ம். செறீதி

3. [1] கடலிற் பிறந்த நஞ்சத்தின் கறையாலாகிய கரிய வண்ணம்
[2] மூங்கில் — [3] யானைத்தோல்

வளர்பொறி[1] யாமை புல்கி வளர்கோதை வைகி
வடிதோலு நூலும் வளரக்
கிளர்பொறி நாக மொன்று மிளிர்கின்ற மார்பர் கிளர் காடு
நாடு மகிழ்வர்
நளிர்பொறி மஞ்ஞை[2]யன்ன தளிர்போன்ற சாயலவள்
தோன்று வாய்மை பெருகிக்
குளிர்பொறி வண்டுபாடு குழலா ளொருத்தி யுள்போல்
குலாவி யுடனே. 4

உறைவது காடு போலு முரிதோ லுடுப்பர் விடையூர்வ
தோடு கலனு
இறையிவர் வாழும் வண்ண மிதுவேலு மீச ரொருபா
லிசைந்த தொருபால்
பிறைநுதல் பேதை மாத ருமையென்னு நங்கை பிறழ்
பாட நின்று பிணைவான்
அறைகழல் வண்டு பாடு மடிநீழ லாணை கடவா தமர
ருலகே. 5

திருவங்கமாலை - பண் - சாதாரி

தலையே நீவணங்காய்—தலை மாலை[1] தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீவணங்காய். 1
கண்காள் காண்மின்களோ—கடல் நஞ்சுண்ட கண்டன்
றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான் றன்னைக் கண்காள்
காண்மின்களோ. 2

---

4. [1] புள்ளி [2] மயில்
பி-ம். விளரக்
5. பி-ம். வண்ண மிதுபோலும்
பி-ம். பிறழ்பாடனின்று

1. [1] தலையிற்சூடும் கண்ணி
பி-ம். செம்பவளம்

செவிகாள் கேண்மின்களோ—சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதுஞ் செவிகாள்
கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய்[1]—முதுகாடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய்—மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை வாயே
வாழ்த்து கண்டாய். 5

நெஞ்சே நீநினையாய்—நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை[1] மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர்—கடிமாமலர் தூவிநின்று
பைவாய்[1]ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள்
கூப்பித்தொழீர். 7

ஆக்கை[1] யாற்பயனென்—அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டி[2]ப் போற்றி யென்னாதவிவ் ஆக்கை
யாற்பயனென். 8

---

4. [1] குழலோசை செய்வாய்
பி-ம். நினைவாய்

6. [1] மேகம் சூழ்மலை

7. [1] படத்தோடுகூடிய வாய்

8. [1] உடம்பு [2] இட்டு

கால்க ளாற்பயனென்—கறைக் கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்[1]சூழாக் கால்களாற்
பயனென். 9

உற்று ராருளரோ—உயிர் கொண்டு போம்பொழுது
குற்று லத்[1]துறை கூத்தனல் லால்நமக் குற்றாருளரோ. 10

இறுமாந் திருப்பன்[1]கொலோ—ஈசன் பல்கணத் தெண்
ணப்பட்டுச்
சிறுமானேந்தி[2]தன் சேவடிக்கீழ்ச் சென்றங்கிறுமாந்திருப்
பன் கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன்—திரு மாலொடு நான்முகனும்
தேடித்தேடொணாத் தேவனையென் னுளே தேடிக்கண்டு
கொண்டேன். 12

பொது - விடந்தீர்த்ததிருப்பதிகம் - பண் - இந்தளம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது[1] தானே. 1

---

9. [1] மலைநாட்டிலுள்ள ஒரு சிவதலம்

10. [1] திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஒரு சிவதலம்

11. [1] செருக்குடனிருப்பேன்

[2] சிறு மானைக் கையில் ஏந்திய சிவபிரான்

1. [1] ஏறுவதாகிய எருது

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை[1] பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ் ரெய்தின தாமே. 2

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வின்னாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே. 3

நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்[1]முதற் றோற்றமும்
நாலுகொ லாமவ ரூர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடின தாமே. 4

---

2. [1] காதிலணியும் குண்டலம்
பி-ம். யிவரெய்தினர்
பி-ம். எய்தனர்

4. [1] நால்வகைப் பிறப்புக்கள் : அவை அண்டசம், சராயுசம், உத்பிச்சம், சுவேதசம் என்பர்

அஞ்சுகொ லாமவ ராடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல ஞவன[1]
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்[2]கணை[3]
அஞ்சுகொ லாமவ ராடின[4] தாமே. 5

திருவாரூர் - பண் - சீகாமரம்

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்[1]தின் கீழானை நான்கண்ட தாரூரே. 1

பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்கவூர்ப் பிச்சையேற் றுண்டு பொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின் றூவல்[1] கொடியெடுத்த கோவணத்தோ
டக்க[2]ணிந்த அம்மானை நான்கண்ட தாரூரே. 2

---

5. [1] சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
[2] அவரால் எரிக்கப்பட்டவனாகிய மன்மதன்
பி-ம். ஆடினர்
[3] ஐவகை மலரம்புகள்
[4] அவர் திருமுழுக்குக் கொண்டவை: அவை ஆனிடத்துண்டாம் பால், தயிர், நெய் முதலியவை.

சூழாக வீழருவிக்குன்றெத்த குங்குமஞ்சேர் கோலத்தோள் எட்டுடையானை என இயைக்க

1. [1] ஆலமரம்

2. [1] இறகு [2] எலும்பு

சேய உலகமுஞ் செல்சார்வு மானானை
மாயப்போர் வல்லானை மாலைதாழ் மார்பனை
வேயொத்த தோளியர்தம் மென்முலைமேற் றண்சாந்தின்
ஆயத்[1] திடையானை நான்கண்ட தாரூரே. 3

ஏறேற்ற மாவேறி யெண்கணமும்[1] பின்படர
மாறேற்றார்[2] வல்லரணஞ்[3] சீறி மயானத்தில்
நீறேற்ற மேனியனாய் நீள்சடைமேல் நீர்ததும்ப
ஆறேற்ற அந்தணனை நான்கண்ட தாரூரே. 4

தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் ஏறேறிப்
பாங்கான வூர்க்கெல்லாஞ் செல்லும் பரமனார்
தேங்காவி[1] நாறுந் திருவாரூர்த் தொன்னகரில்
பூங்கோயி[2] லுண்மகிழ்ந்து போகா திருந்தாரே. 5

---

3. [1] கூட்டம்

4. [1] எட்டுவகைத் தேவ கணத்தார் [3] கோட்டைகள்
[2] பகைமை மேற்கொண்டவர்கள்

5. [1] குவளை
பி-ம். தென்னகரில்
[2] பூங்கோயில் திருவாரூர்த் திருக்கோயிலின் பெயர்

கோயில் - பண் - கொல்லி

செஞ்சடைக் கற்றை முற்றத்[1] திளநிலா எறிக்குஞ் சென்னி
நஞ்சடை கண்ட னரைக் காணலா நறவ[2] நாறும்
மஞ்ச[3]டை சோலைத் தில்லை மல்குசிற் றம்ப லத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடு மாறே. 1

எறனு[1] ரேறு தம்பா லிளநிலா எறிக்குஞ் சென்னி
ஆறனு ராறு சூடி ஆயிழை யா[2]ளோர் பாக
நாறுபூஞ் சோலைத் தில்லை நவின்றசிற் றம்ப லத்தே
நீறுமெய் பூசிநின்று நீண்டெரி யாடு மாறே. 2

சடையனூர் சாந்த நீற்றர் தனிநிலா எறிக்குஞ் சென்னி
உடையனு ருடைதலையி லுண்பதும் பிச்சை யேற்றுக்
கடி[1]கொள்பூந் தில்லை தன்னுட் கருதுசிற் றம்ப லத்தே
அடிகழ லார்க்க நின்று அனலெரி யாடு மாறே. 3

---

1. [1] முன்னிடம் [3] மேகம்
[2] தேன்
பி-ம். துளங்கிருளாடுமோட்டே

2. [1] எருதை ஊர்தியாக உடையார்
[2] ஆய்ந்த அணிகளையுடைய உமையம்மையார்

3. [1] நறுமணம்

கோயில் - பண் - கொல்லி

பத்தனைப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி
எத்தினாற்[1] பத்தி செய்கே னென்னைநீ யிகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடு கின்ற
அத்தா[2]வுன் னாடல் காண்பா னடியனேன் வந்த வாறே. 1

கருத்தனைப் பாட மாட்டேன் காம்பன[1] தோளி பங்கா
ஒருத்தரா லறிய வொண்ணாத் திருவுரு வுடைய சோதி
திருத்தமாந் தில்லை தன்னுள் திகழ்ந்தசிற் றம்ப லத்தே
நிருத்தம்[2]நான் காண வேண்டி நேர்பட வந்த வாறே. 2

திருக்குறுக்கைவீரட்டம் - பண் - கொல்லி

ஆதியிற் பிரம னார்தாம் அர்ச்சித்தா ரடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவ ருணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார்[1] பல்பூக்
கோதிவண் டறையுஞ் சோலைக் குறுக்கைவீ ரட்ட னாரே. 1

---

1. [1] எதனால் [2] தந்தையே.
பி-ம். இகழவேண்டா

2. [1] மூங்கிலை யொத்த [2] நடனம்

1. [1] உரையாற்கூற ஒண்ணாதவாறு கடந்து நின்றவர்

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டும் அந்தண னா[1]ரைக் கொல்வான்
சாற்றுநா ளற்ற தென்று தருமரா சற்[2]காய் வந்த
கூற்றி[3]னைக் குமைப்பர்[4] போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. 2

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர[1] மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. 3

சிலந்தி[1]யும் ஆனைக் கா[2]விற் திருநிழற் பந்தர் செய்து
உலந்த[3]வண் இறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. 4

---

2. [1] மார்க்கண்டேயர்
[2] இயமன்
[3] அவன் ஏவலன்
[4] அழிப்பர். இதில் கூற்றுதைத்த செய்தியுள்ளது

பி-ம். சாற்றினாளற்ற

3. [1] இலிங்கம். இத்திருப்பாட்டில் சேய்ஞலூர்ப் பிள்ளையார் சண்டேசுரபதம் பெற்ற செய்தி குறித்தது அறிக.

4. [1] சிலந்திப் பூச்சி
[2] திருவானைக்கா என்ற தலம்
[3] முடிந்து. இதில் கோச்செங்கட்சோழ நாயனார் பிறப்புச் செய்தி கூறியதறிக.

ஏறுட னேழ டர்த்தா[1] னெண்ணியா யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை அர்ச்சித்தா னடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோ ராழி[2] யீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. 5

கல்லினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்[1]
நெல்லினார் சோறு ணாமே நீள்விசும் பாள வைத்தார்
எல்லி[2]யாங் கெரிகை யேந்தி எழில்திகழ் நட்ட மாடிக்
கொல்லி[3]யாம் பண்ணு கந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. 6

திருவாவடுதுறை - திருநேரிசை

மாயிரு ஞால மெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப்[1] படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்[2]க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலு மாவடு துறைய னாரே. 1

---

5. [1] ஏழு எருதுகளை அடக்கி வென்றவன் ஆகிய கண்ணன்

[2] சக்கரப்படை. இதில் திருமால் சிவனாரை ஆயிரநாண் மலரிட்டு அருச்சித்த செய்தி கூறியதறிக.

பி-ம். கண்ணையீண்டக்

6. [1] பௌத்த சமயியாயிருந்து பின் சைவ சமயியான தொண்டர்

[2] இராப்பொழுது

[3] ஒரு பண்

பி-ம். சோறுணமை

1. [1] பரவுகின்ற பெரிய கங்கையாறு

[2] சீகாழியில் தோன்றிய திருஞானசம்பந்தர். இத்திருப்பாட்டில் ஞானசம்பந்தர்க்குச் சிவனார் ஆயிரம்பொன் அளித்த அருட்செயல் கூறியதறிக

மடந்தைபா கத்தர் போலும் மான்மறிக் கையர் போலும்
குடந்தை[1]யிற் குழகர்[2] போலுங் கொல்புலித் தோலர்
போலும்
கடைந்தநஞ் சுண்பர் போலுங் காலனைக் காய்வர் போலும்
அடைந்தவர்க் கன்பர் போலு மாவடு துறைய னாரே. 2

உற்றநோய் தீர்ப்பர் போலும் உறுதுணை யாவர் போலும்
செற்றவர் புரங்கள் மூன்றுந் தியெழச் செறுவர் போலும்
கற்றவர் பரவி யேத்தக் கலந்துலந் தலந்து பாடும்
அற்றவ[1]ர்க் கன்பர் போலு மாவடு துறைய னாரே. 3

திருவாலவாய் - திருநேரிசை

வேதியா[1] வேத கீதா விண்ணவ ரண்ணு வென்றென்
ஞேதியே மலர்கள் தூவி யொருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ்
சூடும்
ஆதியே ஆல வாயி லப்பனே யருள்செ யாயே. 1

---

2. [1] கும்பகோணம் [2] அழகர்

3. [1] பற்றில்லார்

பி-ம். கலந்துலந்தலர்ந்து

1. [1] கடவுளே

நம்பனே நான்மு கத்தாய் நாதனே ஞான மூர்த்தி
என்பொனே யீசா வென்றென் றேத்திநா னேசற்[1] றென்றும்
பின்பினே திரிந்து நாயேன் பேர்த்தினிப் பிறவா வண்ணம்
அன்பனே யால வாயி லப்பனே யருள்செ யாயே. 2

ஒருமருந் தாகி யுள்ளா யும்பரோ[1] டுலகுக் கெல்லாம்
பெருமருந் தாகி நின்றாய் பேரமு தின்சு வையாய்க்
கருமருந்[2] தாகி யுள்ளா யாளும்வல் வினைகள் தீர்க்கும்
அருமருந் தால வாயி லப்பனே யருள்செ யாயே. 3

தனித்திருநேரிசை

தொண்டனேன் பட்ட தென்னே தூயகா விரியின் நன்னீர்
கொண்டிருக் கோதி[1] யாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி
இண்டை[2]கொண் டேற நோக்கி யீசனை யெம்பி ரானைக்
கண்டினைக்[3] கண்டி ராதே காலத்தைக் கழித்த வாறே. 1

---

2. [1] விருப்புற்று

3. [1] வானோர் [2] பிறப்பை நீக்கும் மருந்து

1. [1] வேதமந்திரங்களைக் கூறி [3] கற்கண்டு
[2] மாலை

பின்னிலேன் முன்னி லேன்நான் பிறப்பறுத் தருள்செய்
வானே
என்னிலேன் நாயி னேனு னிளங்கதிர்ப் பயலை[1]த் திங்கள்
சின்னிலா எறிக்குஞ் சென்னிச் சிவபுரத் தமர ரேறே
நின்னலால் களைகண்[2] ஆரே நீறுசே ரகலத் தானே. 2

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்
போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவா[1] ருள்கிற்[2] றெல்லா முடனிருந் தறிதி யென்று
வெள்கினேன்[3] வெள்கி நாணும் விலாவிற[4]ச் சிரித்திட்
டேனே. 3

உடம்பெனும் மனை[1]ய கத்து ளுள்ளமே தகளி[2] யாக
மடம்படும் உணர்[3]நெய் யட்டி[4] யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தியா லெரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை[5] தாதை கழலடி காண லாமே. 4

---

2. [1] (பசலை)—இளமை
[2] பற்றுக்கோடு

3. [1] நினைப்பவர்
[2] நினைப்புக்கள்
[3] நாணமுற்றேன்
[4] விலாவெலும்பு ஒடியுமாறு

4. [1] வீடு
[2] விளக்கேற்றும் அகல்
[3] அறிவு
[4] இட்டு
[5] கடம்ப மலர்களை விரும்பியணியும் முருகவேள்

வஞ்சப்பெண் ணரங்கு கோயில் வாளெயிற் றரவந் துஞ்சா
வஞ்சப்பெண் ணிருந்த சூழல் வான்தவழ் மதியந் தோயும்
வஞ்சப்பெண் வாழ்க்கை யாளன் வாழ்வினை வாழ லுற்று
வஞ்சப்பெண் ணுறக்க மானேன் வஞ்சனே னென்செய்
கேனே. 5

குறைந்ததிருநேரிசை

வென்றிலேன் புலன்க ளைந்தும் வென்றவர் வளாகந்[1]
தன்னுள்
சென்றிலே னாதலாலே செந்நெறி[2] யதற்குஞ் சேயேன்[3]
நின்றுளே துளும்பு கின்றேன்[4] நீசனேன் ஈச னேயோ
இன்றுளேன் நாளை யில்லே னென்செய்வான் தோன்றி
னேனே. 1

கற்றிலேன் கலைகள் ஞானங் கற்றவர் தங்க ளோடும்
உற்றிலே னாதலாலே உணர்வுக்குஞ் சேய னானேன்
பெற்றிலேன் பெருந்த டங்கண் பேதைமார் தமக்கும்
பொல்லேன்
எற்றுளேன்[1] னிறைவ னேநா னென்செய்வான் தோன்றி
னேனே. 2

---

5. பி-ம். மந்சனே யென்செய்கேனே

1. [1] இருப்பிடம் [3] தூரத்திலுள்ளவன்
[2] சன்மார்க்கம் [4] உள்ளத்தில் வருந்துகின்றேன்
பி-ம். விளாகந்
பி-ம். சென்னெறி
பி-ம். யதற்குச்சேயேன்

2. [1] எத்தன்மை யுள்ளேன்

மாட்டினேன் மனத்தை முன்னே மறுமை[1]யையுணர
மாட்டேன்
மூட்டிநான் முன்னை நாளே முதல்வனை வணங்க மாட்
டேன்
பாட்டினாய் போல நின்று பற்றதாம் பாவந் தன்னை
ஈட்டினேன் களைய மாட்டே னென்செய்வான் தோன்றி
னேனே. 3

கோயில் - திருவிருத்தம்

பாளை யுடைக்கமு கோங்கிப் பன்மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயல் தில்லைதன்னுள்
ஆள வுடைக்கழற்[1] சிற்றம் பலத்தர னாடல்கண்டால்
பீளை[2] யுடைக்கண் களாற்பின்னைப் பேய்த்தொண்டர்
காண்பதென்னே. 1

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலிய
தளன்[1]
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே. 2

---

3. [1] மறுபிறவி

1. [1] அடியவர்களை ஆளாகக்கொள்ள உரிய திருவடிகள்

[2] கண்ணழுக்கு

2. [1] புலித்தோலை உடையாக உடையவன்

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப் பொழுதும்
அடுத்து வணங்கும் அயனெடு மாலுக்குங் காண்பரியான்
பொடி[1]க்கொண் டணிந்து பொன்னா கியதில்லைச் சிற்றம் பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப தென்னே. 3

ஆருயிர்த்திருவிருத்தம்

எட்டாந் திசை[1]க்கு மிருதிசை[2]க் கும்மிறை வாமுறையென்
றிட்டா ரமரர்வெம் பூச லெனக்கேட் டெரிவிழியா
ஒட்டாக் கயவர்[3] திரிபுர மூன்றையு மோரம்பினால்
அட்டா[4] னடிநிழற் கீழதன் றோஎன்ற னாருயிரே. 1

பேழ்வா ய[1]ரவி னரைக்கமர்ந் தேறிப் பிறங்கிலங்கு
தேய்வா யிளம்பிறை செஞ்சடை மேல்வைத்த தேவர் பிரான்
மூவா[2] னிளகான்[3] முழுவுல கோடுமண் விண்ணுமற்றும்
ஆவா னடிநிழற் கீழதன் றோவென்ற னாருயிரே. 2

---

3. [1] திருநீறு

1. [1] பெருந்திசை கோணதிசையாகிய எட்டுத் திசைகள்
[2] மேல் கீழ்த்திசைகள்
[3] பொருந்தாத கீழோர்ஆகிய அசுரர்
[4] அழித்தவன்

2. [1] பிளந்துள்ள வாய்
[2] முதுமையடையான்
பி-ம். ஆள்வானடி
[3] மெலிவடையான்

தரியா வெகுளிய ஞய்த்[1]தக்கன் வேள்வி தகர்த்துகந்த
எரி[2]யா ரிலங்கிய சூலத்தி ஞனிமை யாதமுக்கட்
பெரியான் பெரியார் பிறப்பறுப் பானென்றுந் தன்
பிறப்பை
அரியா னடிநிழற் கிழதன் றேுவென்ற ஞருயிரே. 3

திருவொற்றியூர் - திருவிருத்தம்

செற்று[1]க் களிற்றுரி[2] கொள்கின்ற ஞான்று[3] செருவெண்
கொம்பொன்
றிற்று[4]க் கிடந்தது போலு மிளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக் கிடந்தது கிம்புரி[5] போலச் சுடரிமைக்கும்
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்கு மாலொற்றியூர
னுக்கே. 1

சொல்லக் கருதிய தொன்றுண்டு கேட்கில்தொண்டா[1]
யடைந்தார்.
அல்லற் படக்கண்டு பின்னென் கொடுத்தியலைகொள்
முந்நீர்[2]
மல்லற்[3] றிரைச்சங்க நித்திலங்[4] கொண்டுவம் பக்
கரை[5]க்கே
ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றுெற்றி யூருறை யுத்தமனே. 2

---

3. [1] பொறுக்காத கோபத்தையுடைய [2] நெருப்பு
வணுகி

1. [1] அழித்து
[2] யானைத்தோல்
[3] நாள்
[4] ஒடிந்து
[5] யானைத் தந்தத்திற்கு இடும் பூண்

2. [1] அடிமை
[2] கடல்
[3] வளம்
[4] முத்து
[5] கடலையடுத்த கரை நிலம்

பரவை[1] வருதிரை நீர்க்கங்கை பாய்ந்துக்க பல்சடைமேல்
அரவ மணிதரு கொன்றை யிளந்திங்கள் சூடியதோர்
குரவ நறுமலர் கோங்க மணிந்துகு லாயசென்னி
உரவு[2] திரைகொணர்ந் தெற்றெற்றி யூருறை யுத்தமனே. 3

திருவையாறு - திருவிருத்தம்

சிந்திப் பரியன[1] சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை[2] தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாற னடித்தலமே. 1

இழித்தன ஏழேழ் பிறப்பும் அறுத்தன வென்மனத்தே
பொழித்தன[1] போரெழிற் கூற்றை யுதைத்தன போற்றவர்க்[2]காய்க்
கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வி[3]யைக் கீழமுன்சென்
றழித்தன ஆறங்க மானஐ யாற னடித்தலமே. 2

---

3. [1] பரத்தல் [2] வலிமை

1. [1] நினைத்தற்கு அருமையானவை
[2] உயிரைச் செறிந்து அறியாமை கொடுத்துப் பிணித்து அகலாது உள்ள மூலமலம்.

2. [1] உரித்தன [3] யாகம்
[2] புகழ்ந்தவர்களுக்கு
பி-ம். பேரெழிற் கூற்றை
பி-ம். கிழித்தன தக்கன

மணிநிற மொப்பன பொன்னிறம் மன்னின[1] மின்னியல்
வாய்
கணிநிற மன்ன கயிலைப் பொருப்பன[2] காதல்செய்யத்
துணிவன சீலத்த ராகித்[3] தொடர்ந்துவி டாததொண்டர்க்
கணியன சேயன[4] தேவர்க்கை யாற னடித்தலமே. 3

இருள்தரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்
னும்
பொருள்தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருள்தரு கைகொடுத் தேற்றுமை யாற னடித்தலமே. 4

திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம்

கோவாய்[1] முடுகி[2] யடுதிறற் கூற்றங் குமைப்ப[3] தன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை[4] போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. 1

---

3. [1] நிலைபெற்றன
[2] மலையிலுள்ளன
பி-ம். பொருப்பனைக்
[3] ஒழுக்கத்தையுடையவர்
[4] சேய்மையாயினவும் அணுமையிலுள்ள வாயின என்றபடி

1. [1] தலைவனாய்
[2] விரைந்து
[3] அழிப்பது.
[4] திருவடியின் அடையாளக் குறிகளை என்மேல் எழுத்துப்படச் செய்வாய்

காய்ந்தா யனங்க[1] னுடலம் பொடிபடக் காலனைமுன்
பாய்ந்தா யுயிர்செக[2]ப் பாதம் பணிவார்தம் பல்பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பா யடியேற் கருளாயுன் னன்பர்
சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்
கொழுந்தே. 2

பொத்[1]தார் குரம்பை[2] புகுந்தைவர்[3] நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போல் மறுகுமென் சிந்தை மறுக்[4]கொழிவி
அத்தா அடியே னடைக்கலங் கண்டா யமரர்கள்தம்
சித்தா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. 3

திருவேம்பகம் - திருவிருத்தம்

ஓதுவித் தாய்முன் அறவுரை காட்டி யமணரொடே
காதுவித் தாய்[1]கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பா[2]யுகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே. 1

---

2. [1] மன்மதன்
[2] அழிக்க

3. [1] புழை
[2] உடம்பு
[3] மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்பொறிகள்
[4] கலக்கம்

1. [1] பிரிவுறச் செய்தாய்
[2] அடிப்பிப்பாய்

எத்தைக்கொண் டெத்தகை யேழை யமனொ டிசைவித்
தெனைக்
கொத்தை[1]க்கு மூங்கர்[2] வழிகாட்டு வித்தென்னைக் கோகு[3]
செய்தாய்
முத்திற் றிரளும் பளிங்கினிற் சோதியும் மொய்பவளத்
தொத்தி[4]னை யேய்க்கும் படியாய் பொழிற்கச்சி யேகம்
பனே. 2

மெய்யம்பு கோத்த விசய[1]னொ டன்றொரு வேடுவனாய்ப்
பொய்யம்பெய் தாவ[2] மருளிச்செய் தாய்புர மூன்றெரியக்
கையம்பெய் தாய்நுன கழலடி போற்றாக் கயவர்நெஞ்சில்
குய்யம்[3]பெய் தாய்கொடி மாமதில் சூழ்கச்சி யேகம்பனே. 3

திருவாரூர் - திருவிருத்தம்

குலம்பலம் பாவரு குண்டர்[1]முன் னேநமக் குண்டு
கொலோ
அலம்பலம் பாவரு தண்புன லா[2]ரூ ரவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி[3] யான்திரு மூலட்டானம்[4]
புலம்பலம் பாவரு தொண்டர்[5]க்குத் தொண்டராம்
புண்ணியமே. 1

---

2. [1] குருடன் [3] வஞ்சம்
[2] (மூகர்) = ஊமையர் [4] திரள்
பி-ம். எத்தைக் கொடெத்தை

3. [1] அருச்சுனன் [3] வஞ்சம்
[2] அம்பறாத்தூணி

1. [1] இழிந்தோர்.
[2] ஒலியுடன் அலைந்துவரும் நீர்
[3] சிலம்பு ஆகிய காலணி ஒலிக்கின்ற செம்மையான திருவடிகள்
[4] திருவாரூர்த்திருக்கோயில்
[5] தனிமை நீங்கிவரும் அடியார் திருக்கூட்டத்தார்
பி-ம். குலம்பலமாவரு
பி-ம். குலம்பலபாவரு

மற்றிட மின்றி மனைதுறந் தல்லுணா[1] வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட் டேனுக்கு[2] முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி[3] விசயனொ டன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங் கொண்டான்[4]றன் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. 2

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர்[1] முன்நமக் குண்டு
கொலோ
செரு[2]வடி வெஞ்சிலை யாற்புர மட்டவன்[3] சென்றடையாத்
திருவுடை யான்[4]திரு வாரூர்த் திருமூலட் டானன்செங்கண்
பொருவிடை[5] யானடித் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே. 3

தனித்திருவிருத்தம்

பவளத் தடவரை போலுந்திண் தோள்களத் தோள்
மிசையே
பவளக் குழை[1]தழைத் தாலொக்கும் பல்சடை அச்சடை
மேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக நாகமந் நாகத்தொடும்
பவளக்கண் வால மதி[2]யெந்தை சூடும் பனிமலரே. 1

---

2. [1] மாலைப்பொழுது கொள்ளும் உணவு
[2] உபதேச மொழிகள் உறுதி என்று மயங்கி எண்ணி அதனால் குற்றப்பட்ட எனக்கு
[3] வலியுடன் வில்லை வளைத்து [4] திருவாரூர் இறைவன் திருப்பெயர்

3. [1] நின்றுகொண்டு உணவு கொள்ளும் சமணத் துறவியராகிய இழிந்தோர்
[2] போர் [3] அழித்தவன்
[4] என் இவர் பாடியருளியவாறே சம்பந்தப் பெருமானும் "சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிரும்மே" என்றருளினர்
[5] போரில் தாக்கும் காளை

1. [1] பவளத்தின் தளிர் [2] இளம்பிறை
பி-ம். பவளக்கணவிரியாமெந்தை

முருகார் நறுமல ரிண்டை[1] தழுவிவண் டேமுரலும்[2]
பெருகா[3] றடைசடைக் கற்றையி னுய்பிணி மேய்ந்திருந்த
இருகாற் குரம்பை[4] யிதுநா னுடைய திதுபிரிந்தால்
தருவா யெனக்குன் திருவடிக் கீழொர் தலைமறை[5]வே. 2

மூவா வுருவத்து முக்கண் முதல்வமீக் கூரிடும்பை[1]
காவா யெனக்கடை தூங்கு மணியைக் கையாலமரர்
நாவா யசைத்த வொலியொலி மாறிய தில்லையப்பால்
தீயா யெரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே. 3

கோயில் - திருக்குறுந்தொகை

பனைக்கை[1] மும்மத வேழம்[2] உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்[3]மறந் துய்வனே. 1

---

2. [1] மாலை
[2] ஒலிக்கும்
[3] பெருகுகின்ற கங்கை
[4] இரண்டு கால்களையுடைய உடம்பு
[5] பாதுகாப்பிடம்

3. [1] மிகுதிப்படும் துன்பம்
இப்பாட்டின் பொருள் :—அமரர், முக்கண் முதல்வனை நோக்கி எம்மை மிக்க துன்பத்தினின்றும் காப்பாய் என்று வேண்ட, இறைவன் திருவாயில்கடையில் தொங்கியமணியைத் தம் கைகளால் வாயிலுள்ள மணிநாவினை யசைத்துண்டாக்கிய ஒலி மாறி நிற்கவுமில்லை; அவ்வளவில் திரிபுரம் எரிந்து பொடியாய்க் கழிந்தன என்றவாறு.

1. [1] பனந்துண்டம் போன்ற தும்பிக்கை
[2] கன்ன, கபோல, பீஜமதங்களைச் சொரியும் யானை
[3] தினையளவுள்ள பொழுது
பி-ம். அனைத்தும் வேடமாம்

தீர்த்த னை[1]ச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யையமுத லாய ஒருவனைப்
பார்த்த[2] னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வெனோ. 2

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர்[1] வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னை[2]ப்பொழு தும்மறந் துய்வெனோ. 3

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை

பண்ணின் நேர்மொழி[1] யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

---

2. [1] தூயவனை [2] அருச்சுனன்

3. [1] கல்வி யொழுக்கங்களாற் சிறந் தோர் [2] எள்ளளவு

1. [1] பண்ணினை ஒத்தமொழி

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறி[1]க் கண்ட[2]ரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்தி[1]ய தாகிய அப்பரோ
துட்டர்[2] வான்புரஞ் சுட்ட சுவண்ட[3]ரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட[4] விக்கத வந்திறப் பிம்மினே. 3

திருவின்னம்பர் - திருக்குறுந்தொகை

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப்[1] பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே. 1

---

2. [1] துண்டு
[2] கழுத்தினையுடையார்
பி-ம். முகிக்கண்டரோ

3. [1] நிலம், நீர், தீ, காற்று, வான், ஞாயிறு, திங்கள், உயிர் இவற்றின் வடிவாயிருப்பவன்
[2] தீயோர்
[3] பொருத்தமுடையார்
[4] விரைவாக—"சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன்" திருவாசகம் (ஒப்பு)
பி-ம். கட்டவிக்கதவம்

1. [1] மூச்சுக்காற்று

மட்டு[1]ண் பார்கள் மடந்தையர் வாட்கண்ணல்
கட்டுண் பார்கள் கருதுவ தென்கொலோ
தட்டி முட்டித் தள்ளாடித் தழுக்குழி[2]
எட்டு மூர்த்திய ரின்னம்ப ரீசனே. 2

கன[1]லுங் கண்ணி[2]யுந் தண்மதி யோடுடன்
புனலுங் கொன்றையுஞ் சூடும் புரிசடை
அனலுஞ் சூலமும் மான்மறி[3]க் கையினர்
எனலு மென்மனத் தின்னம்ப ரீசனே. 3

திருமயிலாடுதுறை - திருக்குறுந்தொகை

கொள்ளுங் காதன்மை[1] பெய்துறுங் கோல்வளை[2]
உள்ள முள்கி யுரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே. 1

---

2. [1] தேன் [2] செழித்த காலை

3. [1] தீ [3] மான்கன்று
[2] தலைமாலை
பி-ம். இனலும்

1. [1] காதல் [2] அழகியவளையையுடையாள்

சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்
பச்சை[1] தீரும்மென் பைங்கொடி பால்மதி
வைத்த மாமயி லாடு துறையரன்
கொத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே[2]. 2

அண்டர் வாழ்வும் அமர ரிருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையி[1]லே. 3

திருவேட்களம் - திருக்குறுந்தொகை

நன்று[1] நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று[2] பொற்சடை யானைத் தொழுமினே. 1

---

2. [1] பசலைநிறம்

[2] மாமயிலாடு துறையரனார், கொத்தாய் விளங்கும் தன் கொன்றை மாலையை அருள் செய்வானானால், என் பசிய பூங்கொடிபோலும் இளம் பெண் தன் சித்தம் தெளிவு கொள்வாள், (மெலிவால் கழன்ற) வளைகளும் கைகளில் வலிதிற் பொருந்தும்; மேலும் தன் பசலை தீர்வாள்— என்றவாறு; இஃது அகப்பொருள் துறைப்பாட்டு.

3. [1] நெருங்கினால்

1. [1] பெரிதும் [2] நெருங்கிய

8

கருப்பு வெஞ்சிலைக்[1] காமனைக் காய்ந்தவன்
பொருப்பு[2] வெஞ்சிலை யாற்புரஞ்[3] செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழு
திருப்ப னாகி லெனக்கிட ரில்லையே. 2

திருவாய்மூர் - திருக்குறுந்தொகை

எங்கே யென்னை யிருந்திடந்[1] தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே[2] தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ. 1

மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி யுன்னி[1] யுறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி[2]
என்னை வாவென்று போனார தென்கொலோ. 2

---

2. [1] விருப்பத்தைச் செய்யும் கரும்பு வில் [2] மலை [3] திரிபுரங்கள்

1. [1] இருந்த இடம் [2] தென்னை

2. [1] இடையறாது நினைந்து [2] தலைவன் ஆகுமாறு கூறி

தஞ்சே[1] கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சே லுன்னை யழைக்கவந் தேனென்றார்
உஞ்சே[2] னென்றுகந் தேயெழுந் தோட்டந்தேன்[3]
வஞ்சே[4] வல்லரே வாய்மூ ரடிகளே. 3

மறக்கிற்பனே யென்னுந் திருக்குறுந்தொகை

காச[1] னைக்கன லைக்கதிர் மாமணித்
தேச னைப்புக ழார்சிலர் தெண்ணர்[2]கள்
மாசி[3] னைக்கழித் தாட்கொள வல்லவெம்
ஈச னையினி நான்மறக் கிற்பனே. 1

புந்தி[1]க் குவிளக் காய புராண[2]னைச்
சந்திக் கண்[3]நட மாடுஞ் சதுர[4]னை
அந்தி வண்ணனை ஆரழல் மூர்த்தியை
வந்தெ னுள்ளங்கொண் டானை மறப்பனே. 2

---

3. [1] எளிமை
[2] (உய்ந்தேன்) = பிழைத்தேன்
[3] (ஓட்டம் தந்தேன்) = ஓடினேன்
[4] கபடம்

1. [1] ஒளியுடையான்
[2] அறிவிலிகள்
[3] குற்றம்

2. [1] புத்தி
[2] பழையோன்
[3] சந்தியாகாலத்தில்
[4] திறமுடையான்

ஈச னீசனென் றென்று மரற்றுவன்[1]
ஈசன் தானென் மனத்திற் பிரிவிலன்
ஈசன் தன்னையு மென்மனத் துக்கொண்டு
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே. 3

தொழற்பாலதே என்னுந் திருக்குறுந்தொகை

அண்டத் தானை யமரர் தொழப்படும்
பண்டத் தானைப்[1] பவித்திர[2] மார்திரு
முண்ட[3]த் தானைமுற் றுத இளம்பிறைத்
துண்டத் தானைக்கண் டீர்தொழற் பாலதே 1

முத்தொப் பானை முளைத்தெழு கற்பக
வித்தொப் பானை விளக்கிடை நேரொளி
ஒத்தொப் பானை யொளிபவ ளத்திரள்
தொத்[1]தொப் பானைக்கண் டீர்தொழற் பாலதே. 2

---

3. [1] பல சொல்லி முறையிடுவேன்

1. [1] நிதியாயிருப்பவன் [3] நெற்றி

[2] தூய்மை

பி-ம். பவித்திரமார்

2. [1] கொத்து

பண்ணைத் தானைப் பவளந் திரண்டதோர்
வண்ணத் தானை வகையுணர் வான்றனை
எண்ணத் தானை யிளம்பிறை போல்வெள்ளைச்
சுண்ணத் தானை[1]க்கண் டீர்தொழற் பாலதே. 3

விடலை யானை[1] விரை[2]கமழ் தேன்கொன்றைப்
படலை[3] யானைப் பலிதிரி வான்செலும்
நடலை[4] யானை நரிபிரி யாததோர்
சுடலை யானைக்கண் டீர்தொழற் பாலதே. 4

பரிதி[1] யானைப்பல் வேறு சமயங்கள்
கருதி யானைக்கண் டார்மனம் மேவிய
பிரிதி[2] யானைப் பிறரறி யாததோர்
சுருதி[3] யானைக்கண் டீர்தொழற் பாலதே. 5

---

3. [1] வெண்மையாகிய திருநீற்றையணிந்தவன்

4. [1] இளமையுடையான் [3] மாலை
[2] நறுமணம் [4] அசைவு

5. [1] சூரியன் [3] மறை
[2] அன்பு

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை[1] நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. 1

செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட்[1] கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனும்
துத்தி யஞ்[2]செய நின்றநற் சோதியே. 2

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்[1]
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈச னொருவனே. 3

---

1. [1] திருவாதிரையாகிய நாள். இது சிவபிரானுக்குரிய நன்னாள் என்பர்
2. [1] பாறைபோன்று கல்விவிளைவில்லாத மனத்தையுடையவர்கள்
[2] (ஸ்துத்யம்) = புகழ்ச்சி
3. [1] அழிந்தார்
பி-ம். நுங்கினார்.
பி-ம். நோங்கினார்

வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலு மேழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே. 4

கூவ லாமை[1] குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகட லென்றல்போல்
பாவ காரிகள்[2] பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே. 5

ஆறும் திருமுறை

கோயில் - புக்கதிருத்தாண்டகம்

மங்குன்[1] மதிதவழும் மாட வீதி மயிலாப்பி[2] லுள்ளார்
மருக[3] லுள்ளார்
கொங்[4]கிற் கொடுமுடி[5]யார் குற்றா லத்தார் குடமூக்கி[6]
லுள்ளார் போய்க் கொள்ளம் பூதூர்
தங்குமிட மறியார் சால நாளார் தருமபுரத் துள்ளார்
தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப் புலி யூர்ச்சிற்
றம்பலமே புக்கார் தாமே. 1

---

5. [1] கிணற்றுள் இருக்கும் ஆமை
[2] பாவம் செய்தவர்கள்

1. [1] மேகம்
[2] திருமயிலாப்பூர்
[3] திருமருகல்
[4] கொங்கு நாடு
[5] திருப்பாண்டிக் கொடுமுடி
[6] கும்பகோணம்

நாகமரைக் கசைத்த[1] நம்ப ரிந்நாள் நனிபள்ளி யுள்ளார்
போய் நல்லூர் தங்கிப்
பாகப்பொ ழுதெல்லாம் பாசூர்த் தங்கிப் பரிதிநிய மத்தார்
பன்னிரு நாள்
வேதமும் வேள்விப் புகையு மோவா விரிநீர் மிழலை
யெழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளு மானார் புலியூர்ச்சிற்
றம்பலமே புக்கார் தாமே. 2

துறங்[1]காட்டி யெல்லாம் விரித்தார் போலுந் தூமதியும்
பாம்பு முடையார் போலும்
மறங்[2]காட்டி மும்மதிலு மெய்தார் போலும் மந்திரமுந்
தந்திரமுந்[3] தாமே போலும்
அறங்காட்டி யந்தணர்க்கன் றால நீழல் அறமருளிச்
செய்த அரனா ரிந்நாள்
புறங்கா[4]ட் டெரியாடிப் பூதஞ் சூழப் புலியூர்ச்சிற் றம்பலமே
புக்கார் தாமே. 3

அதிகைவீரட்டானம் - ஏழைத்திருத்தாண்டகம்

வெறி[1]விரவு கூவிள[2]நல் தொங்க[3] லானை வீரட்டத்
தானைவெள்ளேற்றி னானைப்
பொறியரவி னானைப்புள் ளூர்தி யானைப் பொன்னிறத்தி
னானைப் புகழ்தக் கானை
அறிதற் கரியசீ ரம்மான் றன்னை அதியரைய மங்கை
யமர்ந்தான் றன்னை
எறிகெடிலத் தானை யிறைவன் றன்னை யேழையே னான்
பண் டிகழ்ந்த வாறே. 1

---

2. [1] இடைப்பில் கட்டிய

3. [1] (துறவு) = பற்றுவிடுதல்
[2] வலிமை
[3] வேதமும் ஆகமமும்
[4] சுடலை

1. [1] நறுமணம்
[2] வில்வம்
[3] மாலை
பி-ம். புகழ்த்தக்கானை

வெள்ளிக் குன்றன்ன விடையான் றன்னை வில்வலான்[1]
வில்வட்டங்[2] காய்ந்தான் றன்னை
புள்ளிவரி நாகம் பூண்டான் றன்னைப் பொன்
பிதிர்ந்தன்ன சடையான் றன்னை
வள்ளி[3] வளைத்தோள் முதல்வன் றன்னை வாரா வுலகருள
வல்லான் றன்னை
எள்கவிடு பிச்சை யேற்பான் றன்னை யேழையே னன்பனை
டிகழ்ந்த வாறே. 2

மூந்தி யுலகம் படைத்தான் றன்னை மூவா முதலாய
மூர்த்தி தன்னைச்
சந்த[1] வெண்திங்க ளணிந்தான் றன்னைத் தவநெறிகள்
சாதிக்க வல்லான் றன்னைச்
சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச் செழுங்கெடில
வீரட்டம் மேவி னானை
எந்தை பெருமானை யீசன் தன்னை யேழையே னன்பண்
டிகழ்ந்த வாறே. 3

திருக்காளத்தி - திருத்தாண்டகம்

விற்றூணொன்[1] றில்லாத நல்கூர்ந் தான்[2]காண் வியன்கச்சிக்
கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூணொன் றில்லாத மாசதுரன்காண் மயானத்து
மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்[3]காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழி[4]லேழுந் தாங்கி நின்ற
கற்றூண்[5]காண் காளத்தி காணப் பட்ட கணநாதன் காண்
அவனென் கண்ணு ளானே. 1

---

2. [1] விசயன்
[2] வில்தொழில்
[3] மார்பிலும் தோளிலும் எழுதும் தொய்யில்

3. [1] அழகு
பி-ம். சிந்தையிற்றீ வினைதீர்

1. [1] விற்று உண்ணற்குரிய சிறு பண்டங்கள்
[2] வறியன்
பி-ம். பொய்யாத
[3] பொன்னாலாகிய தூணைப்பான்
[4] உலகு
[5] கல்லாலமைந்த தூண்

இடிப்பான்காண் என்வினையை ஏகம் பன்காண் எலும்பா
பரனைன்காண் எல்லாம் முன்னே
முடிப்பான்காண் மூவுலகு மாயினுன்காண் முறைமையால்
ஐம்புரியும் வழுவா வண்ணம்
படித்தான் தலையறுத்த பாசு பதன்காண் பராய்த்துறை
யான் பழனம்பைஞ் ஞீலியான்காண்
கடித்தார்[1] கமழ்கொன்றைக் கண்ணி யான்காண் காளத்தி
யானவனென் கண்ணு ளானே. 2

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய்[1] அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன்[2] தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் த்ான்காண்
சாரணன்[3]காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க்கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட கணநாதன்
காண் அவனென் கண்ணு ளானே. 3

திருப்புன்கூரும் திருநீடூரும் - திருத்தாண்டகம்

பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப் பேணுதார்[1]
அவர்தம்மைப் பேணு தானைத்
துறவாதே கட்டறுத்த[2] சோதி யானைத் தூநெறிக்குத்
தூநெறியாய் நின்றுன் தன்னைத்
திறமாய வெத்திசையுந் தானே யாகித் திருப்புன்கூர்
மேவிய சிவலோகனை
நிறமா மொளி யானை நீடு ரானை நீத[3]னே னென்னேநான்
நினையா வாறே. 1

---

2. [1] மணம்பொருந்திய மாலை

3. [1] மரக்கலம்
[2] பழமையோன்
[3] சித்திபெற்றோன்

1. [1] போற்றுதார்.
[2] பற்றுக்களைப் போக்கிய
பி-ம். பித்தர்க்கும்
[3] (நீசன்) இழிந்தோன்

பின்றானும் மூன்றானு மானான்[1] தன்னைப் பித்தர்க்குப்
பித்தனாய் நின்றான் தன்னை
நன்றாங் கறிந்தவர்க்குந் தானே யாகி நல்வினையுந்
தீவினையு மானான் தன்னைச்
சென்றோங்கி விண்ணளவுந் தியானைத் திருப்புன்கூர்
மேவிய சிவலோகனை
நின்றாய நீடூர் நிலாவினானை நீதனே னென்னேநான்
நினையா வாறே. 2

திருநல்லூர் - திருத்தாண்டகம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார் நில்லாமே
தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப்[1] போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற[2] இனமலர்கள்
போதவிழ்ந்து[3] மதுவாய்ப் பில்கி[4]
நனைந்தனைய[5] திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூ
ரெம் பெருமானார் நல்ல வாறே. 1

பொன்னலத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்
புலியுரியின் அதள்வைத்தார் புனலும் வைத்தார்
மன்னலத்த திரள்தோள் மேல் மழுவாள் வைத்தார் வார்
காதிற் குழைவைத்தார் மதியும் வைத்தார்
மின்னலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார் வேழத்தி
னுரிவைத்தார் வெண்ணூல் வைத்தார்
நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூ
ரெம் பெருமானார் நல்ல வாறே 2

---

2. [1] "முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே"—திருவாசகம்—(ஒப்பு)

1. [1] சினத்தால் மாறுபடும் யானை
[2] நெருங்க இட்ட
[3] பேரரும்புகள் மலர்ந்து
பி-ம். சினந்திருக்கும்
[4] வழிந்து
[5] நனைந்தால் போன்ற

தோடே[1]றும் மலர்க்கொன்றை சடைமேல் வைத்தார்
துன்னெருக்கின் வடம்[2]வைத்தார் துவலை[3] சிந்தப்
பாடேறு[4] படுதிரைக வெறிய வைத்தார் பனிமத்த மலர்[5]
வைத்தார் பாம்பும் வைத்தார்
சேடேறு[6] திரு நுதல்மேல் நாட்டம் வைத்தார் சிலைவைத்
தார் மலைபெற்ற மகளை வைத்தார்
நாடேறு திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம்
பெருமானார் நல்ல வாறே. 3

திருவாலவாய் - திருத்தாண்டகம்

முளைத்தானை[1] யெல்லார்க்கும் முன்னே தோன்றி முதிருஞ்
சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும் வரை[2]சிலையா
வாசுகிமா நா[3]ணைக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்[4]தால் துவள நீறாத் தூமுத்த வெண்
முறுவ லுமையோடாடித்
திளைத்தானைத் தென்கூடல்[5] திருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே. 1

விண்ணுலகின் மேலார்கள் மேலான் தன்னை மேலாடு
புரமூன்றும் பொடிசெய் தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத்தானைப் பசும்
பொன்னின் நிறத்தானைப் பால்நீற் றானை
உண்ணிலவு சடைக்கற்றைக் கங்கை யாளைக்
கரந்துமையோ டுடனாகி யிருந்தான் தன்னைத்
தெண்ணிலவு தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே. 2

---

3. [1] இதழ் — [4] பக்கம்
[2] எருக்கமலர் மாலை — [5] ஊமத்த மலர்
[3] துளி — [6] அழகு

1. [1] தோன்றினவன் — [3] விற்கயிறு
[2] மலை — [4] சுடுகின்ற அம்பு
நீறு ஆகத் துவளத் துளைத்தான் எனக்கூட்டியுரைக்க
[5] நான்மாடக் கூடல்.

நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை நிலமருவி
நீரோடக் கண்டான் தன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான்[1] தன்னைப் பகைத்
தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் தன்னைக்
காற்றிரளாய்[2] மேகத்தி னுள்ளே நின்று கடுங்குரலா
யிடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே. 3

திருவாரூர் - திருத்தாண்டகம்

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற புண்ணியங்
காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க் கில்லையே
கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத்[1] தலைமகனைத் தண்ண லாரூர்த் தடங்கடலைத்
தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்[2] இடையி
லேன் கெடுவீர்கள் இடறேன் மின்[3]னே. 1

ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற் றொருவீர்வேண்
டீர் ஈண்டிவ் வவனி[1] யெல்லாம்
உம்பரமே[2] உம்வசமே யாக்க வல்லீர்க் கில்லையே
னுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழி[3]யுமா யுலகேழாகி யொள்ளாரூர்
நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன் தடைப்படுவே
னாக்கருதித் தருக்கேன் மின்[4]னே. 2

---

3. [1] பால் முதலிய ஆனிடத்தைந்து கொண்டு முழுகவல்லான்
[2] காற்றின் திரட்சியாய்

1. [1] தலைவனை [3] தடுக்காதிர்
[2] திரிகின்றேன்

2. [1] உலகு [3] கல்பகாலம்
[2] உம் சார்பே [4] செருக்கடையாதிர்
பி-ம். இல்லையே நுகர்போகம்

சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றி[1]ச் செழுங்கனல்
நோக்குமிது வூக்க மன்று
பல்லுருவில் தொழில்பூண்ட பஞ்ச பூதப் பளகீ[2]ரும்
வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்றாய்[3] உருவம் மூன்[4]றாய்த்
தூநயனம் மூன்றாகி ஆண்ட ஆரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்மால்
நமைப்பு[5]ண்ணேன் கமைத்து[6]நீர் நடமின்களே. 3

திருவாவடுதுறை - திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர் செழுஞ்
சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின் உள்ளமே
உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற் கருமணியே
மணியாடு பாவாய்[1] காவாய்[2]
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம் ஆவடுதண்
டுறையுறையும் அமரரேறே.[3] 1

மாற்றேன் எழுத்தஞ்சும்[1] என்றன் நாவின் மறவேன்
திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன் எம்பெருமான்
திருவடியே எண்ணி னல்லால்
மேற்றான்நீ செய்வனகள்[2] செய்யக் கண்டு வேதனைக்கே
யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சே லென்னாய் ஆவடுதண்
டுறையுறையும் அமரரேறே. 2

---

3. [1] நாடோறும் கொண்டு
[2] குற்றமுடையீர்
[3] ஞாயிறு, திங்கள், தீ ஆகிய ஒளிப் பொருள்கள் மூன்று மாகி
[4] அயன், அரி, அரன் என்ற மூன்று உரு
[5] வருத்தம்
[6] பொறுத்து

1. [1] பாவையே
[2] காப்பாயாக
[3] வானோர் தலைவனே

2. [1] சிவனார் திருமந்திரம் ஆகிய பஞ்சாக்கரம்
[2] செய்கின்ற செயல்கள்

வரையார் மடமங்கை பங்கா கங்கை மணவாளா
வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா[1] உயிர்போகப் பெறுவே ஞகில் உறுநோய்[2]
வந்தெத்தனையு முற்ரு லென்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக் காதலித்து
நின்கழலே யேத்து மன்பர்க்
கரையா[3] அடியேனை அஞ்சே[4] லென்னுய் ஆவடுதண்
டுறையுறையும் அமரரேறே. 3

ஸ்ரீகைலாயம் - போற்றித் திருத்தாண்டகம்

வேற்ருகி விண்ணுகி நின்ருய் போற்றி மீளாமே
ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்[1]ருகி உள்ளே ஒளித்தாய் போற்றி ஓவாத[2] சத்தத்
தொலியே போற்றி
ஆற்ருகி அங்கே அமர்ந்தாய் போற்றி ஆறங்கம்[3]
நால்வேத மானுய் போற்றி
காற்ருகி யெங்குங் கலந்தாய் போற்றி கயிலை மலையானே
போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி பிறவி யறுக்கும்
பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி மருவியென்
சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி போகாதென்
சிந்தை புகுந்தாய் போற்றி
கச்[1]சாக நாக மசைத்தாய்[2] போற்றி கயிலை மலையானே
போற்றி போற்றி. 2

---

3. [1] சொல்லாமல் [3] அரசே
[2] மிக்கபிணிகள் [4] அஞ்சவேண்டா

1. [1] அன்பு சுரக்கும் இடம்
[2] நீங்காத
[3] வேதப்பொருளை யறிதற்குரிய உறுப்புக்களாய் அமைந்த சிக்ஷை, வியா கரணம், சந்தசு, நிருக்தம், சோதிடம், கற்பம் என்பவைகள்

2. [1] அரையிற் கட்டும் கச்சை [2] கட்டினுய்
பி-ம். வைச்சாடல் நன்று மகந்தாய்

திருவாய்மூர் - திருத்தாண்டகம்

பாட வடியார் பரவக் கண்டேன் பத்தர்கணங் கண்டேன்
மொய்த்த பூதம்
ஆடல்முழவம்[1] அதிரக் கண்டேன் அங்கை[2] அனல்
கண்டேன் கங்கை யாளைக்
கோட[3] லரவார் சடையிற் கண்டேன் கொக்கினிதழ்[4]
கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல்[5] தலையொன்று கையிற் கண்டேன் வாய்மூ
ரடிகளைநான் கண்ட வாறே. 1

பாலின் மொழியாளோர் பாகங் கண்டேன் பதினெண்
கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன் நெற்றிநுதல்
கண்டேன் பெற்றங்[1] கண்டேன்
காலைக் கதிர்செய் மதியங்கண்டேன் கரந்தை[2] திருமுடி
மேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியுங் கண்டேன் வாய்மூ ரடிகளைநான்
கண்ட வாறே. 2

---

1. [1] மத்தளம்
[2] உள்ளங்கை
[3] வெண்காந்தள் மலர்
[4] கொக்கிறகு
[5] உலர்ச்சி

2. [1] எருது
[2] கரந்தை மலர்

மறுமாற்றத்திருத்தாண்டகம்

நாமார்க்குங் குடி[1]யல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி
லிடர்ப்படோம் நடலை[2] யில்லோம்
ஏமாப்போம்[3] பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான சங்கரன்நற்
சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச்சே
வடியிணையே குறுகினோமே. 1

அகலிடமே இடமாக ஊர்கள் தோறும் அட்டுண்பார்
இட்டுண்பார்[1] விலக்கார் ஐயம்
புகலிடமாம்[2] அம்பலங்கள்[3] பூமி தேவி யுடன்கிடந்தாற்
புரட்டாள்[4]பொய் யன்று மெய்யே
இகலு[5]டைய விடையுடையான் என்று கொண்டான்
இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ் சொற்
கேட்கக் கடவோமோ துரிசு[6]ற் றோமே. 2

---

1. [1] குடிமக்கள் [3] இன்புறுவோம்; இறுமாந்திருப்போம்
[2] பொய்ம்மை நடிப்பு
பி-ம். இன்பமே யொருநாளும்

2. [1] தாம் சமைத்துண்பவர்கள் பிறர்க்கு உணவு கொடுத்தே உண்பர்: ஆதலின் ஐயம்விலக்கார்-பிச்சையிடுதலை யொழியார்கள்
[2] (அவை நாம்) தங்குமிடமாம்
[3] ஊர்தோறும் உள்ள பொது விடங்கள்
[4] நிலத்திற் கிடைகொண்டால் என்னை நிலமகள் புரட்டித் தள்ளிவிட மாட்டாள்
[5] வலிமை [6] குற்றம்

வாரா[1]ண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம் மாதேவா
மாதேவா என்று வாழ்த்தி
நீரா[2]ண்ட புரோதாயம்[3] ஆடப் பெற்றோம் நீறணியுங்
கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக் கன்மனமே
நன்மனமாக் கரையப் பெற்றோர்
பாராண்டு பகடே[4]றி வருவார் சொல்லும் பணிகேட்கக்
கடவோமோ பற்றற் றோமே. 3

ஏழாம் திருமுறை

திருவெண்ணெய் நல்லூர் - பண் - இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா[1]
எத்தான்[2]மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ[3]ர
ருட் டுறை[4]யுள்
அத்தா[5]வுனக் காளாயினி யல்லேனென லாமே[6]. 1

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்[1]பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்[2]பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆயா[3]வுனக் காளாயினி யல்லேனென லாமே. 2

---

3. [1] மார்புக்கச்சு
[2] தூய்மையாதற்குச் சடங்குடன் செய்யும் முழுக்கு
[3] திருநீறு
[4] களிற்றியானை

1. [1] இவை விளி
[2] எதனாலும்
[3] தென் பெண்ணெய் யாற்றுக்குத் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூர்
[4] இத்தலத்திலுள்ள சிவனார் திருக்கோயில்
[5] தந்தையே
[6] (முன்பே) அடிமையாகியும் = இப்பொழுது அடிமையல்லேன் என்றுரைத்தல் கூடுமோ எ-று.

2. மனத்து உன்னை நினைப்பு இன்றிப் பேயாய்த்திரிந்து என இயைத்துக் கொள்ளுக.
[1] இளைத்தேன்
[2] மூங்கில் மிக்குவளர்
[3] உயிர்ப்பன்மைகட்குத் தாயானவனே

மன்னேமற வாதேநினேக் கின்றேன்மனத் துன்னேப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அன்னே[1]யுனக் காளாயினி யல்லேனென லாமே. 3

முடியேனினிப் பிறவேன்பெறின்[1] மூவேன்[2]பெற்ற[3] மூர்தி[4]
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனேக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆதியுனக் காளாயினி யல்லேனென லாமே. 5

---

3. பொன், மணி, வயிரம் இவற்றைப் பொருது உந்தி மின்னூர் பெண்ணை என இயைக்க: பொன்மணி முதலியவற்றை மோதித்தள்ளி வருதலால் ஒளியை மிகச்செய்யும் பெண்ணையாறு—எ-று

[1] அன்னையே

4. [1] பிறக்கப்பெற்றாலும்

[2] மூப்படைந்து முடியமாட்டேன்

[3] பொதுமை நீங்கி எருதினைக் குறிக்கும்

[4] எறிச் செலுத்துபவனே

பி-ம். அடிகேளுமக்காளாய்

இது சிவனூர் ஆட்கொண்டபோது பாடியருளியது

திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம்

வைத்தனன் றனக்கே தலையுமென் னாவும் நெஞ்சமும்
வஞ்சமொன் றின்றி
உய்த்தனன்[1] றனக்கே திருவடிக் கடிமை யுரைத்தக்கா
லுவமனே[2] யொக்கும்
பைத்தபாம் பார்த்[3]தோர் கோவணத்தோடு பாச்சிலாச்
சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்[4]சில ராகிலிவரலா தில்லையோ
பிரானார். 1

அன்னையே யென்னே னத்தனே யென்னே னடிகளே
யமையுமென் றிருந்தேன்
என்னையு மொருவ னுளனென்று கருதி யிறை யிறை
திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி லாச்சிரா மத்துறை
யடிகள்[2]
பின்னையே[3] யடியார்க் கருள்செய்வ தாகிலிவரலா
தில்லையோ பிரானார். 2

---

1. என் தலையும் நாவும் நெஞ்சமும் தனக்கே வைத்தனன் என இயைத்து, என் தலை முதலியவற்றைத் தன் பணிக்கென்றே சிவபெருமான் அமைத்தார் என்று பொருள்கொள்க. (அவற்றை யானும் வஞ்சமொன்றும் இன்றித் தனக்கே)
   - [1] செலுத்தினேன்
   - [2] போலியாதலே
   - [3] படமெடுத்த பாம்பினைக் கட்டிக்கொண்டு
   - [4] சிறிது விருப்பமும்
2. [1] மிகச்சிறிதும்
   [2] பெரியோன்
   [3] (காலந்தாழ்த்துப்) பின்பே

உற்றபோ[1] தல்லா லுறுதியை யுணரே னுள்ளமே
யமையுமென் றிருந்தேன்
செற்றவர்[2] புரமூன் றெரியெழ[3]ச் செற்ற செஞ்சடை
நஞ்சடை கண்டர்
அற்றவர்க்[4] கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகள்தா
மியாதுசொன்னாலும்
பெற்றபோ துகந்து பெருவிடி லிகழிலிவரலா தில்லையோ
பிரானார். 3

திருக்கோளிலி - பண் - நட்டராகம்

நீள[1] நினைந்தடியே னுமை நித்தலு[2]ங் கைதொழுவேன்
வாளன கண்மடவா[3] ளவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்
பெற்றேன்
ஆளிலை[4] யெம்பெருமா னவையட்டித் தர[5]ப்பணி[6]யே. 1

வண்டம ருங்குழலா ளுமைநங்கையோர் பங்குடையாய்
விண்டவர்[1] தம்புரமூன் றெரிசெய்தவெம் வேதியனே
தெண்டிரை நீர்வயல்சூழ் திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டம தாயவனே[2] யவையட்டித் தரப்பணியே. 2

---

3. [1] துயர் வந்தகாலம்
[2] பகைவர்
[3] தீப்பட்டழிய
[4] பற்றில்லார்க்கு. இது பொன் பெறு தற்குப் பாடியருளிய பதிகம்

1. [1] நெடிது பொழுது
[2] நாள்தொறும்
[3] வாள்போன்ற கண்களையுடைய பெண்ணாகிய பரவையம்மையார்
[4] (எடுத்துச் செல்லும்) பணியாட்கள் இலர்
[5] (இல்லத்தில்) கொண்டுவந்து சேர்க்க
[6] கட்டளை செய்க

2. [1] வேறுகிய பகைவர்
[2] உலகம் தன் வடிவாயமைந்தவனே

பாதியோர் பெண்ணைவைத்தாய் படருஞ்சடைக் கங்கை
வைத்தாய்
மாதர்நல் லார்[1]வருத்த மதுநீயு மறிதியன்றே
கோதில் பொழில்புடைசூழ் குண்டையூர்ச்சில நெல்லுப்
பெற்றேன்
ஆதியே யற்புதனே யவையட்டித் தரப்பணியே. 3

சொல்லுவ தென்னுனைநான் றொண்டைவாய்[1]மை
நங்கையை நீ
புல்கிமி டத்தில்[2]வைத்தாய்க் கொருபூசல்[3]செய் தாருளரோ
கொல்லை வளம்புறவிற் குண்டையூர்[4]ச்சில நெல்லுப்
பெற்றேன்
அல்லல் களைந்தடியேற் கவையட்டித் தரப்பணியே. 4

முல்லை முறுவலுமை யொருபங்குடை முக்கணனே
பல்லயர் வெண்டலை[1]யிற் பலிகொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புறவிற் றிருக்கோளிலி யெம்பெருமான்
அல்லல் களைந்தடியேற் கவையட்டித் தரப்பணியே 5

---

3. [1] பெண்டிருள் நல்லாளாகிய பரவை
பி-ம். நல்லார் வருத்தம்மதி

4. [1] கொவ்வைக் கனிபோற் சிவந்த வாய் [4] தோட்டத்தின் வளமும் முல்லைவளமும் உடைய குண்டையூர்
[2] இடப்பாகத்தில் சேர்த்து
[3] சண்டை

5. [1] பல் உதிர்ந்த பிரமகபாலம்
இது குண்டையூரிற் பெற்ற நெல்குவியலைத் திருவாரூர்க்கு எடுத்துச் செல்ல ஆள்வேண்டிப் பாடியருளியது.

திருமுதுகுன்றம் - பண் - நட்டராகம்

பொன்செய்த மேனியினீர்[1] புலித்தோலை யரைக்கசைத்திர்
முன்செய்த மூவெயிலு மெரித்திர்முது குன்றமர்ந்திர்
மின்செய்த நுண்ணிடை[2]யாள் பரவையிவள் தன்முகப்பே[3]
என்செய்த வாறடிகே ளடியேனிட் டளங்[4]கெடவே. 1

உம்பரும் வானவரும் முடனே நிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்திர்
வம்[1]பம ருங்குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெரு மானருளீ ரடியேனிட் டளங்கெடவே. 2

பத்தா பத்தர்களுக் கருள்செய்யும் பரம்பரனே
முத்தா[1] முக்கணனே முதுகுன்ற மமர்ந்தவனே
மைத்தா ருந்தடங்கண்[2] பரவையிவள் வாடாமே
அத்தா தந்தருளா யடியேனிட் டளங்கெடவே. 3

---

1. [1] பொன்போன்ற நிறமுள்ள திரு மேனியை யுடையீர்
[2] மின்னல் கொடிபோன்ற நுட்ப மாகிய இடை
[3] முன்பு
[4] துன்பம்

2. [1] நறுமணம்

3. [1] அனாதி மல முத்தனே
[2] மைபூசியவையாய் அமரும் கண்கள்

இது திருமுது குன்றிற் பெற்ற பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் தோற்றச் செய்யப் பாடியருளிய பதிகம்

திருவதிகைத் திருவீரட்டானம்
பண் - கொல்லிக்கௌவாணம்

தம்மானை[1] யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள்
விகிர்தன்[2]
கைம்மா[3]வி னுரி[4]யானைக் கரிகாட்டி[5]லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடு
மென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது[6] மிகழ்வன்போ லியானே. 1

முன்னேயெம் பெருமானை மறந்தென்கொல் மறவா
தொழிந்தென்கொல் மறவாத சிந்தையால் வாழ்
வேன்
பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக்
குன்றமே யீசனென் றுன்னையே புகழ்வேன்
அன்னேயென் னத்தாவென் றமரரா லமரப்
படுவா[1]னை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்னேயென் னெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன் போலியானே. 2

---

1. [1] தலைவன்
[2] வேறுபட்ட இயல்பினன்
[3] கையையுடைய விலங்கு : யானை
[4] தோல்.
[5] சுடலை
[6] சிறிது பொழுதும்
2. [1] விரும்பப் படுபவன்

விரும்பினேற் கெனதுள்ளம் வீடகிலா[1] விதியே
விண்ணவர்தம் பெருமானே மண்ணவர்நின் றேத்தும்
கரும்பேயென் கட்டியென் றுள்ளத்தா னுள்கி[2]க்
காதல்சேர் மாதரா ணங்கையா ணங்கை
வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும்
வரியரவு[3] முடன்றுயில வைத்தருளு மெந்தை
இரும்புனல்வந் தெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 3

நாற்றானத்[1] தொருவனை நானாய பரனை
நள்ளாற்று[2] நம்பியை வெள்ளாற்று விதி[3]யைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின்
றலையானைக் கடுங்கலுழி[4]க் கங்கைநீர் வெள்ள
ஆற்றானைப் பிறையானை யம்மானை யெம்மான்
றம்மானை யாவர்க்கு மறிவரிய செங்கண்
ஏற்றானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 4

சேந்தர்தாய்[1] மலைமங்கை திருநிறமும் பரிவு[2]
முடையானை யதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தல்தாழ் புனல்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்துநீ ரெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 5

---

3. [1] விடமாட்டாத
[2] நினைந்து
[3] வரிகளையுடைய பாம்பு

4. [1] நான்கு திசைகள்
[2] சோணாட்டுச் சிவதலம்
[3] வெள்ளாறு எனப் பெயர்பெற்ற நிவாக்கரையிலுள்ள நெல்வாயிலரத் துறையிலெழுந்தருளியுள்ள இறைவன்
[4] விசையுடைய பெருக்கு

5. [1] முருகன் தாய்
பி-ம். சேந்தராய்
[2] அன்பு

திருத்தொண்டத்தொகை - பண் - கொல்லிக்கௌவாணம்

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனுர்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார்[1] விறன்மிண்டர்க் கடியேன்
அல்லி[2]மென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே.[3] 1

இலைமலிந்த வேல்[1]நம்பி யெறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்[2]வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனல்மங்கை யானயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 2

---

1. [1] செங்குன்றூரார் [2] அகவிதழ்
[3] அடிமை
2. [1] இலைவடிவம் பொருந்திய வேல் [2] மலையையொத்த தோள்

மும்மையா[1] லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினு லெறிந்த
அம்மை[2]யா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 3

திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - பழம்பஞ்சுரம்

மற்றுப்பற்[1]றெனக் கின்றிநின்றிருப் பாதமேமனம்
பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந்
தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடு
முடி
நற்றவா[2]வுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா
நமச்சிவாயவே. 1

---

3. [1] திருநீறு, உருத்திராக்கம், சடை [2] மேலுலகம்-சிவலோகம்
முடியாகிய சிவனுர் அடையா
ளங்கள் மூன்றிலும்
இப்பதிகத்தில் சிவனடியார்கள் திருப்பெயர்களை யெடுத்தோதியருளினுர்
பி-ம். அடித்தண்டி

1. [1] பிறிது ஆசை
[2] நல்ல தவத்தையுடையவன். நான் மறந்தாலும் என் நாவானது நமச்சிவாய என்ற திருமந்திர மொழியை இடையருது சொல்லும் என்றவாறு. கறையூரெனப் பெயர்பெற்ற பாண்டிக் கொடுமுடி என்க.

இட்டனும்[1]மடி யேத்துவாரிகழ்ந் திட்டநாள்மறந்
திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை[2] கொண்டடிதொழு தேத்துபாண்டிக்
கொடுமுடி
நட்டவா[3]வுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா
நமச்சிவாயவே. 2

ஓவுநாளு[1]ணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல்[2] வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா
நமச்சிவாயவே. 3

---

2. [1] சிறிதேனும் (இட்டு-சிறிது) சிறிதேனும் சிவனுர் திருவடிகளை வழிபடுவார்களை இகழ்ந்திட்ட நாட்களையும் மறந்திட்ட நாட்களையும் இவை தீயநாட்களென்று அல்லாமல் நான் வேறு எண்ணவில்லை என்று பொருள்கொள்க.

[2] மாலை

[3] உயிர்ப்பன்மைகள்பால் நட்புடையவனே

பி-ம். இட்டெனும்மடி

3. [1] நீங்கும் நாள், உன்னை நினையாது நீங்கும் நாட்களை, அறிவு அழியும் நாள், உயிர்போம் நாள், பாடை மேலிட்டுச் சுமக்கும் நாள் என்றல்லாமல் வேறு கருதேன் என்க.

[2] பரவுகின்ற நீர்

திருமுருகன்பூண்டி - பண் - பழம்பஞ்சுரம்

கொடுகு[1]வெஞ்சிலை வடுகவேடுவர்[2] விரவலாமை[3]சொல்லித்
திடுகுமொட்டென[4]க் குத்திக்கூறை[5]கொண்டாறலைக்கு[6]
மிடம்
முடுகுநாறிய[7] வடுகர்வாழ்முருகன் பூண்டிமாநகர்வாய்
இடுகுநுண்ணிடை[8] மங்கைதன்னொடும் எத்துக்[9]கிங்கிருந்
தீரெம் பிரானிரே. 1

வில்லைக்காட்டி வெருட்டி[1]வேடுவர் விரலாமைசொல்லிக்
கல்லினாலெறிந் திட்டுமோதியுங் கூறைகொள்ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ்முருகன் பூண்டிமாநகர்வாய்
எல்லைக்காப்பதொன் றில்லையாகில்நீ ரெத்துக்கிங்கிருந்
தீரெம்பிரானிரே. 2

---

1. [1] கொடுமை செய்யும், அல்லது வளைந்த
[2] வடுகநாட்டு வேடுவர்
[3] பேச்சிற் கலத்திற்குக் கூடாத சொற்கள்
[4] அவர் மொழியொலிக் குறிப்புக்கள்
பி-ம் ஆறலைக்குமிடம்
[5] ஆடை
[6] வழிப்பறிக்கும்
[7] தீ நாற்றம் வீசும்
[8] சிறுகும் இடை
[9] எதற்கு

2. [1] அச்சஞ் செய்து: இது சுந்தரமூர்த்திகள் வேடுவரால் பொருள் பறியுண்டபோது பாடியருளியது

திருப்புன்கூர் - பண் - தக்கேசி

அந்தணாளன்[1]உன் னடைக்கலம் புகுத அவனைக் காப்பது
காரணமாக
வந்த காலன்ற னுருயி ரதனை வவ்வினாய்க்[2] குன்றன்
வண்மை[3] கண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர்[4] நலியி லிவன்மற் றென்னடி
யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே. 1

வையக[1] முற்று மாமழை மறந்து வயலில் நீரிலை மாநிலந்
தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன வொளிகொள்
வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும்
பன்னிரு வேலிகொண் டருளுஞ்
செய்கை கண்டு நின் திருவடி யடைந்தேன் செழும்பொ
ழிற்றிருப் புன்கூ ருளானே. 2

1. [1] மார்க்கண்டேயன் ஆகிய வேதியன் [3] வள்ளல் தன்மை
[2] கவர்ந்த உமக்கு [4] இயமன் ஏவலர்

2. [1] உலகம் : இத்திருப்பாட்டில் குறித்த செய்தி :—மழையின்மையால் வயலில் நீரின்றி மயங்கியபோது இறைவனை நோக்கி மழை பெய்யின் பன்னிரு வேலி கொடுப்பதாக வேண்டிக் கொண்டனராக, இறைவன் திருவருளால் அங்ஙனமே மழை பெய்ததாக, அஃது இடைவிடாது பெய்தமையின் மழை நீங்கின் மீட்டும் பன்னிருவேலி கொடுப்பதாக வேண்டியவாறே இறைவன் திருவருள் செய்து இருபத்து நான்கு வேலி நிலங்கொண்டனன் என்பதாம்.

ஏத நன்னில மீரறு வேலி யேயர்கோ னுற்ற விரும்பிணி
தவிர்த்துக்
கோத லங்[1]களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற்
சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற[2] எறிந்ததண் டி[3]க்குன் சடைமிசை மல
ரருள்செயக் கண்டு
பூதவாளி[4]நின் பொன்னடி யடைந்தே ன்பூம்பொ
ழிற்றிருப் புன்கூ ருளானே. 3

திருவாரூர் - பண் - தக்கேசி

பொன்[1]னு மெய்ப்பொரு[2] ளுந்தருவானைப் போக[3] முந்திரு[4]
வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப் பிழையெ
லாந்தவி ரப்பணிப் பா[5]னை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா எம்மா னையெளி
வந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி யாரூ ரானை
மறக்கலு மாமே. 1

---

3. இவ்வாறு நிலமளித்த பெருந்தகையார் திருப்புன்கூருக்கு அண்மையில் உள்ள திருப்பெருமங்கலம் என்ற ஊரில் வாழ்ந்த வேளாண்குலப் பெருந்தகையார் ஆகிய ஏயர் கோன் கலிக்காமனர் என்பவர் என்பது இத்திருப்பாட்டாலறியலாம்.

பி-ம். பால்கறந்தாட்டி

பி-ம். ஒெறிந்த தண்டிக்கு

[1] பசுங்கன்றுகளின், அல்லது பசு மடிகளின்

[2] கால் ஒடிய

[3] சண்டேசுரர்

[4] பூதகணத்தலைவர்

இது ஏயர் கோக்கலிக்காமனர் பிணி தீர்த்தருளிப் பாடியருளியது

1. [1] இம்மைக்கு உதவும் பொன்

[2] மெய்ம்மையாகிய திருவருள்

[3] உலகபோகம்

[4] வீட்டின்பம்

பொன்னால் உலகபோகமும், திருவருளால் வீட்டின்பமும் தந்து புணர்ப்பவனெனக் கூட்டி நிரனிறை வகையாற் பொருள்கொள்க.

[5] நியமிப்பவன்

கட்ட[1] மும்பிணி யுங்களை வானைக் காலற் சீறிய காலுடை
யானை
விட்ட வேட்கை[2]வெந் நோய்[3]களை வானை விரவி னால்[4]விடு
தற்கரி யானைப்
பட்ட வார்த்தை[5] படநின்ற வார்த்தை வாரா மேதவி
ரப்பணிப் பானை
அட்ட மூர்த்தி[6]யை மட்டவிழ் சோலை யாரூ ரானை
மறக்கலு மாமே. 2

கார்க்குன் றமழை யாய்ப்பொழி வானைக் கலைக்கெ லாம்
பொருளாயுடன் கூடிப்
பார்க்கின் றவுயிர்க் குப்பரிந் தானை[1]ப் பகலுங் கங்குலு[2]
மாகிநின் றானை
ஓர்க்கின் ற[3]செவி யைச்சுவை தன்னை யுணரு நாவினைக்
காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை யாரூ ரானை மறக்கலு
மாமே. 3

திருநள்ளாறு - பண் - தக்கேசி

செம்பொன் மேனிவெண் ணீறணி வானைக் கரிய கண்டனை
மாலயன் காணாச்
சம்பு[1] வைத்தழ ல[2]ங்கையி னானைச் சாம வேதனைத்
தன்னொப்பி லானைக்
கும்ப[3] மாகரி யின்னுரி யானைக் கோ[4]வின் மேல் வருங்
கோவினை யெங்கள்
நம்பனைநள் ளாறனை யமுதை நாயி னேன் மறந்
தென்னினைக் கேனே. 1

---

2. [1] துன்பம்
[2] ஆசை
[3] கொடிய பிறவிநோய்
[4] உள்ளம் கலந்தால்
[5] உண்டாகிய பழிச்சொற்கள்
[6] நிலம், நீர், தீ, காற்று, வான், ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய எண் வடிவா யிருப்பவன்

3. [1] அன்பினனை
[2] இரவு
[3] ஒலியை யுணர்கின்ற

இது சேரமானிடத்தினின்று ஆரூர்க்கு எழுந்தருளியபோது பாடியருளியது

1. [1] இன்பத்தை ஆக்குவோன்
[2] நெருப்பு
[3] மத்தகம்
[4] இடபம்

விரை[1]செய் மாமலர்க் கொன்றையி ஞனை வேத கீதனை
மிகச்சிறந் துருகிப்
பரசு வார்[2]வினைப் பற்றறுப் பானைப் பாலொ டானைஞ்சு
மாடவல் லானைக்
குரைக டல்வரை யேழுல குடைய கோனை ஞானக்
கொழுந்தினைத் தொல்லை
நரை[3]விடை யுடையநள் ளாறனை யமுதை நாயி
னேன்மறந் தென்னினைக் கேனே. 2

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப் புவியைக்
காற்றினைப் புனலனல் வெளியைச்
சே[1]வின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத் தேவ தேவனைத்
தித்திக்குந் தேனைக்
காவி[2] யங்கண்ணி பங்கனைக் கங்கைச் சடைய னைக்காம
ரத்[3]திசை பாட
நாவி லூறுநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந்
தென்னினைக் கேனே. 3

திருவாவடுதுறை - பண் - தக்கேசி

கங்கை வார்[1]சடை யாய்கண நாதா கால காலனே காமனுக்
கனலே
பொங்கு மாகடல் விடமிடற்[2] றுனே பூத நாதனே புண்
ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே தீர்த்த னே[3]திரு
வாவடு துறையுள்
அங்க ணா[4]வெனை யஞ்சலென் றருளா யாரெ னக்குற
வமரர்க ளேறே[5]. 1

---

2. [1] நறுமணம் [3] வெண்மை நிறம்
[2] போற்றுவார்
பி-ம். ஞானக் கொழுந்தினைக் “ கோல்லை ”

3. [1] எருது [3] ஒரு பண்
[2] குவளை மலர்

1. [1] நீட்சி [4] கண்ணோட்ட முடையோனே
[2] கழுத்து [5] தேவர்கள் தலைவனே
[3] தூயனே

மண்ணின் மேன்மயங் கிக்கிடப் பேனை வலிய வந்தெனை
யாண்டுகொண் டானே
கண்ணி லேனுடம் பில்லடு நோயாற் கருத்தழிந் துனக்
கேபொறை[1] யானேன்
தெண்ணி லா[2]வெறிக் குஞ்சடையானே தேவ னேதிரு
வாவடு துறையுள்
அண்ண[3] லேயெனை யஞ்சலென் றருளா யாரெ னக்குற
வமரர்க ளேறே. 2

ஒப்பி லாமுலை யாளொரு பாகா வுத்தமா 'மத்த[1] மார்தரு
சடையாய்
முப்பு ரங்களைத் தீவளைத் தங்கே மூவ ருக்கருள் செய்யவல்
லானே
செப்ப[2] ஆல்நிழற் கீழிருந் தருளுஞ் செல்வ னேதிரு
வாவடு துறையுள்
அப்ப னேயெனை யஞ்சலென் றருளா யாரெ னக்குற
வமரர்க ளேறே. 3

---

2. [1] சுமை, பாரம் [3] பெரியோன்
[2] தெளிந்த ஒளியுடைய பிறை
பி-ம். உடம்பில் வடுநோயால்

3. [1] ஊமத்த மலர்
[2] ஆகமப்பொருளைக் கூறுதற்கு. இது தாம் கண்ணிழந்திருந்த காலை வருந்திப் பாடியருளியது

திருத்துருத்தியும் - திருவேள்விக்குடியும்
பண் - காந்தாரம்

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி வெடிபட[1]க்
கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி யகன்கரை யுறைவா ரடியிணை தொழு
தெழு மன்பரா மடியார்
சொன்னவா றறிவார்[2] துருத்தியார் வேள்விக் குடியுளா ரடி
க[3]ளைச் செடியனேன்[4] நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை யென்னுடம்
படும்பிணி யிடர்கெடுத் தானை. 1

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங் கொய்புன லேன[1]லோ
டைவனஞ்[2] சிதறி
மாடு[3]மா கோங்கமே மருத[4]மே பொருது மலையெனக்
குலைகளை[5] ம்றிக்குமா றுந்தி[6]
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளா ரடிகளைச்
செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலே னெம்பெரு மானைப் பழவினை யுள்ளன
பற்றறுத் தானை. 2

---

1. [1] ஒலியெழ
[2] திருத் துருத்தியிறைவர் பெயர்
[3] திருவேள்விக் குடியிறைவர். இவ்விருதலங்களும் காவிரியாற்றின் தென் கரையிலும் வடகரையிலுமாக அமைந்துள்ளமையின் சேர்த்துப் பாடியருளினர்.
[4] இழிஞனுகிய நான்

2. [1] தினை
[2] மலைநெல்
[3] பக்கம்
[4] இவை மரங்கள்
[5] கரைகளை
[6] குறுக்கிடும்படித்தள்ளி

கொல்லுமா லியானையின் கொம்பொடு வம்பார் கொழுங்
கனிச் செழும்பயன் கொண்டுகூட் டெய்திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்துத வஞ்செய்யும் போகரும்
யோகரும்[1] புலரி[2]வாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளா
ரடிகளைச் செடியனேன் நாயேன்
சொல்லுமா றறிகிலே னெம்பெரு மானைத் தொடர்ந்தடுங்
கடும்பிணித் தொடர்வறுத் தானை. 3

திருப்புக்கொளியூர் அவிநாசி - பண் - குறிஞ்சி

எற்றான்[1] மறக்கே னெழுமைக்கு மெம்பெரு மானையே
உற்றாயென் றுன்னையே யுள்குகின் றேனுணர்ந்
துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசி[2]யே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டி[3]யே. 1

வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணிநீ
ஒழிவ தழகோசொல் லாயரு ளோங்கு சடையானே
பொழிலாருஞ் சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
இழியா[1]க் குளித்த மாணி[2] யெனைக்கிறி[3] செய்ததே. 2

---

3. [1] இல்லறத்தாரும் துறவறத்தாரும் [2] விடியற் பொழுது
பி-ம். புல்லியுந்தாழ்ந்தும் போந்துதந்செய்யும்
பி-ம். போந்துதவஞ் செய்யும்

1. [1] எத்தன்மையால் [3] பரம்பொருள்
[2] இந்தத் தலத்து இறைவன் திருப்பெயர்

2. [1] இறங்கி [3] மாயம்
[2] பிரமசாரிச் சிறுவன்

எங்கே னும் போகினு மெம்பெரு மானை நினைந்தக்கால்
கொங்கே புகினுங் கூறைகொண் டாறலைப் பாரிலை
பொங்[1]கா ட[2]ரவா புக்கொளி யூரவி நாசியே
எங்கோ னேயுனை வேண்டிக்கொள் வேன்பிற
வாமையே. 3

திருநொடித்தான்மலை - பண் - பஞ்சமம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வா[1]னெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை[2] யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான்[3] நொடித்தான்மலை[4] யுத்தமனே. 1

ஆனை யுரித்தபகை யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி யொள்ளியானை[1] நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனை யருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 2

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்க[1]ளால் துரி[2]சேசெயுந் தொண்டனெனை
அந்தர[3] மால்விசும்பி லழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே[4] நொடித்தான்மலை யுத்தமனே. 3

---

3. 2-வது அடி—கொங்குநாட்டிற் புகுந்தால் இனி ஆடைகளைப் பறித்துக் கொள்ளுவார் வழியிலில்லை என்றார், முன்பு இந்நிகழ்ச்சிக்குத் தாம் உட்பட்டவராதலின்

[1] சீறும் [2] படமெடுத்து ஆடும்

1. [1] வானோர் [2] மதக்களிப்பினையுடைய யானை [3] உடம்பினையும் உயிரினையும் வேறு படச் செய்தான் [4] கயிலாயத்தின் பெயர்

2. [1] ஒளிமயமானவனை

3. [1] அழகிய கோலங்கள் [2] குற்றச் செயல்கள் [3] மேல் [4] நெஞ்சமே! உன் தரமோ? என இயைக்க

இது சுந்தரர் திருக்கைலைக்கு வெள்ளானைமேற் சென்ற காலைப் பாடியருளியது

எட்டாந் திருமுறை

திருவாசகம்

திருச்சதகம் - மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

மெய்தான் அரும்பி[1] விதிர்விதிர்த்து[2]உன்விரை யார்கழற்[3]
கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி
யுள்ளம்[4]
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி
யென்னுங்
கைதான் நெகிழ விடேன்[5]உடை யாயென்னைக் கண்டு
கொள்ளே. 1

திருச்சதகம் - அறிவுறுத்தல்

தரவு கொச்சகக் கலிப்பா

நாடகத்தா[1] லுன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்[2]சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே[3] நின்றுருகத் தந்தருளெம் உடையானே. 11

---

1. [1] மயிர்க்கூச்சுக்கொண்டு
[2] நடுங்கி
[3] நறுமணம் மிக்க கழலணிந்த திருவடிகள்
[4] மனம் கலங்கி
[5] ஒழுக்கத்தைத் தளரவிடமாட்டேன்

11. [1] வேடம்பூண்டு நடித்தலால்
[2] பொன்
[3] உள்ளத்தினுள்ளே

ஆமாறு[1]ன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலே புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்[2]
கோமான்நின் திருக்கோயில் தூகேன்[3]மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே[4] விரைகின்றேன் சதுராலே சார்வானே[5]. 14

திருச்சதகம் - சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

வெள்ளந்[1]தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட[2] நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற்[3] கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னே யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்று[4]ச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்[5]தி வினையி னேற்கே. 21

---

14. [1] பொருந்தும் வகையால் (அல்லது) மெய்த் தொண்டன் ஆகும்படி
[2] தேவர்
[3] அலகிட்டுத் தூய்மை செய்யேன்
[4] இறக்கும்படி
[5] திறப்பாட்டினால் உயிர்களிடத்திற் சார்கின்றவனே

21. [1] கங்கை
[2] விரும்பிய
[3] மிக்கநீர்
[4] உள்ளங்கால் தொட்டு
[5] "மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்"—முத்தொள்ளாயிரம் (ஒப்பு)

திருச்சதகம் - ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறு[1]முன் தொடரொ ணாதநீ
ஏன நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதாய்[2] ஆண்டு கொண்டவா
ஊனை[3] நாடகம் ஆடு வித்தவா[4]
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய[5] வையகத் துடைய விச்சையே. 95

திருவெம்பாவை - சத்தியை வியந்தது

வெண்டளையால்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா

ஆதியும் அந்தமும்[1] இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ[2] வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலி
போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளி[3]யின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

---

95. [1] வேதாந்தம்: உபநிடதங்கள்
[2] இனிய அருளோடு
[3] உடம்பை
[4] நாடகத்தில் வேடமெடுப்பார் போல் தோற்றி நடிக்கச் செய்தவனே
[5] வையகத்துடைய இச்சை—உலக இன்ப வேட்கை ஒழியும்படி.

1. [1] முதலும் முடிவும்
[2] உறங்குகின்றாயோ
[3] மலர்கள் நிறைந்த படுக்கை
'ஈது எம்தோழி பரிசே: எல் ஓர்' என்க

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்து[1]மப் பெற்றியனே[2]
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்[3]கா
வோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்[4]பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்[5]
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

திருவம்மானை - ஆனந்தக் களிப்பு

ஒப்புமை பற்றிவந்த ஆறடித்தரவு கோச்சகக் கலிப்பா

பண்சுமந்த பாடற்[1] பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி[2] வியன்மண்ட லத்[3]தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலி[4]மதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால்[5] மொத்துண்டு[6]
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். 8

---

9. [1] மறுபடியும்
[2] அத்தன்மையன்
[3] தோழமை
[4] அடிமை
[5] அருள்செய்வாயானால்

8. [1] இசையமைந்த திருப்பாடல்
[2] மேலுலகு தாங்கிய புகழ்
[3] அகன்ற நிலவுலகு
[4] ஒலி
[5] அரசனாகிய பாண்டியனால்
[6] அடிபட்டு

திருக்கோத்தும்பி - சிவனோ டைக்கியம்

நாலடித்தரவு கோச்சகக்கலிப்பா

பூவேறு கோ[1]னும் புரந்தர[2]னும் பொற்[3]பமைந்த
நாவேறு செல்வி[4]யும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதி[5]யும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடி[6]க்கே சென்றூதாய்[7] கோத்தும்பீ[8]. 1

திருச்சாழல் - சிவனுடைய காருணியம்

நாலடித்தரவு கோச்சகக் கலிப்பா

பூசுவதும் வெண்ணீறு பூண்பது[1]வும் பொங்கரவம்[2]
பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழ[3]லோ. 1

திருப்பள்ளி யெழுச்சி - திரோதான சுத்தி

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

போற்றியென் வாழ்முத[1] லாகிய பொருளே
புலர்ந்தது[2] பூங்கழற் கிணைதுணை மலர்[3]கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்[4]
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடி[5]யுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

---

1. [1] திருமால் நாபிக் கமலத்தில் தங்கிய பிரமன்
[2] இந்திரன்
[3] அழகு
[4] பிரமன் நாவில் தங்கிய கலைமகள்
[5] பெருமை மிக்க ஒளிவடிவினனாகிய உருத்திரன்
[6] எருதின்மேல் ஏறியருளும் செவ்விய திருவடிகள்
[7] சென்று ஒலித்தல் செய்வாய்
[8] வண்டு அரசே !

1. [1] அணிவது
[2] சீறும் பாம்பு
[3] ஒரு வகை மகளிர் விளையாட்டு

1. [1] என் வாழ்க்கைக்கு மூலகாரணம்
[2] விடிந்தது
[3] கட்டிய இனமொத்த மலர்
[4] வணங்குவோம்
[5] இடபம் உயர்த்த கொடியையுடையவனே !

கோயிற்றிருப்பதிகம் - அனுபோக இலக்கணம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்[1]
அந்த[2]மொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே[3]. 10

திருக்கழுக்குன்றப் பதிகம் - குரு தரிசனம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பிணக்கி[1] லாதபெ ருந்து றைப்பெரு மான்உன் நாமங்
கள் பேசுவார்க்
கிணக்கி[2] லாததோர் இன்ப மேவருந் துன்ப மேதுடைத்
தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து[3] மேல்விளை யாமல் என்வினை
ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம்[4] நீவந்து காட்டி னாய்கழுக்
குன்றிலே. 1

---

10. [1] திறமை யுடையார் [3] பிரதியுபகாரம்
[2] முடிவு

1. [1] மாறுபாடு [3] கெடுந்தன்மையில்லாத பிறவிக்கு விதையாகிய அவா
[2] ஒப்பு
[4] அளவுபடாத திருவடிவப் பொலிவு

பிடித்தபத்து - முத்திக் கலப்புரைத்தல்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

உம்பர்கட் கரசே[1] ஒழிவற[2] நிறைந்த
யோகமே[3] ஊற்றையேன்[4] தனக்கு
வம்[5]பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த[6] மருந்தே
செம்பொருட்[7] டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கென[8]ப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 1

பிடித்தபத்து - முத்திக் கலப்புரைத்தல்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே[1].
பொய்ம்மையே பெருக்கி[2]ப் பொழுதினைச் சுருக்கும்[3]
புழுத்தலைப் புலையனேன்[4] தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

---

1. [1] வானோர்க்குத் தலைவனே
[2] நீக்கமில்லாமல்
[3] உயிர்ப்பன்மையிற் கலப்புற்ற பொருளே
[4] (ஊத்தையேன்)—அழுக்குடையேன்
[5] புதுமை
[6] உலகச் சிற்றின்ப வாழ்வு நீங்கப் பேரின்ப வாழ்வு செய்வித்த
[7] செம்மையான நூல்
[8] உறுதியாக

3. [1] தெவிட்டாத அமுதமே
[2] பொய்யாயினவற்றில் அறிவைப் பெருகச் செய்தலால்
[3] காலத்தைச் சிறுகச் செய்யும்
[4] இழிவுபற்றி இங்ஙனம் கூறினர்

திருப்படையாட்சி - சிவ உபாதி ஒழிதல்

பன்னிரு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்[1]கள் தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும்[2]
ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும்
ஆகாதே
பண்களி கூர்தரு[3] பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படையாட்சி[4]கள்பாடுது
மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்[5] வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு
மாயிடிலே. 1

திருக்கோவையார்

இயற்கைப் புணர்ச்சி - காட்சி

மதிவாணுதல் வளர்வஞ்சியைக் - கதிர்வேலவன் கண்ணுற்றது

திருவளர் தாமரை[1] சீர்வளர் காவிகள்[2] ஈசர்தில்லைக்
குரு[3]வளர் பூங்குமிழ்[4] கோங்கு[5]பைங் காந்தள்[6]கொண்
டோங்குதெய்வ
மரு[7]வளர் மாலையொர் வல்லி[8]யின் ஒல்கி[9] ய(ன்)னநடை[10]
வாய்ந்
துரு[11]வளர் காமன்றன்வென்றிக்கொடி போன்றொளிர்
கின்றதே. 1

---

1. [1] மகளிர்
[2] இழிவுறும்
[3] இசையின்பம் மிகுதற்கிடமாகிய
[4] வீரச்செயல்கள்
[5] வேறுபடுத்துந்தன்மை

1. [1] தாமரை மலர்
[2] நீலமலர்
[3] நிறம்
[4] குமிழ மலர்
[5] கோங்கின் அரும்பு
[6] காந்தள் மலர்
[7] மணம்
[8] கொடி
[9] நடங்கி
[10] அன்னத்தினடைபோன்ற நடை
[11] வடிவு

இயற்கைப் புணர்ச்சி - தெளிதல்

அணங்கல்லளேன் றயில்வேலவன்
துணங்களைநோக்கிக் குறித்துரைத்தது

பாயும் விடை[1]யரன் தில்லையன் னாள்படைக் கண்[2]இமைக் குந்
தோயும் நிலத்தடி[3] தூமலர் வாடுந் துயரமெய்தி
ஆயும் மனனே[4] அணங்க[5]ல்ல எம்மா முலைசுமந்து
தேயும் மருங்குற்[6] பெரும்பணை[7]த் தோளிச் சிறுநுதலே. 3

இயற்கைப் புணர்ச்சி - உட்கோள்

இறைதிருக்கரத்து மறிமானேக்கி - யுள்ளக்கருத்து வள்ளலறிந்தது

அணியும் அமிழ்துமென் ஆவி[1]யும் ஆயவன் தில்லைச் சிந்தா
மணி[2]உம்ப ரார்அறி யாமறை யோனடி வாழ்த்தல[3]ரிற்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்
பணியும் புரைமருங் குற்[4]பெருந் தோளி படைக்கண்களே. 5

---

3. [1] தாவும் எருது
[2] படைக்கலம் போன்ற கண்கள்.
[3] அடிநிலத்துத் தோயும் என இயைக்க
[4] ஆராய்கின்ற உள்ளமே
[5] தெய்வம்
[6] இடை
[7] மூங்கில்

5. [1] இவற்றை இறைவனுக்கு ஒப்பாகக் காட்டியது. முறையே அழகு செய் தற்கும், மிகுசுவை தரற்கும், இன்றியமையாச் சிறப்பினதாதற்கும் என உரைப்பர்
[2] தேவருலகத்துள்ள தெய்வமணி
[3] வழுத்தாதவர்
[4] மின்னற் கொடியையும் பாம்பையும் ஒக்கும் இடை

இயற்கைப் புணர்ச்சி - கலவியுரைத்தல்

கோலவேலவன் கோடியிடையோடு கலவியின்பங் கட்டுரைத்தது

சொற்பால்[1] அமுதிவள்யான் சுவையென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம்[2] தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி[3] தோட்ட களவகத்[4]தே. 8

இயற்கைப் புணர்ச்சி - பிரிவுணர்த்தல்

பணிவளரல்குலைப் பயிர்ப்புறுத்திப்
பிணிமலர்த்தாரோன் பிரிவுணர்த்தியது

சிந்தா மணிதெண் கடலமிர் தம்தில்லை யானருளால்
வந்தா லிகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேநின்னை யானகன் றுற்றுவனே
சிந்தா குல[1]முற்றென் னேஎன்னை வாட்டந் திருத்து[2]வதே. 12

---

8. [1] சொல்லும் பகுதி [2] நல்ல கூற்றின் வினையாகிய தெய்வம் அமுதும் அதன் சுவையும் பிரிவில்லன போல இவளும் நானும் அமைந்திருக்கவும், இன்று நான் வேறு இவள் வேறு ஆகப் பகுதிப்பட்டு இன்பந்துய்க்க நேர்ந்த அழகை யார் அறிவார் என்க.

[3] காவல்

[4] நீங்கிய களவின்கண்ணே இனி, தோட்ட—'தோடு' என்பதனடியாப் பிறந்த சொல்லெனக் கொண்டு 'தொகுதியை' என்றலும் ஆம். தொகுதி—தலைமகள் ஆயமும், தலைமகன் உடன்போந்த இளைஞரும்

12. [1] உள்ளத்து மயக்கம்

[2] வாட்டுவது என்னோ?

இனி வாட்டத் திருத்துவதே—என்ற பாடமாயின் வாட்டத்தில் என்னை இருத்துவதென்னை என்க

பாங்கற் கூட்டம் - பாங்கன் வினாதல்

கலிகெழுதிரள்தோள் மெலிவதுகண்ட
இன்னுயிர்ப்பாங்கன் மன்னனைவினாயது

சிறை[1]வான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என்சிந்தை
யுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி[2]ன் ஆய்ந்தவொண் தீந்தமி
ழின்
துறை[3]வாய் நுழைந்தனையோ அன்றியே ழிசை[4]ச்சூழல்[5]
புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தி
யதே. 20

பாங்கற் கூட்டம் - பாங்கன் நொந்துரைத்தல்

இன்னுயிர்ப்பாங்க னேழையைச்சுட்டி
நின்னதுதன்மை நினைந்திலையென்றது

ஆலத்[1]தி னாலமிர் தாக்கிய கோன் தில்லை யம்பலம்போற்
கோல[2]த்தி னாள்பொருட் டாக அமிர்தங் குணங்கெடினுங்
காலத்தி னான்மழை மாறினும் மாறாக் கவிகை[3]நின்பொற்
சீலத்[4]தை நீயும் நினையா தொழிவதென் தீவினையே. 27

---

20. [1] அணை, காவல்
[2] நான்மாடக்கூடல் என்ற பெயர் பெற்ற மதுரைப் பெருநகர்
[3] அகமும் புறமுமாகிய பொருள் வகை
[4] குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை
[5] அவற்றானமைந்த பண்ணும் பாடலும்

27. [1] நஞ்சு
[2] அழகு
[3] கொடுத்தற்குக் கவிந்தகை என வண்மையை யுணர்த்திற்று
[4] ஒழுக்கம்

பாங்கற் கூட்டம் - இயலிடங் கூறல்

அழுங்கலெய்திய ஆருயிர்ப்பாங்கற்குச்
செழுங்கதிர்வேலோன் தெரிந்துசெப்பியது

விழியாற் பிணை[1]யாம் விளங்கிய லான்மயி லாம்மிழற்று[2]
மொழியாற் கிளியாம் முதுவா னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழற்றில்லைக் கூத்தன் கயிலைமுத் தமலைத்தேன்
கொழியாத் திகழும் பொழிற்கெழி[3] லாமெங் குலதெய்
வமே. 29

பாங்கற் கூட்டம் - மருங்கணைதல்

ஒளிதிகழ் வார்குழல் அளிகுலம் விலக்கிக்
கருங்களிற் றண்ணல் மருங்கணைந்தது

கோலத் தனிக்கொம்ப[1]ரும்பர்[2]புக் கஃதே குறைப்பவர்[3]தஞ்
சீலத் தன[4]கொங்கை தேற்றகி லேஞ்சிவன் தில்லையன்னாள்
நூலொத்தநேரிடை நொய்ம்மை[5] யெண்ணாது நுண்தேன்
நசை[6]யாற்
சாலத் தகாதுகண் டீர்வண்டு காள்கொண்டை சார்
வதுவே. 45

பாங்கற் கூட்டம் - ஆயத்துய்த்தல்

தேங்கமழ் சிலம்பன் - பாங்கிற் கூட்டியது

சூளா மணி[1]உம்பர்க் காயவன் சூழ்பொழில் தில்லையன்
னாய்க்
காளா[2] யொழிந்ததென் னாருயி ராரமிழ் தேயணங்கே
தோளா மணி[3]யே பிணையே பலசொல்லி யென்னைதுன்
னும்
நாளார் மலர்ப்பொழில் வாயெழி லாயம்[4] நணுகுகவே. 47

---

29. [1] பெண்மான்
[2] கொஞ்சும்
[3] மலைத்தேனருவி முத்துக்களைக் கொழித்து விளங்கும் பொழில் எனக

45. [1] கொம்பு
[2] மேலிடம்
[3] வெட்டுபவர்
[4] செயலையுடையன
[5] நுண்மை
[6] தேனைக் கொள்ளும் விருப்பம்

47. [1] முடியிலணியும் மணி
[2] அடிமையாய்
[3] துளைக்கப்படாத மணி
[4] தோழியர் கூட்டம்

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா—திருப்பல்லாண்டு

திருமாளிகைத்தேவர்

கோயில் - பண் - பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா[1] வொன்றே உணர்வுசூழ்
கடந்ததோ ருணர்வே[2]
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே[3] சித்தத்துள்
தித்திக்குந் தேனே
அளி[4]வள ருள்ளத் தானந்தக் கனியே அம்பலம் ஆடரங்
காக[5]
வெளிவளர் தெய்வக் கூத்து[6]கந் தாயைத்[7] தொண்டனேன்
விளம்புமா விளம்பே.[8] 1

---

1. [1] அழிவற்ற
   [2] சுட்டியறியும் அறிவின் எல்லையைக் கடந்துள்ள ஒப்பற்ற பேரறிவே
   [3] தெளிந்த பளிங்கின் தோற்றம் வாய்ந்த திரண்ட மாணிக்க மலை போன்றவனே
   [4] அன்பு
   [5] தில்லையம்பலமே திருக்கூத்து இயற்றும் சபையாக
   [6] ஞானாகாசத்தில் நடைபெறும் தெய்வ நடனம்
   [7] விரும்பிய உன்னை
   [8] புகழ்ந்துரைக்கும் வகையை எனக்குச் சொல்லுக

சேந்தனார்

திருவீழிமிழலை - பண் - பஞ்சமம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்[1] கரையிலாக்
கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி
விளக்கைச்
செற்றவர்[2] புரங்கள் செற்ற[3]எஞ் சிவனைத் திருவீழி மிழலை
வீற் றிருந்த
கொற்றவன்[4] தன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரஎன் கண்
குளிர்ந் தனவே. 2

கருவூர்த்தேவர்

கோயில் - பண் - புறநீர்மை

கண்பனி அரும்ப[1]க் கைகள்மொட் டித்[2]தென் களைகணே[3]
ஓலமென் றோலிட்[4]
டென்பெலாம் உருகும் அன்பர்தங் கூட்டத் தென்னையும்
புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன்[5] பாடிநின் றாடப் பனிமலர்ச் சோலை
சூழ் மொழுப்பி[6]ற்
செண்பகம் அருமபும் பெருமபற்றப் புலியூர்த் திருவளர்
திருச்சிற்றம் பலமே. 5

---

2. [1] மெய்ந்நூற்களைக் கற்றவர்கள் உண்டின்புறுதற்குரிய கற்பகக்கனி போன்றவன்
[2] பகைவர்
[3] அழித்த
[4] தலைவன்

5. [1] கண்களில் இன்பக் கண்ணீர் துளிக்க
[2] அரும்புகள் போலக் கூப்பி
[3] துயர்போக்கும் இடமே; பற்றுக்கோடு
[4] புகல் என்று புலம்பி
[5] வண்டுகள்
[6] அடர்ந்த இடம்

கங்கைகொண்டசோளேச்சரம் - பண் - பஞ்சமம்

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோர்
அண்டமாஞ் சிறுமைகொண் டடியேன்
உண்டவூண் உனக்காம் வகையென துள்ளம் உள்கலந்
தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்[1]லிற் குறுகலர்[2]
புரங்கள்மூன் றெரித்த
கண்ட[3]னே நீல கண்டனே கங்கை கொண்டசோ ளேச்
சரத் தானே. 6

திரைலோக்கியசுந்தரம் - பண் - காந்தாரம்

நையாத[1] மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த[2] அன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்
தரனே.[3] 2

திரைலோக்கியசுந்தரம் - பண் - காந்தாரம்

ஆறாத[1] பேரன்பி னவருள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ வீற்றிருத்தி யதுகொண்டு
வீறாடி[2] யிவளுன்னைப் பொதுநீப்பான்[3] விரைந்தின்னந்
தேறாள்[4] தென்பொழிற் கோடைத் திரைலோக்கிய சுந்
தரனே. 9

---

6. 1—அடி. "அண்டங்களெல்லாம் அணுவாக அணுக்களெல்லாம், அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினும்"—(திருவிளை. புரா. ஒப்பு)
[1] பாம்பு கயிறாக அமைந்த பெரு மலையாகிய வில்லால்
[2] பகைவர்
[3] வீரன்

2. [1] உருகாத
[2] பவனி வந்த
[3] கோடை என்ற தலத்திலுள்ள திரைலோக்கிய சுந்தரம் என்ற திருக்கோயிலுள்ள சிவபெருமானே!

9. [1] தணியாத
[2] தனக்குரிய வேறு சிறப்பினைப் பாராட்டி
[3] பலருக்கும் பொதுவாயிருக்கும் தன்மையினின்றும் உன்னை விலக்கித் தனக்கே கொள்ள
[4] தெளிவடையாதிருக்கின்றாள்

திருவிடைமருதூர் - பண் - பஞ்சமம்

பந்தமும்[1] பிரிவும்[2] தெரிபொருட் பனுவற்[3] படிவழிசென்று
சென்றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி[4] தெரியினுந் தெரி
வுறு வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்[5] எண்ணில்பல்
ஊழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன் மருவிடம் திரு
விடை மருதே. 5

திருப்பல்லாண்டு

கோயில் - பண் - பஞ்சமம்

சொல்லாண்ட சுருதிப் பொருள்[1] சோதித்த தூய்மனத்
தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தா[2]னுக்கே பல்லாண்டு
கூறுதுமே. 4

---

5. [1] மலத்தால் கட்டப்பட்டுள்ள நிலை—பெத்தம்
[2] மலத்தினின்று நீங்கும் நிலை—முத்தி
[3] தெரிவிக்கும் ஞானப் பொருளையுடைய ஆகமங்கள்
[4] கலப்பு
[5] சிவனும், திருவருளும் ஆன்மாவாகிய யானும் என்று இவ்வாறாக

4. [1] வேதப்பொருள்
3—அடி. திரண்ட பொன்மயமாகிய மேருமலையை வில்லாகக் கொண்ட அழகனும் இடப வாகனனுமாகிய சிவபெருமான்
[2] பல ஆண்டுகள் என்று வாழ்த்தும் அளவைக் கடந்தவன்

பத்தாம் திருமுறை

திருமூல நாயனர் திருமந்திரம்

காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து[1] விளம்பிறை போலு மெயிற்றனை[2]
நந்தி மகன்றனை[3] ஞானக் கொழுந்தினைப்
புந்தி[4] யில் வைத்தடி போற்றுகின் றேனே.

போற்றிசைத் தி[1]ன்னுயிர் மன்னும் புனிதனை[2]
நாற்றிசை[3]க் குந்நல்ல மாது[4]க்கு நாதனை
மேற்றிசைக் குட்டென் றிசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானை[5] யான் கூறுகின் றேனே. 1

சிவனொடொக் குந்தெய்வந் தேடினு மில்லை
யவனொடொப் பாரிங் கியாவரு மில்லை
புவனங்க[1] டந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச்[2] சடைமுடித் தாமரை யானே. 5

---

[1] சந்திரன். [2] தந்தத்தை யுடையவனே.
[3] பரமசிவன் புதல்வனை.
[4] புந்தி—சித்தம்.

1. [1] காப்பு அமைத்து.
[2] தூயவனை.
[3] நான்கு திசையுட்பட்ட உலகுகள்.
[4] உமையம்மையார்.
[5] இயமனை உதைத்து அடக்கியவனை.

5. [1] உலகங்கள்.
[2] நெருப்பு.

தீயினும் வெய்யன்[1] புனலி[2] னுந் தண்ணிய[3]
ளுயினும் மீச னருளறி வாரில்லை
சேயினு நல்ல னணியன[4]ல் லன்பர்க்குத்
தாயினு நல்லனற் றாழ்சடை யோனே. 8

பொன்னாற் புரிந்திட்ட[1] பொற்சடை யென்னப்
பின்[2]னாற் பிறங்க[3] விருந்தவன் பேர்நந்தி
யென்னாற் றொழப்படு மெம்மிறை மற்றவன்
றன்னாற் றொழப்படு வாரில்லை தானே. 9

சாந்து[1] கமழுங் கவரி[2]யின் கந்தம் போல்[3]
வேந்த[4]னமரர்க் கருளிய மெய்ந்நெறி[5]
யார்ந்த சுடர[6]ன்ன வாயிர நாமமும்
போந்து மிருந்தும் புகழுகின் றேனே. 34

---

8. [1] வெம்மையுடையன்

[2] நீர். [3] குளிர்ச்சியுடையன்

[4] அண்மையிலிருப்பவன்

9. [1] பின்னிய. [2] புறம்

[3] விளங்க

34. [1] சந்தனம். [2] மான். [3] நறுமணப் பொருளாகிய "மிருகமதம்"—அதாவது கஸ்தூரி; "மான்வயிற்றில் ஒள் அரிதாரம் பிறக்கும்" என்பது காண்க. ஆகவே முதலடியின் பொருள் :— சந்தனம் போலும், கமழுகின்ற கஸ்தூரியின் மணம்போலும் இனி 'கவுரி' எனப்பாடங் கொண்டு, 'உமையம்மை' எனப்பொருள் கூறுவாருமுளர்

[4] சிவபெருமான்

[5] மெய்ந்நெறி—சத்யமார்க்கமாகிய சைவநெறி, [6] ஞாயிறு. அதன் ஆயிரங்கதிர்கள் போன்ற ஆயிரம் திருப்பெயர்களும் என்க.

மனையு ளிருந்தவர்[1] மாதவ ரொப்பர்
நினைவு ளிருந்தவர் நேசத்து ணிற்பர்
பனையு ளிருந்த பருந்தது போல
நினையா தவர்க்கில்லை நின்னின்பந் தானே. 47

அடியார் பரவு[1] மமரர் பிரானை[2]
முடியால்[3] வணங்கி முதல்வனை முன்னிப்
படியா[4] ரருளும் பரம்பர னெந்தை
விடியா விளக்கென்று[5] மேவிநின் றேனே. 48

ஆதிப் பிரானு[1] மணிமணி வண்ணனு[2]
மாதிக் கமலத் தலர்மிசை யாயனுஞ்[3]
சோதிக்கின் மூன்றுந் தொடர்ச்சியி[4] லொன்றெனார்
பேதித் து[5]லகம் பிணங்குகின் றாரே[6]. 52

---

47. [1] மனைவாழ்க்கையுள் நின்றும் பெரிய தவநெறியுடையார், மாதவரை ஒப்பார் என்க
பனையுள் இருந்த பருந்து தான் வட்டமிட்டுப்பறக்கும் தொழிலின்றியிருந்ததுபோல முறுக நினையாதவர் என்க

48. [1] போற்றும்
[2] தேவர் தலைவனை
[3] தலையால்
[4] உலகிலுள்ளவர்
[5] ஒழிவற்ற சோதி

52. [1] உருத்திரன்
[2] நீலமணி போன்ற கருநிறம் உடைய திருமால்
[3] திருமாலின் நாபிக்கமலமலர் மீதிலுள்ள பிரமன்
[4] சம்பந்தம்; இம்மூவர் சம்பந்தமும் ஒன்றேயென்று அறியாதவர்கள்
[5] வேற்றுமை நோக்குக்கொண்டு[6] தம்முள் மாறுபடுகின்றனர்

தானொரு கூறு சதாசிவ னெம்மிறை[1]
வானொ[2]ரு கூறு மருவியு மங்குளான்
கோனொரு கூறுட லுண்ணின் றுயிர்க்கின்ற
தானொரு கூறு சலமய[3] னாமே. 60

வேதத்தை விட்ட வற[1]மில்லை வேதத்தி
னோதத் தகு[2]மற மெல்லா முளதர்க்க
வாத[3]த்தை விட்டு மதிஞர்[4] வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே. 61

அஞ்சன மேனி யரிவை[1]யோர் பாகத்த
னஞ்சொ டிருபத்து மூன்றுள[2] வாகம
மஞ்சலி கூப்பி யறுபத் தறுவரு
மஞ்சா முகத்தி[3] லரும்பொருள் கேட்டதே. 67

---

60. [1] எங்கள் இறைவன்
[2] சிதாகாசமாகிய பராசக்தி
[3] தண்மையான இயல்பினன்

61. [1] வரையறை செய்த கடமைகள்
[2] பயிலற்குரிய
[3] மறுப்புரைப் பேச்சுக்கள்
[4] அறிவுடையார்

67. [1] மைபோலக்கரிய உடம்பு உடைய உமையம்மை.
[2] இருபத்தெட்டு ஆகமங்கள்.
[3] ஐந்தாவது ஆகிய ஈசானமுகம்; சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் ஆகிய ஐந்து திருமுகங்கள் என்றலுமாம்.

பண்டித[1] ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி வாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையு
மண்ட முதலா[2] வரன்[3] சொன்ன வாறே. 69

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவ
முவ[1] மா மகேச ருருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மிற்ரும் பெற்ற
நவவா கம[2] மெங்க ணந்திபெற் ருனே. 72

அண்ண[1] லருளா லருளுஞ் சிவாகம
மெண்ணிலி கோடி[2] தொகுத்திடு மாயினு
மண்ண லறைந்த வறிவறி யாவிடி
னெண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே. 74

---

69. [1] புலவர்
[2] உலகங்கட்கு முதல்வன்
[3] சிவபெருமான்

72. [1] இரண்டு
[2] ஒன்பது ஆகமங்கள்; இச்செய்யுளில் சிவபிரானுடைய நவந்தரு பேதங்களாகிய சிவம், சத்தி, நாதம் விந்து, சதாசிவன், மகேசன், உருத்திரன், விட்டுணு, பிரமன் என்றவர்கள் வாயிலாக ஒன்பது ஆகமங்கள் தோன்றியமை குறிக்கப்பட்டுள்ளது.

74. [1] பெரியோனுகிய சிவன்.
[2] எண்ணிக்கையில்லாத கோடி.

மாரி[1] யுங் கோடை[2] யும் வார்பனி[3] தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்[4] முட னேசொலிக்
காரிகை யார்[5] க்குக் கருணைசெய் தானே. 75

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடி
னந்திக ளால்வர்[1] சிவயோக மாமுனி
மன்று[2] தொழுத பதஞ்சலி வியாக்ரம
ரென்றிவ ரென்னோ[3] டெண்மரு மாமே. 77

நந்தி யருளாலே நாதனாம் பேர்பெற்றோ
நந்தி யருளாலே மூலனை நாடினோ
நந்தி யருளாவ தென்செயு நாட்டினி
னந்தி வழி[1] காட்ட நானிருந் தேனே, 78

---

75. [1] கார், கூதிர் என்ற இரண்டு மழைக்காலம்.

[2] இளவேனில், முதுவேனிலாகிய இரு வெய்யிற்காலம்.

[3] முன்பனி, பின்பனியாகிய இரு பனிக்காலம்.

2. இலயப்படும் காலத்தைக் குறிக்கும்.

[4] இம்மொழிகளினுபதேச ஆகமப்பொருளை

[5] உமையம்மையார்.

77. [1] சனகர், சனந்தனர், சனாதர், சனற்குமாரர்.

[2] மன்று—அம்பலம். அதனுள் சிவபிரானைத் தொழுத பதஞ்சலியார், வியாக்கிரபாதர் என்ற இருவர்.

[3] என்றது திருமூல தேவரை.

78. [1] நந்தி பெருமான் உபதேசநெறியாகிய சைவ ஆகம மார்க்கம்,

செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்று
மப்படி நல்கு மருணந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றிற் றனிக்கூத்து[1]க் கண்டபி
ணெப்பிலி கோடி[2] யுகமிருந் தேனே. 84

சதாசிவந் தத்துவ முத்தமிழ் வேத
மிதாசனி யாதி[2]ருந் தேனின்ற கால
மிதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
யுதாசனி யாது[3]ட னேயுணர்ந் தோமால். 86

இருந்தேனிக் காயத்தி லெண்ணிலி கோடி
யிருந்தே னிராப்பக லற்ற விட[1]த்தே
யிருந்தே னிமையவ[2] ரேத்தும் பத[3]த்தே
யிருந்தே னென்னந்தி யிணையடிக் கீழே. 90

---

84. [1] திருவம்பலத்தில் சிவபிரானார் இயற்றும் ஐந்தொழில் திருக்கூத்து.
[2] "ஒப்பிலெழு கோடி" --(பாடம்.)

86. [1] 1. அடி :—சதாசிவ தத்துவத்தின் காரியமாகிய சுத்த வித்தையில் தோன்றிய அகார உகார மகாரம் என்ற மூன்று மூலமறைத் தமிழ் மொழிகள் என்பர் சாத்திரமறிந்தோர்.
[2] சுகாசனத்தைக்கொள்ளாது ஒடுங்கி.
[3] அயல் நோக்கின்றி.

90. [1] ஆணவ மலத்தும் மாயையுள்ளும் பட்டிராது நின்ற இடம் என்பர் பெரியோர்.
[2] வானோர். [3] நிலை.

பின்னை நின் றென்னே பிறவி பெறுவது
முன்னை நன் றாக முயறவஞ்[1] செய்கில
ரென்னை நன் றாக விறைவன் படைத்தனன்
றன்னை நன் றாகத் தமிழ்செய்யு மாறே[2]. 91

ஞானத் தலைவிதன் னந்தி நகர்[1] புக்கு
ஊனை[2] மி லொன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டியென் னுதனை யர்ச்சித்து
நானு மிருந்தேனற் போதி[3] யின் கீழே. 92

நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள்[1] சொல்லிடி
னூன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படு[2]ந் தானே. 95

---

91. [1] ஊக்கத்துடன் செய்யும் தவம்.

[2] தமிழ்மொழியில் ஆகமப்பொருளை வெளியிடுமாறு.

92. [1] திருவாவடுதுறையைக் குறிக்கும்.

[2] குறை.

[3] அரசமரம்.

95. [1] மறையாற் விளக்கப்படும் பெரும் பொருள்.

3. அடி :—உடம்பினைப்பற்றி நின்ற உணர்ச்சியிலுறகின்ற தியானத்தால் அமையும் இந்நூற்பொருள்.

[2] பயன் கைகூடும்; எதிர்ப்படும் எனலுமாம்.

அங்கி[1]மி காமைவைத் தானுடல் வைத்தா
னெங்குமி காமைவைத் தானுல கேழையுந்
தங்கிமி காமைவைத் தான்றமிழ்ச் சாத்திரம்[2]
பொங்கிமி காமை[3]வைத் தான்பொரு டானுமே. 97

விளக்கிப் பரமாகு மெய்ஞ்ஞானச் சோதி
யளப்பில் பெருமைய னானந்த நந்தி
துளக்கறு[1] மானந்தக் கூத்தன்சொற் போந்து[2]
வளப்பிற்[3] கயிலை வழியில்வந் தேனே. 101

வந்த மட[1]மேழு மன்னுஞ்சன் மார்க்க[2]த்தின்
முந்தி யுதிக்கின்ற மூலன் மடவரை
தந்திர[3] மொன்பது சார்வு மூவாயிரஞ்
சுந்தர வாகமச் சொன்[4]மொழிந் தானே. 105

---

97. [1] அக்கினி.
[2] தமிழ்மொழியில் சைவாகமப்பொருள் அமைந்த நூல்.
[3] பெருகி யோங்காமல்

101. [1] அசைதலில்லாத.
[2] சொல்லின்படியாய் வந்து.
[3] செழுமை.

105. [1] ஆகம நெறி பரப்பிய துறவியர் இருப்புக்கள்.
[2] சைவ நெறி
[3] நூற்பிரிவு
[4] அழகிய சிவாகமங்களின் பொருள்,

மூலனு[1] ரை செய்த மூவாயிரந் தமிழ்
ஞால[2] மறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ[3] ரன்றே. 107

ஆரறி வாரெங்க ளண்ணல்[1] பெருமையை
யாரறி வாரிந்த வகலமு நிகளமும்[2]
பேரறி யாத பெருஞ்சுட ரொன்றதின்
வேர[3] றி யாமை விளம்புகின் றேனே. 109

பாடவல் லார்நெறி பாட வறிகிலே
னாடவல் லார்நெறி யாட வறிகிலே
னாடவல் லார்நெறி நாட வறிகிலேன்
றேடவல் லார்நெறி தேடகில் லேனே[1]. 110

---

107. [1] திருமூல நாயனர். [2] உலகம்.
[3] சேர்வர்.

109. [1] சிவபெருமான்.
[2] முழுப்பரப்பும்.
[3] மூலம்.

110. [1] இச்செய்யுளில் பாடல், ஆடல், நாடல், தேடல் என்பன சரியை முதல் நான்கு நெறியைக் குறிக்கு மென்பர்.

விண்ணின் றிழிந்து[1] வினைக்கீடாய்[2] மெய்கொண்டு
தண்ணின்ற தாளை[3]த் தலைக்காவல்[4] முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா வானந்தக்
கண்[5]ணின்று காட்டிக் களிம்ப[6]றுத் தானே. 113

பதிபசு பாச[1] மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம நாதி[2]
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே. 115

ஆமே[1]வு பானீர் பிரிக்கின்ற வன்னம்[2]போற்
றாமே தனிமன்றிற்[3] றன்னந் தனிநித்தந்
தீமேவு பல்கர ண[4]ங்களு ளுற்றன
தாமே பிறப்பெரி சேர்ந்த வித்[5]தாமே. 120

---

113. [1] இறங்கி.
[2] கன்மங்களின் காரணமாக.
[3] அருள் நிலைபெற்ற திருவடிகள்.
[4] பண்டே அமைந்த காப்பு.
[5] இன்பத்தையுடைய அறிவு நோக்கு.
[6] மலம்.

115. [1] சிவபெருமான், உயிர்கள், ஆணவ காமிய மாயைகள் ஆகிய ஆகமங் கூறும் முப்பொருள்கள்.
[2] ஆதியில்லாதவை.
பாசம் பதியினைச் சென்று அணுகா பதி அணுகில் பாசம் நில்லா எனக் கூட்டுக.

120. [1] நீர். [2] அன்னப்பறவை.
[3] ஒப்பற்ற அம்பலம்.
[4] தீமையுற்ற பல அகப்புறக் கருவிகள்.
[5] வறுத்த விதை.

முப்பது மாறும்[1] படிமுத்தி யேணியா[2]
யொப்பிலா வானந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப வரிய சிவங்கண்டு தான்றெளிந்
தப்பரி சா[3]க வமர்ந்திருந் தாரே. 126

சோம்ப ரி[1]ருப்பது சுத்தவெ ளியிலே
சோம்பர் கிடப்பது சுத்தவெ ளியிலே
சோம்ப ருணர்வு சுருதி[2] முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கட் டுக்க[3]மே. 128

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமா
யாணிப்பொன் மன்றினு[1] ளாடுந் திருக்கூத்தைப்[2]
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. 131

---

126. [1] முப்பத்தாறு தத்துவங்கள்.
[2] வீடு அடைவித்தற்குரிய ஏணி வழி முறையாக.
[3] தன்மை.

128. [1] மலப்பற்றுக்கழன்று செயலற்றிருப்பவர்.
[2] மறைப்பொருள்.
[3] ஒன்றித் தங்கியின்புறுதல்.

131. 1, 2 அடிகள்—சிவத்துள் சத்தி பொருந்திய நிலையை உணர்த்துகின்றன.
[1] உரையாணியால் மாற்றறிந்த பொன்னாலாகிய அம்பலத்துள்.
[2] இறைவன் ஐந்தொழிற் கூத்து.

புரை[1]யற்ற பாலினு ணெய்கலந் தாற்போற்
றிரை[2]யற்ற சிந்தையுள் ளாரிய[3] னென்.செப்பு
முரையற் று[4]ணர்வோ ருடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற[5] சோதி கலந்தசத் தா[6]மே. 134

திருவடி யேசிவ மாவது தேரிற்[1]
றிருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கிற்
றிருவடி யேசெல் கதி[2]யது செப்பிற்
றிருவடியே தஞ்ச முட்டெளி வார்[3]க்கே. 138

புன்ஞானத் தோர்[1]வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞானத் தார்வேடம் பூணு ரருணண்ணித்
துன்ஞானத் தோர்சம யத்துரி சுள்ளோர்
பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லாரே. 1669

---

134. [1] குற்றம். [2] அலைதல்.
[3] ஆசாரியன்.
[4] சொல்லுதல் அழிந்து.
[5] எல்லையில்லாத.
[6] சோதியினை அடைந்த சத்துப் பொருளாம்.

138. [1] ஆராயின்.
[2] சென்று சாரும் இடம்.
[3] உள்ளத்தில் உண்மையைத் தெளிந்தோர்.

1669. [1] சிற்றறிவுடையோர்.
2 அடி :—நல்லறிவுடையோர் திருவருளை யடைந்துள்ளமையால் வேடம் புனையார்.
3 அடி :—பொய்யறிவுடையோரும், மதப்பற்றாகிய குற்றமுள்ள அறிவுடையாரும்.

சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கு
மவ[1]மான சாதன மாகாது தேரி
னவமா மவர்க்க[2]து சாதன நான்கு[3]
முவமான மில்பொரு ளுள்ளுற லாமே. 1670

மயல[1]ற் றிருள[2]ற்று மாமன மற்றுக்
கயலுற்ற கண்ணியர்[3] கையிணக்[4] கற்றுத்
தயலற் றவ[5]ரோடுந் தாமேதா மாகிச்
செயல[6]ற் றிருந்தார் சிவவேடத் தாரே. 1678

ஓடுங் குதிரை[1]க் குசை[2] திண்ணம் பற்றுமின்[3]
வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே
நாடுமி னந்தியை நம்பெரு மான்றன்னைத்
தேடுமின் பப்பொருள் சென்றெய்த லாமே. 1679

1670. [1] வீண்

[2] பிறப்பின் பயன் அடையாதவர்க்கு.

[3] சரியை, கிரியை, யோகம், ஞானம்.

1678. [1] மயக்கம் [2] அறியாமை.

[3] கெண்டைமீன் போன்ற கண்களையுடைய பெண்டிர்.

[4] கைவசப்படுதல்.

[5] பெண் விழைச்சு அற்ற பெரியோர்.

[6] உலகத்தொடர்பு.

1679. [1] ஓடி இயங்கும் பிராணவாயு.

[2] கடிவாளம்; அதாவது பிராணாயாமம்.

[3] உறுதியாய்க் கைப்பற்றுங்கள்.

[4] அடி :—தேடியடைதற்குரிய ஆனந்தமயமாகிய சிவம்.

குருட்டினை[1] நீக்குங் குரு[2]வினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே.[3] 1680

உள்ளம் பெருங்கோயி[1] லூனுடம்[2] பாலயம்[3]
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபு ரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே.[4] 1823

நினைவதும் வாய்மை[1] மொழிவது மல்லாற்
கனைகழ[2] லீசனைக் காண வரிதாங்
கனைகழ லீசனைக் காண்குற வல்லார்[3]
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே. 1826

1680. 1 அஞ்ஞானத்தை
2 அஞ்ஞான இருளை நீக்குபவர் என்ற காரணக்குறி.
3 கருக்குழியில் விழுந்து மீள மீளப் பிறப்புறும் வகையே.

1823. 1 பெருமையுள்ள கர்ப்பக்கிருகம் : திருமூலட்டானம்.
2 தசையாலாகிய உடல்.
3 பிராகாரம் அமைந்த கோயில்.
4 விழாக்காலங்களில் எடுக்குந் திருவிளக்கு.

1826. 1 மெய்ம்மை.
2 ஒலிக்கும் கழலணியுடைய திருவடிகள்.
3 நெஞ்சமலரில் நிறுத்திக் காணவல்லார்.
4 அடி :—அணியும் மலர், ஆட்டும் நீர் முதலிய கொண்டு புறப்பூசனை செய்யவும் வல்லோராவர்.

புண்ணியஞ்[1] செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
வண்ண லதுகண் டருள்புரி யாநிற்கு
மெண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம[2] ணழுவுகின் றூரே.[3] 1828

புண்ணிய மண்டலம் பூசை[1] நூ றூகுமாம்
பண்ணிய மேனி[2] யும் பத்துநூ றூகுமா
மெண்ணிலி[3]க் கைய[4] மிடிற்கோடி யாகுமாற்
பண்ணிடில் ஞானியூண்[5] பார்க்கில் விசேடமே. 1851

படம[1]ாடக் கோயிற்[2] பகவற்கொன் றீயி
னடமாடக் கோயி னம்பர்[3]க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. 1857

1828. [1] சிவபுண்ணிய வழிபாடு.
[2] அடையும் வழி அறியாமல்.
[3] தவறுகின்றூர்கள்.

1851. [1] புண்ணிய க்ஷேத்திர தரிசனம்.
[2] குருபூசை.
[3] அவாவற்ற ஞானி. [4] பிச்சை.
[5] சிவஞானிக்குத் திருவமுது செயல்.

1857. [1] துகிற்கொடி.
[2] மாடம் அமைந்த செங்கற் கோயில்.
[3] நடக்கின்ற உடலாகிய கோயிலிலுள்ள மகேசுவரன்.

ஆறிடும் வேள்வி[1] யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதி
னீறிடுந் தொண்டர்[2] நினைவின் பய[3] னிலை
பேறெனி லோர்பிடி பேற[4] து வாகுமே. 1861

வித்தக மாகிய வேடத்த[1] ருண்டவூ
ணத்த[2] னயன்மா லருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம்[3] பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. 1866

கொண்ட குறியுங் குலவரை[1] யுச்சியு
மண்டரு[2] மண்டத் தமரரு[3] மாதியு
மெண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்தினு
ளுண்டெனி னுமினி யுய்ந்தொழிந் தோமே.[4] 1870

1861. [1] மறைமுறையால் செய்பம் யாகம்.
[2] திருநீறணியும் சிவனடியார்.
[3] திருவமுதூட்டும் எண்ணத்தின் பயன்.
[4] பெறுதற்குரிய பயன்.

1866. [1] சிவஞான சாதன வடிவினர்.
[2] சிவன். [3] உண்டதன் மிகுதி.

1870. [1] சிறந்த மலைகள்.
[2]' அணுகுதற்கு அரிய.
[3] வானோர்.
[4] பிழைத்தனம்,

பெண்ணல்ல வாணல்ல பேட[1]ல்ல மூடத்து[2]
ளுண்ணின்ற சோதி யொருவர்க் கறியொணுக்
கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடு
மண்ணல்[3] பெருமையை யாய்ந்தது மூப்பே[4]. 1872

எட்டுத் திசையு மிறைவ னடியவர்க்
கட்ட வடிசி[1] லமுதென் றெதிர்கொள்வ
ரொட்டி[2] யொருநில மாள்பவ ரந்நிலம்
விட்டுக் கிடக்கில் விருப்பறி யாரே. 1884

அச்சிவ னுண்ணின்ற வருளை[1] யறிந்தவ
ருச்சியம் போதாக[2] வுள்ளமர் கோவிற்குப்[3]
பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்[4]
திச்சை[5] கெட் டேகாந்தத்[6] தேறி யிருப்பரே. 1885

1872. [1] பெண்ணும் ஆணுமல்லாத பிறப்பு.
[2] இன்னதென அறிய இயலாத மயக்கினுள்ளே.
[3] பெரியோனுகிய சிவன்.
[4] சிவஞான முதிர்ச்சி.

1884. [1] சமைத்த உணவு.
[2] பொருந்தி.

1885. [1] உள்ளத்துள் நின்றதிருவருளை.
[2] நண்பகற்பொழுது.
[3] உள்நிறைந்து அமரும் தலைவனுக்கு.
[4] வேறுபாடு இல்லாது தியானித்து.
[5] அவா. [6] தனியின்பம்.

பாசத்தை[1] நீக்கிப் பரனோடு[2] தன்னையு
நேசத்து நாடி மலமற நீக்குவோ
ராசற்ற[3] சற்குரு வாவோ ரறிவற்றுப்
பூசற்[4] கிரங்குவோர் போதக் குரு[5]வன்றே. 2052

பரிசன வேதி[1] பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த[2] குவலய[3] மெல்லாந்
திரிமலந்[4] தீர்ந்து சிவகதி யாமே. 2054

பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடு[1]
மத்தகர்[2]க் கன்றோ மறுபிறப் புள்ளது
வித்துக்குற் றுண்டு[3] விளைபுலம் பாழ்செய்யும்[4]
பித்தர்கட்[5] கென்றும் பிறப்பில்லை தானே. 2069

2052. [1] ஆன்மாவைப்பற்றிய மல சத்தியை.
[2] இறைவன்.
[3] குற்றம் அற்ற.
[4] ஆரவாரத்திற்கு.
[5] ஞானமளிக்கும் குருநாதன்.

2054. [1] தாழ்ந்த உலோகத்தைப் பொன்னாக மாற்றும் கருவியாகிய மருந்து.
[2] திருக்கையால் தொட்ட. [3] உலகு.
[4] மூன்று மலங்கள்.

2069. [1] 1 அடி :—சிவபத்தியைப் பிறிதொன்றற்கு விற்று உண்டு காலத்தைக் கழிக்கும்.
[2] அறிவு மயங்கியவர்கள்.
[3] பிறப்புக்குக் காரணமாகிய கன்மத்தை வலியழிய நுகர்ந்தொழித்து.
[4] பிறப்புக்கிடமாகிய கருப்பையை ஒழிக்கின்ற.
[5] சிவஞானிகள்.

ஒன்றே குலமு மொருவனே தேவனு
நன்றே[1] நினைமி னமனி[2]ல்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே[3]. 2104

சிவனை வழிபட்டா[1] ரெண்ணிலாத் தேவ
ரவனை வழிபட்டங் காமாறொன் றில்லை
யவனை வழிபட்டங் காமாறு[2] காட்டுங்
குருவை[3] வழிபடிற் கூடலு மாமே. 2119

மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்[1] நெஞ்சின்
மூடத்து[2] ளேநின்று முத்திதந் தானே. 2614

2104. [1] புண்ணியச் செயல். [2] கூற்றுவன்.
[3] பிழையுங்கள்

2119. [1] பூசித்தார்.
[2] அடையும் முறைமை.
[3] சிவஞானத்தை உபதேசிக்கும் ஆசாரியனை.

2614. [1] அவா அறுத்தவர்கள்.
[2] அந்தரங்கமான இடத்துள்.

ஆசை யறுமின்க[1] ளாசை[2] யறுமின்க
ளீசனே டாயினு மாசை யறுமின்க
ளாசை படப்பட வாய்வருந் துன்பங்க
ளாசை விடவிட வானந்த மாமே. 2615

கொதிக்கின்ற வாறு[1]ங் குளிர்கின்ற வாறு[2]ம்
பதிக்கின்ற வாறி[3]ந்தப் பாரக முற்றும்
விதிக்கின்ற வைவரை[4] வேண்டா துலக
நொதிக்கின்ற[5] காயத்து நாலொ[6]ன்று மாமே. 2621

எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசத்தி
யெங்குஞ் சிதம்பர[1] மெங்குந் திருநட்ட[2]
மெங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. 2722

2615. [1] உலக பாசங்களை விட்டொழியுங்கள்.
[2] பொருள்களை உடைமையாக் கொண்டு நுகரவேண்டும்பற்றுள்ளம்.

2621. [1] ஆக்கும்வகை.
[2] காக்கும் வகை.
[3] போக்கும் வகை.
[4] நியமிக்கும் ஐந்தொழில் தலைவர்.
[5] உண்டாகின்ற.
[6] உயிர் ஒருடம்பினின்று வேறுடம்பினுட் சேர்தற்குக் காரணமாகிய கன்மம்.

2722. [1] ஞானகாசம்.
[2] அழகிய நடனம்.
[3] உலகெல்லாம் சிவசக்திகளின் மயமாய சிவன் திருக்கூத்து ஆடும் என உணர்த்தியது இம்மந்திரம்.

முகத்திற் கண்[1] கொண்டு காண்கின்ற மூடர்கா
ளகத்திற் கண்[2] கொண்டு காண்பதே[3] யானந்த
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய[4]
சுகத்தைச்[5] சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே. 2944

உரையற்ற தொன்றை[1] யுரைசெய்யு மூடர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போற்[2] சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றி[3]ருந்தானன் புரிசடை யோனே[4]. 2955

மலமில்லை மாசி[1]ல்லை மானா[2]பி மான[3]க்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தி[4]யை ஞானத்தி னாலே
பலமன்னி[5] யன்பிற் பதித்து[6]வைப் போர்க்கே. 2957

2944. [1] புறத்தேயுள்ள கண்ணாகிய பொறி
[2] உள்விழியாகிய அறிவு.
[3] சிவனைத் தரிசிப்பதே.
[4] மணவாளனோடு கலந்து நுகர்ந்த.
[5] இன்பப்பேற்றை.

2955 [1] மொழியினாற் கூறப் பெறாத ஒப்பற்ற சிவத்தை.
[2] அலையில்லாத கடல் நீர்ப்பரப்பு போல.
[3] மறைதலின்றி.
[4] முறுக்குண்ட சடையுடையனாகிய சிவன்.

2957. [1] குற்றம்; [2] செருக்கு; [3] பற்று [4] சிவனை; [5] உறுதியாக அடைந்து.
[6] அன்பினால் உள்ளத்தில் பொருந்தவைத்து.

பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசந்
தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை
யரிந்தேன் வினையை யயின்[1] மன வாளான்[2]
முரிந்தேன் புரத்[3] தினை முந்துகின் றேனே. 2961

ஒன்றுகண் டீருல குக்கொரு தெய்வமு
மொன்றுகண் டீருல குக்குயி ராவது
நன்றுகண் டீரினி நமசிவா யப்பழந்[1]
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. 2962

அன்னையு மத்தனு[1] மன்புற்ற தல்லது
வன்னை[2]யு மத்தனு மாரறி வாரென்னை
யன்னையு மத்தனு மியானு[3] முடனிருந்
தன்னையு மத்தனை யான்புரந் தேனே. 2965

2961. 1 அடி படைப்புக் கடவுள் அமைத்த பிறவிப் பிணிப்பினின்றும் பிரிவு பெற்றேன்.
1 கூர்மை.
2 உள்ளமாகிய வாளினல்.
3 உடம்பு.

2962. 1 சிவமூலமந்திரம்

2965. 1 சிவன் 2 சிவசத்தி 3 ஆன்மா

நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம்
வினைப்பற் ற[1] றுக்கும் விமல னி[2]ருக்கும்
வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறிலவ னீளிய[3] னாமே. 2970

கரும்புந் தேனுங்[1] கலந்தோர் காயத்தி
லரும்புங் கந்தமு மாகிய வானந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே. 2976

முத்தினின் முத்தை முகிழி[1]ள் ஞாயிற்றை[2]
யெத்தனை வானோரு மேத்து மிறைவனை
யத்தனைக் காணா தரற்றுகின் றேனையோர்
பித்த னிவனென்று பேசுகின் றாரே. 2984

2970. [1] வினையின் தொடர்பு
[2] இயல்பாக மலத்தினின்றும் நீங்கிய இறைவன்
[3] நெடிதுள்ளவன்

2976. [1] உண்டல் உறங்கல்களால் வருமின்பத்துக்குக் குறிப்புச்சொற்கள்

2984. [1] தோன்றும் [2] பால சூரியன்

பூதக்கண் ணாடி[1] யிற் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடி[2] யில் வேறே வெளிப்படு
நீதிக்கண் ணாடி[3] நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணாடி[4] யிற் கேட்டுநின் றேனே. 2986

மண்ணிற் கலங்கிய நீர்போன் மனிதர்க
ளெண்ணிற் கலங்கி யிறைவ னிவனென
றுண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
தெண்ணிற் படுத்த[1] சிவனவ னாமே. 2991

மெய்த்தவத் தானை விரும்பு மொருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனி[1] யொக்குஞ்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்க
ளத்தனை நாடி யமைந்தொழிந் தேனே. 2992

வள்ளற் றலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள்[1] காண்பர்கொலோ வென்று
உள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தானுமே. 2994

2986. [1] தூலப்பார்வை
[2] ஞானப்பார்வை
[3] நூன்முறையான நோக்கு
[4] ஓசையுணர்வாகிய செவி

2991. [1] தெளிவுசெய்த; மண்ணொடு கலந்த நீர்
அதில் ஒரு சிறிது எடுத்து வேறாக வைப்பின் அது தெளிவு பெற்று
நிற்கும் எ-று

2992. [1] காதலாமலகநியாயம்—தெளிவுற அறிதற்குக் காட்டுவது

2994. [1] ஆணவமிக்க மக்கள்

பதினொராந் திருமுறை

திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை[1] மாடக் கூடல்[2]
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற[3]
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்[4]
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்[5]
பருவக் கொண்மூ[6]ப் படியெனப் பாவலர்க்
கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குரு[7]மா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா[8] உகைக்குஞ்[9] சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன்[10] தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. 123

---

123 [1] திங்கள் விளங்கும் மதில்

[2] நான்மாடக் கூடல் என்ற மதுரை

[3] பால்போலும் வெண்மையாகிய வரிகளையுடைய சிறகுகள்

[4] திருக்கோயிலின் பெயர்

[5] மொழி

[6] பருவகாலத்தில் பெய்யும் மேகம்

[7] நிறம்

[8] போர் செய்யும் விலங்காகிய யானை

[9] செலுத்தும்

[10] நீ என்பால் அன்பனுயிருப்பது போன்று என்பால் அன்புடையான்

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

வாகை விரிந்துவெண் நெற்றொ[1] லிப்ப மயங்கிருள் கூர்
நடு நாளைஆங்கே,
கூகையொ டாண்டலை[2] பாடஆந்தை கோட[3] தன்
மேற்குதித் தோட வீசி,
ஈகை[4] படர்தொடர் கள்ளிநீழல் ஈமம்[5] இடுசுடு
காட்ட கத்தே,
ஆகங்[6] குளிர்ந்தனல் ஆடும்எங்கள் அப்பனிடந்திரு
ஆலங்காடே. 124

திருவிரட்டை மணிமாலை

ஈச னவனல்லா தில்லை யெனநினைந்து[1]
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமை[2]க் காக்கும் பிரான் 125

அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து[1] வானோர் பெருமானே
எஞ்ஞான்று[2] தீர்ப்ப திடர். 126

---

124. [1] முதிர்ந்துலர்ந்த காய்
[2] ஆண்மகன் தலைபோன்ற தலையுடைய ஒரு பறவை
[3] கொம்புகள்
[4] இண்டைக்கொடி
[5] சுடுகாட்டு விறகடுக்கு
[6] உடம்பு

125. [1] அவனல்லாது ஈசன் இல்லை என நினைந்து என இயைக்க
[2] மீட்டும் உலகில் பிறவியெடுக்காமல்

126. [1] நஞ்சக்கறை பொருந்திய கழுத்துடைய
[2] எந்நாள்

இடர்[1] களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரு நெறி[2] பணியா[3] ரேனுஞ்—சுடருருவில்[4]
என்பறாக் கோலத்[5] தெரியாடும்[6] எம்மானார்க்
கன்பறா தெ[7] ன்நெஞ் சவர்க்கு. 127

யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்—யானேயக்
கைம்மா[1] வுரி[2] போர்த்த கண்ணுதலான்[3] வெண்ணீற்ற
அம்மானுக் காளா[4] யி னேன். 128

திங்க ளிதுசூடிச் சில்பலி[1] க்கென் றூர்திரியேல்[2]
எங்கள் பெருமானே என்றிரந்து—பொங்கொளிய
வானோர்[3] விலக்காரேல் யாம்விலக்க வல்லமே
தானே அறிவான் தனக்கு. 129

---

127. [1] துயர்
[2] செல்லத்தக்க வழி
[3] கட்டளையிடாா
[4] ஒளிவடிவில்
[5] எலும்பு மாலை நீங்காத அழகு
[6] தீயை ஏந்தியாடுகின்ற
[7] பற்று ஒழியாது

128. [1] துதிக்கையை யுடைய விலங்காகிய யானை
[2] தோல்
[3] நெற்றிக்கண்ணையுடையன்
[4] அடிமை

129. [1] சிறிதாகிய பிச்சையுணவு
[2] திரியவேண்டா
[3] மிக்க ஒளியை யுடைய தேவர்

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்[1]
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது. 130

க்ஷேத்திர வெண்பா

ஓடுகின்ற நீர்மை[1] ஒழிதலுமே[2] உற்றாருங்[3]
கோடுகின்றார்[4] மூப்புங் குறுகிற்று[5]—நாடுகின்ற
நல்லச்சி[6]ற் ற[7]ம்பலமே[8] நண்ணாமுன் நல்நெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 131

பொன்வண்ணத்தந்தாதி

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்மேனி
பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை
வெள்ளிக்குன்றந்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை[1]
தன்னைக்கண்ட
என்வண்ணம்[2] எவ்வண்ணம் அவ்வண்ண மாகிய
ஈசனுக்கே 132

---

130. 1 அடிமை பூண்டேன்
(3-அடி) நும்பிரான் எவ்வுருவோ என்பார்களுக்கு யான் என்ன உரைப்பேன் எ-று

131. 1 விரைந்து ஓடித்திரியும் தன்மை
2 நீங்கிய அளவில்
3 உறவினர்களும்
4 மாறுபாடு அடைகின்றார்கள்
5 அணுகியது
6 ஆதாரம்
7 ஒடிந்து
8 வெளியிடம்

132. 1 திருமாலாகிய இடபம்; அல்லது பெரிய இடபம்
2 தன்னை நோக்கிக் காதல் மிகக்கொண்டதால் எனக்கு உண்டாகிய மேனியின் நிறம்

விரிகின்ற ஞாயிறு[1] போன்றது மேனிஅஞ் ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதிர்[2] ஒத்தது செஞ்சடை அச்சடைக் கீழ்ச்
சரிகின்ற கார்இருள் போன்றது கண்டம்[4] அக் கார்இருள் கீழ்ப்
புரிகின்ற[5] வெண்முகில் போன்றுள தால்எந்தை ஒண் பொடியே[6]. 133

சிந்தனை செய்ய மனம்அமைத்தேன் செப்ப நாஅமைத் தேன்
வந்தனை[1] செய்யத் தலையமைத் தேன்கை தொழஅமைத் தேன்
பந்தனை[2] செய்வதற் கன்பமைத் தேன்மெய்அரும்ப[3] வைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே. 134

திருவாரூர் மும்மணிக் கோவை

வந்தார் எதிர்சென்று நின்றேற் கொளிரும்வண் தார் தழைகள்[1]
தந்தா ரவையொன்று மாற்றகில் லேன்தக்கன் வேள்வி செற்ற
செந்தாமரைவண்ணன் தீர்த்தச் சடையன்[2] சிராமலைவாய்க்
கொந்தார் பொழில[3] ணி நந்தாவன[4] ஞ்சூழ் குளிர்புனத்தே. 135

---

133 [1] சூரியன்
[2] வெம்மையான கிரணங்கள்
[3] சாய்கின்ற
[4] கழுத்து
[5] விளங்குகின்ற
[6] ஒளி பொருந்திய திருநீறு

134. [1] வணக்கம்
[2] பற்றிக்கோடல்
[3] புளகம்கொள்ள

135. [1] வளமுள்ள மாலையையும் தழையையும்
[2] தூய கங்கையைச் சடையிலுடையான்
[3] பூங் கொத்துக்கள் நிரம்பிய சோலை
[4] (நந்தவனம்)—இன்புறும் பூங்கா

கைலைபாதி காளத்திபாதி யந்தாதி

சொல்லும் பொருளுமே தூத்திரி[1] யும் நெய்யுமா
நல்இடிஞ்சில் [2] என்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று. 136

பெற்ற பயனிதுவே யன்றே பிறந்தியான்
கற்றவர்கள் ஏத்துஞ்சீர்க் காளத்திக்--கொற்றவற் [1] குத்
தோளாகத் தாடரவஞ் சூழ்ந்தணிந்த [2] அம்மானுக்
காளாகப் பெற்றேன் அடைந்து. 137

திருவீங்கோய்மலை எழுபது

அடியும் முடியும் அரியும் அயனும்
படி [1] யும் விசும்பும் [2] பாய்ந்தேறி--நொடி [3] யுங்கால்
இன்ன தெனஅறியா ஈங்கோயே ஓங்கார
மன்னதென நின்றான் [4] மலை. 138

---

136. [1] தூய திரி
[2] விளக்கிடுதற்குரிய மண்ணகல்: வெண்பாவாகிய விளக்கு ஏற்றுதற்குச்சொல்லாகிய திரியும் பொருளாகிய நெய்யும், நாவாகிய அகலும் அமைந்தபடியை உருவகப்படுத்தியுள்ளார்

137. [1] தலைவர்
[2] தோள்களினும் மார்பினும் ஆடுகின்ற பாம்பை முறையே சுற்றியும் அணிந்தும் நின்ற

138. [1] நிலம்
[2] ஆகாயம்
[3] சொல்லுங்கால்: அடியும் முடியும், அரியும் அயனும், படியும் விசும்பும் பாய்ந்து ஏறி—இப்பெயர் வினைகள் முறை நிரனிறையாக நிற்பது அறிக.
[4] ஓம் என்ற மந்திரவெழுத்தின் தலைவனாக நின்றவன்

கள்ள முதுமறவர்[1] காட்டகத்து மாவேட்டை
கொள்ளென் றழைத்த குரல்கேட்டுத்—துள்ளி
இனக்கவலே[2] பாய்ந்தோடும் ஈங்கோயே நந்தம்
மனக்கவலே தீர்ப்பான் மலே. 139

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

பெண்கொண் டிருந்து வருந்துங்கொ லாம்பெரு மான்
திருமால்
வண்கொண்ட[1] சோலே வலஞ்சுழி யான்மதி சூடிநெற்றிக்
கண்கொண்டகோபந்[2] கலந்தனபோல்மின்னிக் கார்புனத்
[துப்
பண்கொண்டு வண்டினம் பாடநின் றார்த்தன[3]
[பன்முகிலே 140

தனிப்பா

அஞ்சு முகம்[1] தோன்றில் ஆறு முகம்தோன்றும்
வெஞ்சமரில்[2] அஞ்சல்[3] என வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால்[4] நினேக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றேதுவார் முன். 141

---

139. [1] வஞ்சத்தையுடைய முதிய வேட்டுவர்
[2] கூட்டமாகிய காட்டுப்பசுக்கள்
[3] கவலே (கபிலே) காட்டுப்பசு

140. [1] வளப்பம் கொண்ட
[2] நெருப்பு
[3] ஒலித்தன

141. [1] அஞ்சும்முகம் : இடமுமாம்
[2] கொடிய போர்
[3] அஞ்சவேண்டா
[4] ஒருமுறை

மூத்தநாயனர் திருவிரட்டை மணிமாலை

முன்னிளங் காலத்தி லேபற்றி னேன்வெற்றி மீனுயர்த்த
மன்[1] னிளங் காமன்தன் மைத்துன னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களி றேஇமை யோர்[2] சிங்க மேஉமை
[யாள்
தன்னிளங் காதல னே[3] சர ணுவுன் சரணங்களே.[4] 142

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை[1] தணி விப்பான்[2]—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினுற்
கண்ணிற் பணிமின்[3] கனிந்து. 143

சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை

தாமரைக்கோ[1] வும்நன் மாலும் வணங்கத் தலையிடத்துத்[2]
தாமரைக் கோவணத் தோடு[3] ரந் துண்ணினுஞ் சார்ந்த
வர்க்குத்
தாமரைக் கோமளத்[4] தோடுல காளத் தருவர்கண்டீர்
தாமரைக் கோமளக் கை[5] த்தவ ளப்பொடி[6]ச் சங்கரரே.
144

---

142 [1] மகரக்கொடியை உயர்த்திய பெரியோன்
[2] தேவர்கள்
[3] உமையம்மையாரின் இளமையான புதல்வனே
[4] திருவடிகள்

143. [1] அவா
[2] குறையச் செய்வான்
[3] வணங்குவீர்களாக

144. [1] திருமாலின் நாபிக்கமலத்தில் தோன்றிய தலைவன் ஆகிய பிரமன்
[2] பிரம கபாலத்தில்
[3] தாம் இடுப்பில் கௌபீனத்தோடு
[4] தாமரை மலரில் அமர்ந்த திருமகள்
[5] தாமரை மலர்போன்ற அழகிய கைகள்
[6] வெண்மையாகிய திருநீறு

சிவபெருமான் திருவந்தாதி

மாலை யொருபால் மகிழ்ந்தானை[1] வண்கொன்றை
மாலை யொருபால் முடியானை[2] --மாலை
ஒளியானை[3] உத்தமனை உண்ணாநஞ் சுண்டற்
கொளியானை[4] ஏத்தி[5] உளம்.[6] 145

சிவபெருமான் திருமும்மணிக்கோவை

மாறு தடுத்த[3] மணிக்கங்கை திங்களின்
ஈறு[4] தடுப்பக் கிடக்குமே--நீறடுத்த
செந்தாழ் வரையின்[1] திரள்போல் திருமேனி
எந்தாய்நின் சென்னி யிடை.[2] 146

கோயினான்மணிமாலை

குடை கொண்டிவ் வைய மெலாங் குளிர்
வித்தெரி பொற்றிகிரிப்
படை[1] கொண் டிகல்தெறும்[2] பார்த்திவ[3] ராவதிற்
பைம்பொற்கொன்றைத்
தொடை[4] கொண்ட வார்சடை அம்பலத்தான்
தொண்டர்க் கேவல்செய்து
கடை[5] கொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே. 147

---

145. 1 திருமாலைத் தன்னுடம்பில் ஒருபாதியிலுடையவனை
2 வளமாகிய கொன்றை மலர் மாலையைத் தன்முடியில் ஒருபகுதியிலுடையவனை
3 மாலைக்காலத்துச் செவ்வானத்தொளியை யுடையவனை
4 ஒருவரும் உண்ண இயலாத நஞ்சை உண்பதற்கு மறையாது முன்னின்றவனை
5 உள்ளமே
6 ஏத்துவாய்

146. 1 வெண்ணீறு பூசிய செம்மையான மலைச்சாரலைப் போன்ற
2 தலையில்
3 பகையைக்கடந்த
4 பிறைத்துண்டம்

147. 1 சக்கராயுதம்
2 பகைவரை யழிக்கும்
3 அரசர்
4 மாலை
5 வீட்டு வாயில்

திருக்கழுமல மும்மணிக்கோவை

ஒளிவந்த வாபொய் மனத்திருள் நீங்களன் னுள்ள
வெள்ளக்
தெளிவந்த வாவந்து தித்தித்த வாசிந்தி யாததொரு
களிவந்த வாஅன்பு கைவந்த வாகடை சாரமையத்
தெளிவந்த வாநங் கழுமல வாணர்தம் இன்னருளே. 148

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழி
போய்ப்
பொருந்தேன்[1] நரகிற் புகுகின்றி லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன்[2] முகந்துகொண் டுண்டு பிறிதொன்றில்
ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன் ஒருவரை யாதொன்
றுமே. 149

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

ஏகம்ப னே[1] என்னை ஆள்பவ னேஇமை யோர்[2]க்கிரங்கிப்
போகம்பன் ஞானுங் கொடுக்கின்ற நாயக பொங்கும் ஐவாய்
நாகம்[3] பொன் ஆரம் எனப்பொலி வுற்றுநன் ணீறணியும்
ஆகம்[4] பொன் மாமலை ஒப்பவ னேஎன்பன் ஆதரித்தே[5].
150

---

148. மனத்திருள் நீங்க ஒளி வந்தவாறும், உள்ள வெள்ளம் தெளிவந்த வாறும், தித்தித்தவாறும், களிவந்தவாறும், அன்புகையகத்து வந்த வாறும், கடைக்காலம் சாரும் அளவில் எளிமையில் வந்தவாறும், நம் கழுமலத்து இறைவர் இனிய திருவருளாம் என்க

149. [1] மயக்கஞ் செய்யும் ஐம்புலன் வழியில் சேரமாட்டேன்
[2] மருதமரத்தின் கீழ் அமர்ந்துள்ள பெருந்தேன் போன்று இனிய சிவபிரான் "அந்த இடைமருதி லானந்தத் தேனிருந்த பொந் தைப் பரவி நாம்பூவல்லி கொய்யாமோ"—திருவாசகம் (ஒப்பு)

150. [1] திருக்கச்சித்தலத்து இறைவனே
[2] தேவர்
[3] ஐந்தலைநாகம்
[4] திருமேனி
[5] விரும்பி

விநாயகர் திருவிரட்டை மணிமாலை

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலை[1] வியன்நாரை யூர்முக்கண்
அரசு[2] மகிழ் அத்திமுகத் தான்.[3] 151

கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம்

அவநெறி[1]க்கேவிழப் புக்கவிந் நானமுந் தாமை வாங்கித்[2]
தவநெறிக் கேயிட்ட தத்துவ னேஅத் தவப்பயனுஞ்
சிவநெறிக் கேஎன்னை உய்ப்பவ னே[3] சென னந்[4] தொறுஞ் செய்
பவமறுத் தா[5]ள்வதற் கோ தில்லை நட்டம்[6] பயில்கின்றதே. 152

திருத்தொண்டர் திருவந்தாதி

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதி[1] சென்றுங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணங்[2] காட்டி எனக்குள்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய்[3] எனப்பெற் றவன்முரல் தேன்[4]
ஒழுகும் மலரின் நற் றார்எம்பி ரான்நம்பி யாரூரனே. 153

---

151. [1] புன்னைமரங்கள் பொருந்திய மகிழ்தற்குரியசோலை
[2] மூன்று கண்களையுடைய தலைவனாகிய சிவபெருமான்
[3] யானைமுகக் கடவுளாகிய விநாயகன்: அரசு, மகிழ், அத்தி என்ற மரப்பெயர்கள் தொனித்தலறிக

152. [1] வீண்வழி
[2] விழுந்து வருந்தாமல் எடுத்து
[3] செலுத்துபவனே
[4] பிறப்பு [5] பாவங்களைத் தொலைத்து
[6] நடனம்

153. [1] ஒளிவடிவினன் ஆகிய சிவனார்
[2] தமிழ்மொழியிலமைந்த பழைய அடிமை ஓலை
[3] அடிமைப்பணி புரிவாய் [4] ஒலிக்கும் தேன்

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

இரவும் பகலும்நின் பாதத் தலர்[1] என் வழிமுழுதும்
பரவும் பரிசே அருளுகண் டாய்இந்தப் பாரகத்தே
விரவும் பரமத கோளரி[2] யேகுட வெள்வளை[3] கள்
தரளஞ்[4] சொரியுங் கடல்புடை சூழ்ந்த தராய்[5]
மன்னனே. 154

ஷ திருச்சண்பை விருத்தம்

குவளைக் கருங்கட் கொடியிடை[1] துன்பந் தவிர அன்று
துவளத் தொடுவிடந்[2] தீர்த்த தமிழின் தொகைசெய்தவன்
திவள[3]க் கொடிக்குன்ற மாளிகைச்[4] சூளிகை[5]ச்
சென்னி[6] யின் வாய்த்
தவளப் பிறைதங்கு சண்பையர் காவலன் சம்பந்தனே. 155

ஷ திருமும்மணிக்கோவை

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள்[1] யாப்புக்[2] குரியன ஒண்கலியைப்
பொன்றுங்[3] கவுணியன்[4] சைவ சிகாமணி[5] பொன்னடியே
156

15!. [1] திருவடிமலர்கள
[2] புறச்சமயங்களாகிய யானைகளை யழிக்கும் சைவசமயச் சிங்கம்
[3] வளைந்த வெள்ளிய சங்குகள்
[4] முத்து
[5] 'பூந்தராய்' என்ற சீகாழிப்பெயர் முதல் குறைந்து நின்றது

155. [1] குவளைமலர் போன்ற கண்களையும் கொடிபோன்ற இடையையும் உடைய வணிகமாது
[2] தளரும்படித் தீண்டிய நஞ்சு
[3] விளங்கும் [4] குன்றம்போன்று உயர்ந்துள்ள மாளிகை
[5] நிலாமுற்றம் [6] உச்சி [7] வெண்மையான பிறை
இத்திருப்பாட்டில் திருஞானசம்பந்தர் திருமருகலில் விடந்தீர்த்தருளியது குறிக்கப்பட்டது

156. [1] சங்கத்துள் அமரும் புலவர்கள்
[2] பாட்டு [3] கலிக்கொடுமையைப் போக்கும்
[4] கௌண்டின்ய கோத்திரத்தார்
[5] சம்பந்தர் சிறப்புப்பெயர்

ஷ திருக்கலம்பகம்

நலமலி தரும்புவனி[1] நிறைசெய்புக ழின்பநனி
பனிமதி[2] யணைந்த பொழில்சூழ்
பொலமதி லிரும்புகலி[3] யதிபதி[4] விதம்பெருகு
புனிதகுணன்[5] எந்தம் இறைவன்
பலமலி தருந்தமிழின் வடகலை விடங்கன்[6] மிகு
பரசமய வென்றி யரி[7] தன்
சலமலி தருங்கமல சரண்[8] நினைவன் என்றனது
தகுவினைகள் பொன்றும் வகையே.[9] 157

---

157. [1] உலகு [2] குளிர்ச்சியுடைய சந்திரன்
[3] பொன்னாலமைந்த மதில் சூழ்ந்த பெரிய சீகாழி
[4] தலைவன் [5] தூய குணங்களுடையோன்
[6] அழகன்
[7] புறச்சமயங்களை வெற்றிகொண்ட சிங்கம்
[8] தாமரை மலர் போன்ற திருவடிகள்
[9] கெடும்படி

பன்னிரண்டாந் திருமுறை

சேக்கிழார் நாயனர் அருளிய

திருத்தொண்டர் புராணம்

தடுத்தாட்கொண்ட புராணம்

கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு[1] முடிமேல் வைத்த
வங்கண[2] ரோலை காட்டி யாண்டவர்[3] தமக்கு நாடு
மங்கையர் வதன[4] சீத மதி[5] யிரு மருங்கு மோடிச்
செங்கயல்[6] குழைக[7] ளூடுந் திருமுனைப் பாடி நாடு. 1

பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னி
லருமறைச் சைவ[1] மோங்க வருளினா லவத ரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்க[2] ணீடுந் திருநாவ லூரா மன்றே. 2

மாதொரு பாக னார்க்கு[1] வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்திற் றோன்றி மேம்படு சடைய னாருக்
கேத[2] மில் கற்பின் வாழ்க்கை மனை[3] யிசை ஞானி யார்பாற்
றீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார். 3

---

1. [1] கொன்றை மலர்மாலை. [2] அழகிய அருட்கண்ணுடையார்.
[3] ஈண்டு "ஆட்கொள்ளப்பட்டவா" எனச் செயப்பாட்டுப் பொருளில் நின்றது.
[4] முகம். [5] குளிர் திங்கள்.
[6] செவ்வரி படர்ந்த கெண்டை மீன்களை ஒத்த கண்கள்.
[7] காதில் அணிந்த குண்டலங்கள்.

2. [1] வைதிக சைவ சமயம். [2] மெய்ம்மை குறையாத சீர்உடைய மறையோர்கள்.

3. [1] உமையம்மையை ஒரு பங்கில் உடைய சிவபெருமானுக்கு.
[2] குற்றம். [3] இல்லக்கிழத்தியார்.

தம்பிரா னருளி ளுலே தவத்தினுன் மிக்கார் போற்று
நம்பியா ரூர ரென்றே நாமமுஞ் சாற்றி மிக்க
வைம்படைச்[1] சதங்கை[2] சாத்தி யணிமணிச் சுட்டி[3] சாத்திச்
செம்பொனு ணரையின்[4] மின்னத் தெருவிற்றே
ருருட்டு நாளில். 4

நரசிங்க முனைய ரென்னு நாடுவா ழரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர்[1] தம்பாற் சென்று
விரவிய நண்பி னுலே வேண்டினர் பெற்றுத் தங்க
ளரசிளங் குமரற் கேற்ப வன்பினுன் மகன்மைக்[2]
கொண்டார். 5

பெருமைசா லரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னுந் தங்கள்
வருமுறை மரபின் வைகி வளர்ந்துமங் கலஞ்[1] செய்கோலத்
தருமறை முந்நூல்[2] சாத்தி யளவிறுல் கலைகளாய்ந்து
திருமலி சிறப்பி னேங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். 6

தந்தையார் சடைய னுர்தந் தனித்திரு மகற்குச் சைவ
வந்தணர் குலத்துத் தங்க ளரும்பெரு மரபுக் கேற்ப
வந்ததொல் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி[1] மறையோன்
றன்பாற்
செந்திரு[2] வனைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார். 7

---

4. [1] திருமாலின் படைக்கலங்கள் ஆகிய சங்க சக்கர சார்ங்க கதா கட்கங்களின் வடிவாகச்செய்த பொற்பணிகள்; குழவிகளின் காப்புக்காக கழுத்தில் அணிவது.

[2] கால்அணி. [3] நெற்றியணி. [4] இடையில்.

5. [1] பெற்றோர். [2] சுவீகார மகனுகக் கொள்ளுதல்.

6. [1] நாண் மங்கலம் முதலிய சிறப்பு.

[2] மார்பில் அணியும் முப்புரி நூல்.

7. [1] செவ்விய திருமகள்:

[2] மறையின் ஆறு அங்கங்களின் அறிவு பெற்றவர்.

குலமுத லறிவு மிக்க கோத்திர முறையுந் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை யேற்று
மலர்தரு முகத்த னாகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி யொத்த பண்பினு லன்பு நேர்ந்தான். 8

மற்றவ னிசைந்த வார்த்தை கேட்டவர் வள்ள[1] றன்னைப்
பெற்றவர் தம்பாற் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
யுற்றதோர் மகிழ்ச்சி யெய்தி மணவினை யுவந்து சாற்றிக்
கொற்றவர்[2] திருவுக் கேற்பக் குறித்துநா ளோலை
விட்டார். 9

மங்கலம் பொலியச் செய்த மணவினை யோலை யேந்தி
யங்கயற் கண்ணி னாரு[1] மாடவர்[2] பலரு மீண்டிக்
கொங்க[3] லர்ச் சோலை மூதூர் குறுகினு ரெதிரே வந்து
பங்கய வதனி மாரு[4] மைந்தரும் பணிந்து கொண்டார். 10

மகிழ்ச்சியான் மணமீக் கூறி மங்கல வினைக ளெல்லாம்
புகழ்ச்சியாற் பொலிந்து தோன்றப் போற்றிய தொழில
ராகி
யிகழ்ச்சியொன் றுனு மின்றி யேந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்த ரீண்டி நீண்முளை சாத்தி னார்கள்.[1] 11

---

9. 1 நம்பியாரூரர். 2 அரசர்.

10. 1 கயல்மீன்போன்ற கண்களையுடைய இளமகளிர்.
2 ஆண்பாலார். 3 தேன்.
4 தாமரை மலர் போன்ற முகங்களையுடைய மகளிர்.

11. 1 அங்குரார்ப்பணம் அல்லது முளைப்பாலிகையிடு என்னும் சடங்கு செய்தனர்.

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார்
செய்யத்
துணர்மலர்க் கோதை[1] த் தாமச்[2] சுரும்ப[3] ணை தோளி
னைப்
புணர்மணத் திருநாண் முன்னாட் பெருந்திய விதியி னாலே
பணைமுர சி[4] யம்ப[5] வாழ்த்திப் பைம்பொனாண் காப்புச்
சேர்த்தார்[6]. 12

மாமறை விதிவ மூாமன் மணத்துறைக் கடன்க ளாற்றித்
தூமறை மூதூர்க் கங்குன்[1] மங்கலந் துவன்றி யார்ப்பத்
தேமரு தொடையன்[2] மார்பன் றிருமணக் கோலங் காணக்
காமுறு[3] மனத்தான் போலக் கதிரவ னு[4] தயஞ்
செய்தான். 13

காலைசெய் வினைகண் முற்றிக் கணிதநூற் புலவர்[1] சொன்ன
வேலை[2] வந் தணையு முன்னர் விதிமணக் கோலங் கொள்வா
னாலசைந் திலங்கு மார்பி னுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை[3] புக்கான். 14

வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை[1] யடுத்த தூநீர்ப்
பாசனத்[2] தமைந்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொற்
றிண்கா
லாசனத்[3] தணிநீ ராட்டி யரிசனஞ்[4] சாத்தி யன்பா
லீசனுக் கினியான் மேனி யெழில்பெற விளக்கி னார்கள். 15

---

12. 1 மாலை. 2 கோதைத்தாமம் என்பது இருபெயரொட்டு.
3 வண்டு. 4 பருத்த பேரிகைக் கருவி. 5 ஒலிக்க.
6 இது சமாவர்த்தனம் என்னும் சடங்கு என்பர்.

13. 1 இராப்போது. 2 மாலை. 3 விருப்பம் கொள்ளும்.
4 சூரியன்.

14. 1 சோதிடர். 2 நற்பொழுது. 3 நீராடற்குரிய இடம்.

15. 1 மணம். 2 பாத்திரம். 3 இருக்கை. 4 பசுமஞ்சட்பொடி.

அகில்விரைத் தூப[1] மேய்ந்த வணிகொள்பட் டாடை
சாத்தி
முகினு[2] ழை மதியம் போலக் கைவலான்[3] முன்கை சூழ்ந்த
துகில்[4] கொடு குஞ்சி[5] யீரம் புலர்த்தித்தன் றூய செங்கை
யுகிர்[6] நுதி[7] முறையிற் போக்கி யொளிர் நறுஞ் சிகழி[8]
யார்த்தான். 16

தூ நறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதி[1]
லான தண் பனிநீர் கூட்டி யமைத்தசந் தனச்சே றுட்டி
மான்மதச்[2] சாந்து தோய்ந்த மங்கலக் கலவை[3] சாத்திப்
பான்மறை முந்நூன் மின்னப் பவித்திரஞ்[4] சிறந்த
கையான். 17

தூமலர்ப் பிணையன் மாலை துணரிணர்க் கண்ணி கோதை
தாமமெ[1] ன் றினைய வேறு தகுதியா லமையச் சாத்தி
மாமணி யணிந்த தூய வளரொளி யிருள்கால் சீக்கு
நாமநீள் கலன்[2] கள் சாத்தி நன்மணக் கோலங்
கொண்டார். 18

மன்னவர் திரு[1] வுந் தங்கள் வைதிகத் திரு[2] வும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
றன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புர[3] விமேற் கொண்டு
போந்தார். 19

---

16. 1 நறுமணப்புகை. 2 மேகம்.
3 ஒப்பனைத்திறம் தெரிந்தோன். 4 பருத்தியாடை.
5 தலைமயிர். 6 நகம். 7 முனை. 8 மாலை.

17. 1 நன்னிற மலர்கள். 2 கஸ்தூரி.
3 மங்கலத்துக்குரிய நறுமணக் கலப்புச் சாந்தம்.
4 மோதிரம்.

18. 1 இவை பல உறுப்புக்களிலும் அணியப்பெறும் மாலை விசேடங்கள்
2 பொற்பணிகள்.

19. 1 அரசச் செல்வம். 2 மறையவர் செல்வம்.
3 நல்லிலக்கணம் அமைந்த குதிரை. (வேகப்புரவி-பா-ம்)

இயம்[1] பல துவைப்ப [2]வெங்கு மேத்தொலி[3] யெடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை யொலியி னேங்க
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
யுயர்ந்தவா கன[4] யா னங்கண்[5] மிசைக்கொண்டா ருழைய[6]
ராளுர். 20

மங்கல கீத நாத[1] மறையவர் குழாங்கள் சூழ்ந்து
தொங்கலும் விரையுஞ் சூழ்ந்த மைந்தருந் துவன்றிச்[2]
சூது[3] ம்
பங்கய முகை[4] யுஞ் சாய்த்துப் பணைத்தெ[5] ழுந் தணியின்
மிக்க
குங்கும முலையி னரும் பரந்தெழு கொள்கைத் தாகி 21

அருங்கடி[1] யெழுந்த போழ்தி னர்த்தவெள் வளை [2]களாலு
மிருங்குழை மகரத்[3] தாலு மிலங்கொளி மணி[4] களாலு
நெருங்கிய பீலி[5] ச் சோலை நீலநீர்த் தரங்கத்[6] தாலுங்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த
தன்றே. 22

நெருங்குதூ ரிய[1] ங்களேங்க நிரைத்தசா மரைகளோங்கப்
பெருங்குடை மிடைந்து'செல்லப் பிணங்குபூங் கொடிக
ளாட
வருங்கடி மணம்வந் தெய்த வன்றுதொட் டென்று மன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூ
ராமால். 23

---

20. 1 இசைக் கருவிகள். 2 ஒலிக்க. 3 பாராட்டு.
4 ஊர்திகள். 5 சிவிகைகள். 6 சுற்றத்தார்.

21. 1 பாட்டு ஓசை. 2 நெருங்கி.
3 சூதாடு கருவி. 4 தாமரை மொட்டு. 5 பெருத்து.

22. 1 திருமணக் கூட்டம். 2 வளையல், சங்குகள், (சிலேடை).
3 மகர வடிவாகிய குண்டலம், மகரமீன் (சிலேடை).
4 இரத்தினம், முத்து (சிலேடை.)
5 மயிற்றோகை. 6 அலை.

23. 1 வாத்தியங்கள்.

நிறைகுடந்[1] தூப தீப நெருங்குபா லிகைக ளேந்தி
நறை[2] மல ரறுகு[3] சுண்ண[4] நறும்பொரி பலவும் வீசி
யுறைமலி கலவைச் சாந்தி னுறுபுன றெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளன் மணமெதிர் கொள்ள
வந்தார். 24

கண்களெண் ணிலாதவேண்டுங் காளை[1] யைக் காண
வென்பார்
பெண்களி லுயர நோற்றாள் சடங்கவி பேதை[2] யென்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்
பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடு வார்கள். 25

ஆண்டகை யருளி னோக்கின் வெள்ளத்து ளலைந்தோ
மென்பார்
தாண்டிய பரியு நம்பாற் றகுதியி னடைந்த தென்பார்
பூண்[2] டயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி யென்பா
ரீண்டிய மடவார் கூட்ட மின்னன விசைப்பச்
சென்றார். 26

வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்றுவெண் சங்க மெங்கும்
பெருமழைக் குல[1] த்தி னார்ப்பப் பரிமிசை யிழிந்து பேணு
மொருமணத் திறத்தி னங்கு நிகழ்ந்தது மொழிவே
னுய்ந்தேன்[2]. 27

---

24. 1 பூரண கும்பம். 2 தேன்.
3 அறுகம்புல். 4 நறும்பொடி.
25. 1 காளை போன்ற வந்தல் ஆகிய நம்பியாரூரர். 2 மகள்.
26. 1 குதிரை. 2 பொற்பணிகள்.
27. 1 மேகக் கூட்டம். 2 பேறுற்றேன்.

வேறு

ஆலும்[1] றை சூழ்கயிலை யின்கணருள் செய்த
சாலுமொழி[2] யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற வெழுந்துமிகு கீழுற வகழ்ந்து
மாலுமய னுக்குமரி யாரொருவர் வந்தார். 28

கண்ணிடை கரந்தகதிர் வெண்பட[1] மெனச்சூழ்
புண்ணிய நுதற்[2] புனித நீறு[3] பொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க[4] 29

காதிலணி கண்டிகை வடிந்தகுழை[1] தாழச்
சோதிமணி மார்பினசை நூலினொடு தோளின்
மீதுபுனை யுத்தரிய[2] வெண்டுகி லுடங்க
வாதப[3] மறைக்குடை யணிக்கரம் விளங்க 30

பண்டி[1] சரி கோவண வுடைப்பழைமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை[2] யார்ந்தழகு கொள்ள
வெண்டுகி லுடன்குசை[3] முடிந்துவிடு வேணு[4] த்
தண்டொருகை கொண்டுகழ றள்ளுநடை[5] கொள்ள 31

---

28. 1 ஒலிக்கும்.
2 திருமலைச்சிறப்பு 27, 28, 29ம் திருப்பாட்டுக்கள் காண்க.

29. 1 வெள்ளிய ஆடை. 2 நெற்றி. 3 தூய திருநீறு. 4 துவள.

30. 1 வளைந்த காதணி. 2 மேலாடை. 3 வெய்யில்.

31. 1 வயிறு. 2 நழுவும் ஆடை. 3 தருப்பைப்புல்.
4 மூங்கில். 5 கால்கள் தள்ளாடும் நடை

மொய்த்துவளர் பேரழகு மூத்தவ டிவேயோ
வத்தகைய மூப்பெனு மதன்படிவ மே[1] யோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
வித்தகைய வேடமென வையமு[2] றவெய்தி 32

வந்துதிரு மாமறை மணத்தொழி லுடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்
றிந்தமொழி கேண்மினெதிர் யாவர்களு மென்றான்
முந்தைமறை யாயிர மொழிந்ததிரு வாயான். 33

என்றுரைசெ யந்தணனை யெண்ணின்மறை யோரு
மன்றல்[1] வினை மங்கல மடங்கல்[2] னை யானு
நன்றுமது நல்வரவு நங்கடவ மென்றே
நின்றதிவ ணீர்மொழிமி னீர்மொழிவ தென்றார். 34

பிஞ்ஞகனு[1] நாவலர் பெருந்தகையை நோக்கி
யென்னிடையு நின்னிடையு நின்றவிசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வி[2] யினை நீமுயறி[3] யென்றான். 35

---

32. 1 உருவம். 2 சந்தேகம்.
34. 1 மணம். 2 சிங்கம்.
35. 1 சடையுடைய சிவனார். 2 திருமணச் சடங்கு.
3 நடத்துவாய்.

நெற்றிவிழி யான்மொழிய நின்றதிக ரில்லா
னுற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேன்
மற்றது முடித்தலதி யான்வதுவை[1] செய்யேன்
முற்றவிது சொல்லுகென வெல்லைமுடி வில்லான் 36

ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ தென்றான்
றேவரையு மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான். 37

வேறு

என்றா னிறையோ[1] னிதுகேட்டவ ரெம்ம ருங்கு
நின்றா ரிருந்தா ரிவனென்னினைந் தான்கொ லென்று
சென்றார் வெகுண்டார்[2] சிரித்தார் திருநாவ லூரர்
நன்றான் மறையோன்மொழி யென்றெதிர் நோக்கி
நக்கார்[3]. 38

நக்கார் முகநோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கு
மிக்கான் மிசையுத்தரி யத்துகி லுங்கி மேற்சென்
றக்காலமுன் றந்தைதன் றந்தையா ளோலை[1] யீதா
லிக்காரியத்தை நீயின்று சிரித்ததென் னேட வென்ன 39

---

36. 1 மணம்.

38. 1 சிவபிரான். 2 சினந்தார். 3 சிரித்தார்.

39. 1 அடிமை ஓலை.

வேறு

மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாற்[1] சிரிப்பு நீங்கி
யாசி[2] லந் தணர்கள் வேறோ ரந்தணர்க் கடிமையாதல்
பேசவின் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோ
னென்றார். 40

பித்தனு மாகப் பின்னும் பேயனு மாக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னா யாதுமற் றவற்றா னானோ
னத்தனைக் கென்னை யொன்று மறிந்திலை யாகி னின்று
வித்தகம்[1] பேச வேண்டா பணிசெய்ய வேண்டு
மென்றான். 41

கண்டதோர் வடிவா லுள்ளங் காதல்செய் துருகா நிற்குங்
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமு முடனே யாக்கு
முண்டொரா ளோலை யென்னு மதனுண்மை யறிவே
னென்று
தொண்டனா ரோலை காட்டு கென்றனர் துணைவனாரை.[1] 42

ஓலைகாட் டென்று நம்பி யுரைக்கநீ யோலை காணற்
பாலையோ[1] வவை[2] முன் காட்டப் பணிசெயற் பாலை[3]
யென்ற
வேலையி னாவ லூரர் வெகுண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் றொடரா தானை வலிந்துபின் றொடர
லுற்றார். 43

---

40. 1 மன இளக்கம். 2 குற்றம்.

41. 1 சாதுரிய வார்த்தை.

42. 1 உயிர்க்குப் பற்றாயவர்.

43. 1 பார்த்தற்கு உரியவனோ. 2 கிராமசபை.
3 வேலை செய்தற்கே உரியவன்.

ஆவணம்[1] பறிக்கச் சென்ற வளவினி லந்தணாளன்
காவணத்[2] திடையே யோடக் கடிதுபின் றொடர்ந்து நம்பி
பூவணத் தவரை[3] யுற்று ரவரலாற் புரங்கள் செற்ற
வேவணச் சிலையி னாரை[4] யார்தொடர்ந் தெட்ட
வல்லார். 44

மறைகளா யினமுன்போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
விறைவனைத் தொடர்ந்து பற்றி யெழுதுமா ளோலை
வாங்கி
யறைகழ ல[1]ண்ண லாளா[2] யந்தணர் செய்த லென்ன
முறையெனக் கிறி யிட்டான் முறையிட்டான் முடிவி
லாதான். 45

அருமறை முறையிட் டின்னு மறிவதற் கரியான் பற்றி
யொருமுறை முறையோ வென்ன வுழைநின்றார்[1] விலக்கி
யிந்தப்
